# கற்றலும் கற்றல் சூழலும்

பாதுகாப்பான கற்றல் சூழல் பற்றிய
கல்விசார் கட்டுரைத் தொகுப்பு



முத்து இராதாகிருஷ்ணன்

# கற்றலும் கற்றல் சூழலும்

முத்து இராதாகிருஷ்ணன்

மதுஷா பதிப்பகம்
2014

| | | |
|---|---|---|
| Title | : | Katralum Katral Soolalum<br>(Learning & Learning Environment) |
| Subject | : | Safety Learning Environment |
| Author | : | Muttucumaru Rathakrishnan, SLEAS<br>B.A(Hons) Dip in Education MEd. |
| First Edition | : | 2014 |
| Printed by | : | Evergreen Printers<br>693, K.K.S Road, Jaffna. |
| Published | : | Mathusha Publication |
| Copy Right | : | Mrs. K.Rathakrishnan |
| Price | : | 400/= |
| நூலின் பெயர் | : | கற்றலும் கற்றல் சூழலும் |
| விடயம் | : | பாதுகாப்பான கற்றல் சூழல் |
| ஆசிரியர் | : | முத்து இராதாகிருஷ்ணன்<br>SLEAS, B.A(Hons), PGDE, MEd. |
| முதற்பதிப்பு | : | 2014 |
| அச்சிட்டோர் | : | எவகிறீன் அச்சகம்<br>693,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். |
| வெளியீடு | : | மதுஷா பதிப்பகம் |
| பதிப்புரிமை | : | திருமதி. கே.இராதாகிருஷ்ணன்<br>கலாசாலை வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். |
| விலை | : | 400/= |
| **ISBN** | **:** | 9789559891741 |

# நுழை வாயிலாக ஓர் உரை

கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் நாட்டின் திரண்டெழுந்து மேலோங்கிய கருத்து வினைப்பாட்டுடன் (Discourse) இணைந்தவை. அந்த கருத்து வினைப்பாடு அரசு, வாழ்க்கை முறை, சமுக நிறுவனங்கள் என்ற அனைத்தையும் தழுவிய அதிகாரத்தின் வடிவமாகிறது.

"அரசும் கல்வியும்" "சமுகமும் கல்வியும்", முதலாம் ஆய்வுகளில் "கருத்து வினைப்பாடு" என்ற கருத்தாக்கம் நவீன கல்விச் சிந்தனைகளின் வழியே முன்வைக்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட கருத்துவினைப்பாட்டினுள் சமுகத்தை வாழச்செய்யும் செயற்பாட்டைக் கருத்து வினைப்பாடுகள் மேற்கொண்ட வண்ணமுள்ளன.

கல்வியின் இலக்குகள், கலைத்திட்டம், கற்பித்தல் முறைமை, கணிப்பீடுகள் என்ற அனைத்தும் நவீன கல்வி ஆய்வுகளில் "கருத்து வினைப்பாடுகள்" என்றே குறிப்பிடப்படுகின்றன. ஒவ்வொரு கருத்து வினைப்பாடும் தத்தமக்குரிய மொழி விளையாட்டைக் (Language Game) கொண்டிருக்கும். எவ்வாறு சொல்லப்படுகின்றது எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பவை மொழி விளையாட்டை அடிப்படையாகக் கொண்டே நிகழ்த்தப்படுகின்றது.

கல்வியும் "பெருங்கதையாடல்களும்" ஒன்றிணைந்து கொள்கின்றன. "பெருங்கதையாடல்" "பெரும் உரையம்" (Metanarrative) என்றும் குறிப்பிடப்படும். ஒரு கருத்து எல்லா நிலவரங்களுக்கும் பொருந்தும் என்றும், ஓர் அணுகு முறை எல்லா மாணவர்களுக்கும் பொருந்தும் என்றும் நாடளாவிய ஒரு பரீட்சை முறை அனைத்து மாணவருக்கும் ஏற்புடையது என்றும் வலியுறுத்தல் "பெருங்கதையாடலாகின்றது".

அவ்வாறான மேற்கவிப்பிலிருந்து கல்விச் செயல் முறையை மீட்டெடுக்க வேண்டியுள்ளது. கல்விச் செயற்பாட்டை பன்மை நிலையில் நோக்குதற்குப் பதிலாக ஒருமை நிலையில் நோக்குதலே எமது சூழலில் தொடர்ந்து நீட்சி கொண்டு வருகின்றது.

கற்பித்தல் நிலையிலும், மாணவர் அணுகு முறையிலும், கணிப்பீட்டிலும் பன்மைத்துவத்தையே (Pluralism) நவீனகல்வி வேண்டி நிற்கின்றது. வாய்ப்பாட்டு நிலையில் கல்விச் செயற்பாட்டை முன்னெடுத்தலும், ஒருமை நிலை அணுகுமுறையையும் ஒரு சாராருக்கே அனுகூலமாகும் மேலாதிக்கத்துடன் இணைந்தது.

மேற்கூறிய கருத்துக்களின் எழுபுலத்தில் பன்மை நிலை நோக்கிய பிரக்ஞை, முத்து இராதாகிருஷ்ணனிடத்து இருத்தல் குறிப்பிடத்தக்கது. ஒரு விதத்தில் அவருக்குரிய அரங்கியல் அனுபவங்கள் மாற்றுவகை முன்னெடுப்புக்களுக்குத் துணை செய்திருக்க முடியும். மனித மனவெழுச்சிகளின் பன்மை நிலைத்தளங்களைக் கண்டறிதலே அரங்கின் நுழை புலமாகின்றது.

அரங்கத்தின் நீட்சியும் கற்றல் கற்பித்தல் மற்றும் சீர்மிய நடவடிக்கைகளின் நீட்சியும் நேர்கோட்டின் ஒன்றிணையக் கூடியவை.

முத்து இராதாகிருஷ்ணனுடைய பன்முகப் பரிமாணங்களும், பன்முக அனுபவங்களும் இந்நூலின் உள்ளடக்கத்தில் ஊடுவிளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. பள்ளிக்கூட ஆசிரியர், புனைக்கதை ஆசிரியர், ஓவியர், நடிகர், நாடக இயக்குனர், சீர்மியர், கல்வியியலாளர், கல்வி நிர்வாகி, செயற்றிட்ட முகாமையாளர் என்ற பல வகிபாகங்களோடு ஊடாடியவர்.

கல்விச் செயல் முறை என்பது புடமிட்ட அனுபவங்களுடன் இணைந்த செயல்முறையாகின்றது. அதன் வழியாக மேலெழும் கல்வியியலாளராக இந்நூல் ஆசிரியர் தேர்ச்சி கொள்கின்றார்.

இந்நூல் நான்கு பகுதிகளைக் கொண்டது. அவலங்களும் அனர்த்தங்களும் ஊடுருவிய நெடுவழியில் வந்த மாணவரைக் குவியப்படுத்தி பகுதி ஒன்று எழுதப்பெற்றுள்ளது. பாதுகாப்பான சூழலின் உருவாக்கம் கற்றலுக்கும் ஆளுமைப்பரிமாணங்களை ஈட்டலுக்குமுரிய அடிப்படை நிபந்தனையாகின்றது. பகுப்பாய்வு நிலையிலும் பிரயோக நிலையிலும் பாதுகாப்பான கற்றல் சூழல் இந்நூலில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கற்றல் தொடர்பான சமகால அறைகூவல்களும் அவற்றை எதிர்கொள்ளும் பண்புசார் முன்னெடுப்புக்களும் பகுதி இரண்டில் இடம்பெற்றுள்ளன.

பகுதி மூன்று, உயிர்பான வகுப்பறையின் உருவாக்கத்திலே தொடங்கி மாணவரின் உளவியலை குவியப்படுத்தும் அகல்விரி பரிமாணங்கள் அனைத்தையும் உள்ளடக்கி நிற்கின்றது. மனப்பதிவிலே தொடங்கும் அந்தப்பகுதி வலுவூட்டலின் பரிமாணங்களை ஒன்றிணைத்து நிற்கின்றது.

தேர்ச்சிமையக்கல்வி, "தர உய்ப்புக்கல்வி"யாக மாறும் சமகாலச் சூழலின் செயற்பாட்டு அலகுகளை உள்ளடக்கி மூன்றாம் பகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது. பகுதி நான்கு அனர்த்தங்களும் வட புலக்கல்வியில் ஏற்பட்ட தாக்கங்களும் பற்றிய விபரிப்பாக அமைந்துள்ளது.

நீண்ட நெடிய போர்ச் சூழலிலும் மோதற் களத்திலும் கல்விச் செயற்பாட்டைத் தவற விடாது முன்னெடுத்த கல்வித் தொகுதியைச் சார்ந்தோர் பதிலீடில்லாக் கணிப்புக்கும் நன்றிக்கும்

உரியவர்கள். புலம் விட்டு அகலாது மக்களோடு மக்களாக நின்று கல்விப்பணியாற்றியோர் கால நீட்சியின் வரலாற்றுப் பதிவுகளுக்கும் பதிலீடில்லா நன்றிகளுக்கும் உரியவர்கள். புலம் சிதறிச் செல்லாது அவர்கள் ஆற்றிய பணியை முத்து இராதாகிருஷ்ணன் தொடர்புபடுத்திக் காட்டியிருப்பது அழிவிலாப்பதிவுக்குரியது.

பேரவலங்களின் நீட்சியில் வடமாகாணத்தில் நிகழ்த்தப்பட்டுவரும் கல்விச் செயற்பாடுகள் பற்றிய புலக்காட்சிப் பதிவுகளோடு இந்நூல் ஆக்கம் பெற்றுள்ளது. அத்தகைய பின்புலத்தில் "அனைத்தும் தழுவிய" (Comprehensive) ஆக்கமாக இந்நூல் முனைப்புப் பெறுகின்றது.

இந்நூலில் இடம் பெற்றுள்ள பதிவுகள் கல்வி வரலாற்றின் மீள்பார்வையிலே நீடித்து தரித்து நிறகக்கூடிய புள்ளிகளாகின்றன. அறிகை நிலையிலும் அனுபவ நிலையிலும் நூலாசிரியரின் எழுத்துப்பணிகள் தொடர வாழ்த்துக்களுடன்...

பேராசிரியர் சபா.ஜெயராசா
20.04.2014

# என்னுரை

சிறார்களுக்கான கல்வி என்பது பாடசாலையுடனும் ஆசிரியருடனும் மாத்திரம் தொடர்புபட்ட ஒரு பந்தம் என்ற பழமையான மரபு ரீதியான அறிவு சார்ந்த நிலை படிப்படியாக மாற்றம் பெற்று இன்று ஒரு சமூகத்தின் எல்லா உறுப்பினர்களும், எல்லா நிறுவனங்களும் கல்வியைக் கிடைக்கச் செய்யவும், பொறுப்பேற்கவுமான புதிய சிந்தனை வாதம் கிளர்ந்துள்ளது. கல்வி எல்லோருக்குமான உரிமை என்ற வாதம் சட்டபூர்வமாக வலுப்பட்டுள்ளது. பாடசாலையில் கற்கும் மாணவரோ, பாடசாலைக்குச் செல்லாமல் வெளியே நிற்கும் மாணவரோ, உடல் ரீதியான குறைபாட்டை அல்லது உள ரீதியான குறைபாட்டைக் கொண்ட மாணவரோ எவராயினும் கற்றல் செயற்பாட்டில் இணைக்கப்படக் கூடியவர். இணைக்கப்பட வேண்டும் என்ற உட்படுத்தல் கல்வி நிலமை கல்விக்கான உரிமையை மேலும் அர்த்தமுள்ளதாக்கியுள்ளது.

இவ்வாறான ஒரு பின்னணியில் கல்வி வாழ்வதற்கான ஒரு நம்பிக்கையாக பரிமாணம் பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் கற்பதற்கான சூழல் பற்றிய சிந்தனை அதிகரித்துள்ளது. பாதுகாப்பான கற்றல் சூழல் என்பது பிள்ளையின் வயதுக்கும் வகுப்பிற்கும் உரிய தேர்ச்சியை அடைவதற்கு அவசியமானதாக இன்று கருத்தில் எடுக்கப்படுகின்றது. வன்முறை, துஷ்பிரயோகம் போன்ற சமூக சீர்கேடுகளாலும் இயற்கை அனர்த்தங்களாலும் பிள்ளை பாதிக்கப்படாமல் இருக்க அல்லது பாதிப்பைக் குறைக்கும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இப்புறக்காரணிகள் பிள்ளையின் கற்றலில் பாதிப்பு செலுத்துவதை எவ்வாறு தவிர்ப்பது? இப்புறக் காரணிகளின் தாக்கத்தை எவ்வாறு வலுவிழக்கச் செய்வது? பாதிப்பின் அளவை குறைத்து இல்லாமல் செய்வது? போன்ற பல விடயங்கள் இன்று கதையாடலுக்குள்ளும், திட்டமிடலுக்குள்ளும் நுழைந்துள்ளன.

பிள்ளையின் உடல் உள ஆரோக்கியத்திற்கு இடையூறில்லாத பாதுகாப்பான சூழல் எவ்வாறு உறுதிப்படுத்தப்படுகிறது என்பது பற்றி பாடசாலைகள் மிகக்கூடியளவில் கருத்தில் எடுக்க வேண்டும். அனர்த்தப் பாதுகாப்புத் திட்டம், இடர் முகாமைத்துவம் போன்ற விடயங்களிலும் தொடர்ச்சியான பாடசாலைப் பராமரிப்பு நிலையை வலுப்படுத்துவதிலும் பாடசாலைகள் அதிகளவில் ஈடுபாடு காட்டுதல் வேண்டும்.

இவைபற்றிய அடிப்படையான கட்டுரைகளை இந்நூல் தாங்கியுள்ளது எனக்கூறலாம். அதுமட்டுமல்லாது அவசரநிலைமைக் காலத்தில் செயற்படுத்தபட்ட பல கற்றல் செயற்பாடுகள் இன்னும் பின்னடைவாக உள்ள சிறார்களுக்குப் பொருத்தப்பாடுடையதாக இருப்பதால் அவைபற்றியும் இந்நூல் ஆராய்ந்துள்ளது.

கற்றல் என்பது சுதந்திரமானது, சுய ஒழுக்கத்தை ஏற்படுத்தும் புத்தாக்க சிந்தனைக்கான வழியாகவும் சிறார்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும். அதுவே பல இடர்களுக்குப் பின்னான இன்றைய நிலையில் எமது மாணவர்களை சர்வதேச தரத்திற்குக் கொண்டு செல்லவும் உதவும்.

2009ம் ஆண்டு வரையான நெருக்கடி சூழ்ந்த காலத்தில் கற்றல் செயற்பாடு என்பது கைவிடப்படாது பெரும் பிரயத்தனங்களுக்கு மத்தியில் நடைமுறைப்படுத்தப்பட்டதில் கல்விப்புலம் சார்ந்த ஆசிரியர்கள், அதிபர்கள், வலய, மாகாண பணிப்பாளர்கள் ஏனைய அதிகாரிகளின் பங்களிப்பு இலேசாக மறக்கப்படக்கூடியதல்ல. உயிரைக் கொடுத்தும் கல்விச் செயற்பாடு சோர்ந்து விடாமல் இருக்கப்பாடுபட்டவர்கள் அவர்கள்.

அக்காலத்திய கற்றல் செயற்பாடுகள் பற்றியும் சில கட்டுரைகளை இந்நூல் தாங்கியுள்ளது. வடமாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் கல்விச் செயற்பாடுகள் பற்றிய ஒரு கண்ணோட்டத்தில் இந்நூல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் காலம் உள்ளவரைப் பேசப்படும் வரலாறாக இருக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. இந்நூல் வெளிவர ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை நல்கிய நண்பர்களுக்கும், எனது குடும்பத்தினருக்கும், அச்சகத்தினருக்கும் நன்றி கூறி நிறைவு செய்யும்.....

முத்து இராதாகிருஷ்ணன்
கலாசாலை வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

# கற்றலும் கற்றல் சூழலும்

## பொருளடக்கம்

பகுதி - I "பாதுகாப்பு"

- பாதுகாப்பான கற்றல் சூழல்
- அனர்த்தங்களில் இருந்து பாடசாலையைப் பாதுகாத்தல்
- பாடசாலை பராமரிப்பும் பாதுகாப்பான கற்றல் சூழலும்
- அனர்த்தங்களும் அவசரகால நிலைமையையும்
- அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட

  பிள்ளைகளின் உளச்சிக்கல்களை கையாழுதல்.
- சமூக இசைவாக்கமே பாதுகாப்பான கற்றல் சூழலைத்

  தரும்.
- சமூக இசைவாக்கமும் அழகியற் கல்வியும்
- மாணவர்களினது ஆளுமையினை

  செழுமைப்படுத்தும் பாடசாலை கலாசாரம்
- அனர்த்தங்களும் அவசரநிலைக் கல்வியும்

பகுதி - II "கற்றல்"

- இழப்பீட்டுக்கல்வி
- பாடசாலை மட்ட இழந்த கல்வியை
  மீட்டெடுக்கும் கல்விச் செயற்பாடு
- செயலட்டை முறை கற்றல் செயற்பாடு
- துரித கற்றல் நிகழ்ச்சித் திட்டம்
- இல்லமையக் கற்றல் செயற்பாடு

## பகுதி - III "மனப்பதிவு"

- உயிர்ப்பான வகுப்பு
- உணர்வுகளை வெளிப்படுத்தும் இடமாக்குதல்
- ஆசிரியரும் ஒரு பங்காளி
- சமூகத்திற்கு உரியதான பாடசாலைச் சூழலை

ஏற்படுத்தல்

- பிள்ளைகளை அறிந்துள்ளோமா?
- பாடசாலை என்பது பெற்றோருக்கும் உரியதே
- பாடசாலை மாணவர்களை கவரவில்லையா?
- தேர்ச்சிமையக்கல்வி
- தேர்ச்சிகளும் குறிகாட்டிகளும்
- உட்படுத்தல் கல்வி
- விடுப்புணர்வை ஏற்படுத்தாத விஞ்ஞான பாடம்
- தெரிந்ததில் இருந்து தெரியாததற்கு
- வாழ்வை வளப்படுத்தும் வாசிப்பு
- அறிவு வெளியின் சுரங்கங்களாக நூல்கள்
- அன்பினால் அசையும் உலகம்

## பகுதி - IV "அனுபவம்"

- அனர்த்தங்களும் வடபுலக்கல்வியில் ஏற்பட்ட தாக்கமும்

## அத்தியாயம் ஒன்று
# பாதுகாப்பு



**அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்**

(அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும் அதுமட்டுமல்லாது பகை கொண்டு எதிர்ப்பவர்களாலும் அழிக்க இயலாத உள்ளரணும் ஆகும்)

# பாதுகாப்பான கற்றல் சூழல்

எமது சமூகத்தின் முன்னேற்றம் என்பது ஆரோக்கியமான மாணவர்களின் கற்றல் சூழலிலும் அதன் மூலம் அவர்கள் பெற்றுக் கொள்ளும் தேர்ச்சிகளிலுமே தங்கியுள்ளது. ஏனெனில் மாணவர்கள் தாம் பெற்றுக் கொள்ள வேண்டிய கற்றல் தேர்ச்சிகளையும், அறிவையும், மனப்பாங்கையும் பாடசாலையிலிருந்தே பெற்றுக் கொள்கின்றனர். அவை ஆசிரியர்களின் கற்பித்தலூடாகவும், மாணவர்கள் பெறும் அனுபவங்களுக்கூடாகவும் சூழலிலிருந்துமே அவர்களைச் சென்றடைகின்றது. இவ்வகையில் சிறந்ததொரு கற்றல் சூழல் நிலவும் இடமாக பாடசாலை அமைதல் வேண்டும்.

சிறந்த கற்றல் சூழல் நிலவும் இடமாகப் பாடசாலை அமைதல் வேண்டும் என்கின்ற போது அத்தகைய கற்றல் சூழலின் அடிப்படையாக அமையவேண்டியவை யாவை?

1. பாதுகாப்பு
2. மகிழ்ச்சியும் சுதந்திரமான செயற்பாடும்
3. கற்றலுக்கான வளப்பகிர்வும் செயற்பாடும்

## 1. பாதுகாப்பு

ஒவ்வொரு பாடசாலைக்கும் அனுப்பப்படுகின்ற சிறார்கள் உடல், உளப் பாதுகாப்பான நிலையில் கற்றலில் பங்குபற்றுகின்றனர் என்பதைப் பாடசாலைகள் உறுதிப்படுத்த வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு பெற்றாரும் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பும் போது பாடசாலை ஆசிரியர்கள், அதிபர் பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பான பொறுப்பை ஏற்கின்றனர் என்ற நம்பிக்கையிலேயே விட்டுச்செல்கின்றனர். எனவே அதன் பொறுப்பு என்பது அதிபர் ஆசிரியர்களையே சாரும்.

**பாதுகாப்பான கற்றல் சூழல் என்பது 2 வகையில் பார்க்கக்கூடியது.**

1. பௌதிக வளங்களுடன் தொடர்புடையதான பாதுகாப்பான கற்றல் சூழல்
2. செயற்பாடுகளுடன் தொடர்புடையதான பாதுகாப்பான கற்றல் சூழல்.

பௌதிக வளங்களுடன் தொடர்புடையதான கற்றல் சூழல் என்பது மாணவர்களுக்கான வகுப்பறைக் கட்டடங்கள், கற்றற்பொருட்கள், ஆய்வுகூடப்பொருட்கள் என்பவற்றிலிருந்து பாடசாலை வளாகத்தில் உள்ள இயற்கையான மரங்கள், நீர் நிலைகள், பாடசாலை அருகில் இருக்கும் மரங்கள், நிலம், துருத்தி வெளித்தெரியும் பாறைகள், நிலக் கீழ் பொந்துக்கள், குகைகள் போன்றவற்றை குறிப்பிட முடியும். பாடசாலை வளாகத்தில் இருக்கக் கூடிய இத்தகைய விடயங்கள் ஏதேனும் மாணவருக்கு ஊறு, அனர்த்தம் விளைவிக்கக் கூடிய வகையில் உள்ளதா என்பது தொடர்பாக அதிபர், ஆசிரியர்களால் அவதானிக்கப்பட்டு பாதுகாப்பு நடிவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அடுத்து மனிதர்களால் அமைப்பாக்கம் செய்யப்பட்ட வகையில் பாடசாலைக் கட்டடங்கள், வெளிச்சுற்றுமதில் , கிணறு, மலசலகூடக் கட்டடங்கள், சூழல், பாடசாலை முகப்பு வளைவு, வாயில்கள், வகுப்பறை ஜன்னல்கள், கதவுகள், மாணவர்களுக்கான தளபாடங்கள், படிக்கட்டுக்கள், கைப்பிடிகள், அழகுபடுத்தும் அழகுப் பொருட்கள், அறிவித்தல் பலகைகள் ஏனைய உபகரணங்கள் என்பவைகள் தொடர்பிலான பாதுகாப்பு நிலமை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். காலத்துக்குக் காலம் பராமரிப்பு, மேற்பார்வை, திருத்தங்கள் என்பவை மேற்கொள்ளப்பட்டு மாணவர்களது உடல், உள பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும்.

அவ்வாறாயின் பாடசாலைக்கு வரும் மாணவர்கள், பாடசாலை வளாகத்தில் உள்ள பௌதீக வளங்கள் தொடர்பாக எவ்வித அச்சுறுத்தலுக்கும் உட்படாது சிறப்பாகச் செயற்படக்கூடிய வகையில் பாதுகாப்பான கற்றல் சூழல் அமைந்திருத்தல் வேண்டும்.

பாடசாலை என்பது வெறும் கட்டடங்கள் நிறைந்த பௌதிகவளங்கள் நிறைந்த இடம் என்று மட்டும் பொருள்பட முடியாது. உண்மையில் அங்கு நிகழக்கூடிய கற்றல் செயற்பாடுகளே பாடசாலை என்பதை எடுத்துக்காட்டும் உண்மையான சுட்டியாகும்.

இவ்வகையில் பாடசாலையின் செயற்பாடுகள் தொடர்பிலான பாதுகாப்பான கற்றல் சூழலை ஆராய்ந்தால் கீழ்வரும் விடயங்கள் முக்கியத்துவப்படுத்தப்படுவதை காணலாம்.

1. ஆசிரியர், அதிபர், மாணவர் இடைத் தொடர்பும் மனப்பாங்கும்.
2. கற்றல் கற்பித்தல் செயற்பாடும் விடுப்புணர்வும்
3. பாடசாலை பராமரிப்பும் கலாசாரமும்
4. முற்பாதுகாப்பு செயற்பாடு

**1. ஆசிரியர், அதிபர், மாணவர் தொடர்பும் மனப்பாங்கும்.**

ஒரு பாடசாலை மாணவரைக் கவரும் இடமாகவும் அவனது கட்டாயக் கல்விப்பருவம் முழுவதையும் பாடசாலைக் கல்வியில் பங்குபற்றி உரிய தேர்ச்சியைப் பெற்று முழு மனிதனாகும் இடமாகவும் ஒழுக்க விழுமியங்களை உணர்ந்து வாழ்வில் செயற்படுத்தும் மனப்பாங்கினைப் பெறும் இடமாகவும் இருத்தல் வேண்டும். இத்தகைய நிலமை ஒரு பாடசாலையில் நிலவவேண்டுமாயின் அம்மாணவன் விருப்புடன் பாடசாலைக்கு வருவதும் கற்றல் செயற்பாட்டில் பூரண விருப்புடன் ஈடுபடுவதும் முக்கியமானதாகும். இதற்கு மாணவனுக்கும் ஆசிரியருக்கும்

அதிபருக்கும் இடையிலான இடைத்தொடர்பு நேரானதாகவும் அவனைக் கல்வியின் பால் செலுத்தக்கூடியதாகவும் அவனுக்குப் பாதுகாப்பையும் நம்பிக்கையையும் அளிக்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் மாணவர்களை கடுமையாக தண்டிக்கின்றனர். இத்தண்டனைகள் பிரம்படித்தண்டனையாகவும் உடல் ரீதியான கடும் உபாதைகளை கொடுக்கக்கூடியதாகவும் இருப்பது அறியப்பட்டுள்ளது. இத்தகைய செயற்பாடுகள் பின்வரும் விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

- மாணவன் பாடசாலைக்கு வராது இடைவிலகும் தன்மை ஏற்படும்.
- எந்நேரமும் ஆசிரியர் அதிபர் தொடர்பில் பயப்பிராந்தியுடன் இருந்து உளரீதியான பாதிப்பைப் பெறுவான்.
- பாட விடயங்களில் கவனம் குறைந்து மந்தநிலமை உள்ளவனாக உரிய தேர்ச்சியைப் பெற முடியாதவனாக ஆகிறான்.
- கல்வி தொடர்பில் வெறுப்பும் வன்மையும் தோன்றி வன்முறைகளில் ஈடுபடும் தன்மையுடையவனாகிறான்.

பாடசாலைக்கு வரும் மாணவன் உரிய வயதிற்கும் வகுப்பிற்கும் உரிய தேர்ச்சியைப் பெறுவதும் அத்தகைய தேர்ச்சிகளை பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்துவதும் ஆசிரியரினதும் பாடசாலையினதும் பெறுப்பாகும்.

எனவே அவனது கற்றல் கற்பித்தல் சூழலும் பாதுகாப்பானதாக அமைய வேண்டும். அதற்குப் பெற்றோரினதும் மாணவரினதும் நம்பிக்கைக்குரியதாக பாடசாலைச் செயற்பாடுகள் அமைவதுடன் மாணவரது மனப்பாங்கில் ஆளுமை செலுத்தக் கூடியதாக ஆசிரியரும் பாடசாலையும் இருத்தல் அவசியமானது.

## 2. கற்றல் கற்பித்தல் செயற்பாடும் விடுப்புணர்வும்

வகுப்பறையில் நிகழும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பாதுகாப்பான கற்றல் சூழலாக மாணவன் மனவிருப்புடன் செயற்படும் சூழலாக அமைதல் வேண்டும். பாடநூல்கள், மாணவன் வகுப்பறையில் அமரும் இடம் தளபாடங்கள் என்பவற்றில் இருந்து அவனது செயற்பாடுகளுக்கு அதிபர், ஆசிரியர், சகமாணவர்கள் அளிக்கும் கணிப்புவரை இது அமையும். வகுப்பில் சில மாணவர்களுக்கு பாடநூல்கள் வழங்கப்படாது விடல், இரு மாணவர்களுக்கு ஒரு நூல் என்ற வகையில் வழங்குதல் சில மாணவர்களுக்கு புதிய நூல்களை வழங்காது பழைய நூல்களை வழங்குதல் என்பவை மாணவர்களுக்கு மனரீதியான பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. தாம் பாரபட்சம் காட்டப்படுகின்றோம் என்ற மனப்புழுக்கம் ஏற்படக்கூடும்.

எனவே எல்லா மாணவர்களுக்கும் சமமான அளவில் எல்லா விடயங்களும் கிடைக்கும் வகையில் பாடசாலை செயற்படல் வேண்டும். இதே போன்று மாணவர்களது இருக்கை சுழற்சி முறையில் எல்லா மாணவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அமைதல் வேண்டும்.

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பாரபட்சம் காட்டப்படுகின்றோம் என்ற உணர்வு மாணவனுக்கு வராத வகையில் செயற்படுவதுடன் உரிய கணிப்பையும் சந்தர்ப்பங்களையும் எல்லா மாணவனுக்கும் வழங்குவதும் பாட விடயங்கள் தொடர்பிலான அவனது விடுப்புணர்வுக்கு முக்கியத்துவம் அளிப்பதும் அவனது கற்றல் சூழலைப் பாதுகாப்பானதாக்கும்.

## 3. பாடசாலைப் பராமரிப்பும் கலாசாரமும்

பாடசாலையில் பாதுகாப்புக்கான முழுமையான பொறுப்பும் முகாமையாளராகிய அதிபருக்கே ஆகும். ஆயினும் அதிபர் மாத்திரம் ஒரு பாடசாலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள இயலாது. ஒவ்வொரு ஆசிரியருக்கும், ஏன் மாணவருக்கும் அதன் பொறுப்பு உணர்த்தப்பட்டு ஒவ்வொருவரும் சரியான முறையில் செயற்படுத்தல் வேண்டும், செயற்பட வழிப்படுத்தல் வேண்டும்.

ஒவ்வொரு மாணவனும் பாடசாலை எமது என்ற சிந்தனையில் வளர்க்கப்பட வேண்டும், தனக்கு உடமையான பொருட்களில் எவ்வளவு அக்கறையும் அவதானமும் இருக்குமோ அவ்வாறான அக்கறையும் அவதானமும், பொறுப்பும் பாடசாலையில் ஏற்படும் வகையில் ஆரம்பப்பிரிவில் குறித்த மாணவன் பாடசாலைக்குச் சேர்ந்த நாள் முதலாய் ஏற்படுத்தப்படும் வகையில் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

உதாரணமாக பாடசாலை வளவில் வெளியே வெயிலில் காணப்படும் ஒரு தளபாடத்தைப் பொறுப்புடன் எடுத்து வகுப்பறையில் வைத்துச் செல்லுகின்ற பொறுப்பு மாணவனுக்கு வேண்டும். இத்தகைய நிலை வருவதற்கு ஆசிரியரும் மாணவர் பின்பற்றக் கூடிய முன்மாதிரியாக இருத்தல் வேண்டும்.

வகுப்பறையினைத் தூய்மையாக வைத்திருத்தல் அதற்கான குழுக்கள் அமைத்தல் அதனை நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல், தளபாடங்களைப் பேணுதல், அலங்கரித்தல் , பாடசாலையின் ஏனைய கட்டடங்களை விசேட அறைகளை தூய்மையாகவும், அழகாகவும் பராமரித்தல்,

பொருட்களை கரிசனத்துடன் பேணுதல், கையாளல் போன்ற பல விடயங்கள் பாடசாலை தொடர்பாக மாணவரின் மனப்பாங்குடன் நெருங்கியதாக உள்ளன.

எனவே அனர்த்தம் தொடர்பானதும், பாதுகாப்பான கற்றல் சூழல் தொடர்பானதுமான விழிப்புணர்வு என்பது சூழல் தொடர்பானதும் சுற்றுப்புற சுத்தம் தொடர்பானதுமான கலாசாரத்தில் இருந்தே கட்டியெழுப்ப வேண்டிய விடயங்கள் ஆகும். எனவே பாடசாலை மட்டத்தில் மாணவர்கள் ஒழுக்கமாகவும், ஒழுங்காகவும் தனக்குரிய கடமைகளை செவ்வனே நேர்த்தியாகச் செய்து முடிக்கும் பண்பு கொண்டவர்களாகவும் உடன் செயற்படக்கூடிய ஆர்வமும் ஆயத்த நிலையும் கொண்டவர்களாகவும் வளர்க்கப்பட வேண்டியது அவசியமாகும். இக் கலாசாரம் ஒவ்வொரு பாடசாலையிலும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

## 4. முற்பாதுகாப்பு செயற்பாடு.

பாடசாலை ஒன்று பாதுகாப்பான கற்றல் சூழல் இல்லாது இருக்குமாயின் அது அனர்த்தம் ஒன்றை எதிர்நோக்கும் நிலையில் இருப்பதாகவே கருதுதல் வேண்டும். எனவே எத்தகைய அனர்த்தங்களை எதிர்நோக்க வேண்டிய நிலையில் அப்பாடசாலை உள்ளது என்பது முதலில் அளவிடப்படல் வேண்டும். இயற்கையான அனர்த்தங்களா, அல்லது செயற்கையான மனிதனால் அமைப்பாக்கம் செய்யப்பட்ட பௌதீக சூழலினால் ஏற்படக் கூடிய அனர்த்தங்களா? என்பது பற்றி கலந்துரையாடப்பட வேண்டும். இவ்வாறான கலந்துரையாடல்களின் முடிவில் பாடசாலை மட்ட அனர்த்த முற்பாதுகாப்பு திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

பாடசாலை அனர்த்த முற்பாதுகாப்புத் திட்டம் என்பது பாடசாலை ஒன்றின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் இணைந்து தமது பாடசாலையின் பௌதீக, மனித, ஏனைய வளங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் எவ்விதமான அனர்த்தங்களும் பாதிப்பை ஏற்படுத்தி விடாது, அல்லது பாதிப்பை இயன்றளவில் குறைப்பதற்கான பாதுகாப்புத் திட்டத்தை ஏற்படுத்தல், அதனை அடியொன்றி அனர்த்த நேரங்களில் செயற்படல், அதுபற்றிய சிந்தனையை எல்லா மட்டங்களிலும், சமூகத்திலும் ஏற்படுத்தல் என்பதாக குறிப்பிட முடியும்.

இத்தகைய ஒரு முற்பாதுகாப்புச் செயற்பாடு நடைமுறையில் சிறப்பாக இருக்க வேண்டும். இவ்விடயம் சாா்ந்து எல்லா மாணவருக்கும், பாடசாலை சமூகத்தினருக்கும் ஆசிரியர்களுக்கும் விழிப்புணர்வு தேவை. எனவே பாடசாலை மட்ட சலந்துரையாடல்கள், பாடசாலைக் கூட்டங்கள், அதிபர், ஆசிரியர், மாணவர் சந்திப்புக்கள் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு பல மட்டத்திலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். அதன் பின்னர் பாடசாலை மட்ட அனர்த்தப் பாதுகாப்புக் குழு அமைக்கப்படல் வேண்டும். இக்குழு ஒழுங்காகக்கூடி பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் செயற்படுதல் வேண்டும். அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய விடயங்கள் தொடர்பில் கருத்தில் எடுத்து பின்வரும் விடயங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1. பாடசாலை மட்ட அனர்த்த பாதுகாப்புத் திட்டம்
2. அனைத்து அனர்த்தங்களையும் வரைபடமாக்கி பட்டியல்படுத்தல்
3. ஆபத்துக்களுக்கான வாய்ப்புக்களை வரைபடமாக்கி பட்டியல்படுத்தல்.
4. அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்கான வழிகாட்டல் குறிப்புக்கள்.
5. தேவையான விடயங்கள் தொடர்பில் பாவனைப் பயிற்சிகள் மேற்கொள்ளல்.
6. அனர்த்த கால வெளியேற்றுகைத் திட்டம்.

## அனர்த்தங்களிலிருந்து பாடசாலையைப் பாதுகாத்தல்.

இன்றைய பாடசாலைகள் பண்டைய முறையிலான குருகுலக் கல்வி போலல்லாது அமைப்பாக்கம் செய்யப்பட்ட நிறுவன முறையிலான பெரும் அமைப்பாக மாற்றமடைந்துள்ளது. கற்றல், கற்பித்தல் செயற்பாடு உயர் மட்ட கல்வி செயற்பாடுகளாக கற்றல்சார் உபகரணங்கள், தொழில்நுட்பம், இலத்திரணியல் சாதனங்கள், ஆய்வுகூடங்கள், செயற்பாடுகள், வகுப்பறைக் கட்டடங்கள் என பௌதிக காரணிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டதாகவே வளர்ச்சியடைந்துள்ளது. இத்தகைய பாடசாலைக்குரியதான அனைத்து பௌதிக வளங்களையும் ஆளணி வளங்களையும் இயற்கையினாலோ அல்லது மனித செயற்பாடுகளினாலோ ஏற்படக் கூடிய இடர்கள் அனர்த்தங்களிலிருந்து பாதுகாத்து தரமான பாதுகாப்பான கல்விச் செயற்பாட்டை மேற்கொள்வது அவசியமானதாகும். அனர்த்தங்களிலிருந்து பாடசாலைகளைப் பாதுகாத்தல் என்ற வரைவிலக்கணம் இதனையே விபரிக்கின்றது.

-பாடசாலைகள், ஆரம்ப பாடசாலைகள், இடைநிலை பாடசாலைகள் என என இரண்டு வகையானதாக, நான்கு பிரிவுகளாக உள்ளன.

* 1 AB
* 1 C
* TYP 11
* TYP 111

இப்பாடசாலைகளில் மாணவர்கள் 5 வயது தொடக்கம் 14 வயது வரையான கட்டாயக்கல்வி பருவத்தினராகவும் அதன்மேல் 18 வயது வரையான உயர் வகுப்பு மாணவர்களாகவும் உள்ளனர். பாடசாலைகளில் மாணவர்கள்

செறிவாகக் காணப்படுவதால் ஏதேனும் அனர்த்தம் நிகழுமானால் அதிகளவில் மாணவர்கள் பாதிப்படையக் கூடிய நிலமை காணப்படுகின்றது. எனவே பாடசாலைகள் உயிர், உடல், உள, பௌதீக இழப்புக்கள் நேராமல் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துவது முக்கியமானதாகும்.

பாடசாலைகள் சமூகத்தின் மத்தியில் இருக்கும் ஒரு சமூக நிறுவனமாக இருப்பதால் சமூக மட்டத்தில் மனிதர்கள் ஒருங்கிணையவும், பாதுகாப்பு பெறுவதற்குமான ஒரு பாதுகாப்பான இடம் என்பதாக பாடசாலை அடையாளப் படுத்தப்படுவதுடன் கீழ்வரும் விடயங்களில் கவனிக் கப்படுகின்றது.

* பாடசாலை மாணவர்களுக்கூடாக அனர்த்தங்கள் பற்றிய விடய அறிவு, விழிப்புணர்வு, இலகுவாகப் பெற்றோருக்கும், சமூகத்திற்கும் சென்றடையக்கூடியதாக இருத்தல்.

* ஒவ்வொரு சமூகத்திலும் குறிப்பிடத்தக்க வீதத்தில் பள்ளிச் சிறார்களும் ஆசிரியர்களும் இருத்தல் உதாரணமாக வடமாகாணத்தில் 6 இலட்சம் மக்களும் 252000 மாணவர்களும் 14000 ஆசிரியர்களும் உள்ளனர்.

* பாடசாலையே விழிப்புணர்விற்கான களம் ஆகும். பாடசாலையில் கற்பிக்கப்படும் ஒரு அலகு நூற்றுக்கு மேற்பட்டோரை அழிவில் இருந்து பாதுகாக்கும் எனலாம்.

* பொதுவாக கடந்த கால வரலாறுகள் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான புள்ளி விபரங்கள் வெளிப்படுத்தும் செய்தி அனர்த்தங்களில் அதிகளவு பாதிப்பை பாடசாலை சிறுவர்களும் ஆசிரியர்களுமே பெற்றுள்ளமை.

இத்தகைய நிலமையின் அடிப்படையில் உலகின் பல நாடுகளிலும் பாடசாலைகள் அனர்த்தங்களில் இருந்து பாதுகாக்கப்படுதல் வேண்டும். பாடசாலை பாதுகாப்பான சூழல் கொண்டதாக நிலவவேண்டும் என்ற சிந்தனை வலியுறுத்தப்படுகிறது. ஒவ்வொரு நாடும் தமது பௌதீக, அரசியல், சமூக சூழலில் எதிர் கொள்ளக் கூடிய அனர்த்தம் தொடர்பில் முக்கியத்துவம் கொடுத்து அனர்த்த பாதுகாப்பு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவர்.

தென்கிழக்காசிய நாடுகளான ஜப்பான், இந்தோனேசியா, சுமாத்ரா போன்றவை அடிக்கடி நிலநடுக்கம், எரிமலை, சுனாமி போன்ற அனர்த்தங்களுக்கு முகங் கொடுக்கின்றன. வட அமெரிக்கா, ஐரோப்பா என்பவை பனிப்புயல், சூறாவளி என்பவற்றால் அடிக்கடி பாதிப்பை எதிர்கொள்கின்றன.

தெற்காசிய நாடுகளான இலங்கை, இந்தியா போன்றவை வெப்ப வலயத்தில் இருப்பதால் வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, சூறாவளி, வறட்சி என்பவற்றுடன் சுனாமியையும் எதிர்கொள்கின்றன. இவ்வாறான ஒரு பின்னணியில் எதிர்கொள்ள வேண்டிய அனர்த்தங்கள் அதனை எதிர்கொள்ளத்தக்கதான முகாமைத்துவம், அதற்கான அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்புக்கள் என்பவை பற்றிய அறிவும் விழிப்புணர்வும் சமூகத்தினருக்குத் தேவையானதாகும். அதுவும் பாடசாலைகளுக்கூடாக சமூகத்திற்கு வெளிப்படுத்தவும், மாணவர்களுக்கு அனர்த்த பாதுகாப்பு நிலை கலாசாரத்தை ஏற்படுத்துவதும் முக்கியமானதாகும்.

## பாடசாலைப் பராமரிப்பும் பாதுகாப்பான கற்றல் சூழலும்.

ஒரு பாடசாலை அதன் உயரிய நோக்கங்களை நிறைவு செய்யும் வகையில் மாணவர்களுக்கு சிறந்த ஒரு வாழ்வுக்கான அடித்தளத்தை வழங்கும் வகையில் மகிழ்வையும், பாதுகாப்பையும், அழகையும், சுத்தத்தையும் கொண்டதாகத் திகழ வேண்டும். தரம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

பாடசாலையின் கட்டடங்கள், தளபாடங்கள், உபகரணங்கள் ஆகியவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலத்தை நீடிப்பதாகவும், தரத்தை பேணுவதாகவும் இருப்பதற்கு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் இணைந்து பாடசாலை பராமரிப்புத்திட்டம் ஒன்றை செயற்படுத்துதல் அவசியமானதாகும். இத்தகைய பராமரிப்புத் திட்டம் பாடசாலையின் வருடாந்த அமுலாக்கத்திட்டத்துடன் இணைந்ததாக இருத்தல் வேண்டும். இத்திட்டத்தில் பாடசாலையில் பராமரிக்கப்பட வேண்டிய கட்டடங்கள், வசதிகள் இனங்காணப்பட்டு முன்னுரிமை ஒழுங்கில் நிரற்படுத்தப்படல் வேண்டும். இவ்வகையில் அடிப்படையில் நான்கு அம்சங்கள் முக்கியமானவை.

1. பராமரிப்புக் குழுவை உருவாக்கல்
2. பராமரிப்புத் திட்டத்தை தயாரித்தல்
3. நடைமுறைப்படுத்தல்
4. கண்காணித்தல்

இவ் அடிப்படையில் பாடசாலையொன்றின் பராமரிப்புக்கான வசதிகள் அடையாளம் காணப்படல் வேண்டும்.

1. பாடசாலைக் கட்டடத்தொகுதி.
   - அத்திவாரம் 1 வேலி / விளையாட்டு மைதானம் / தோட்டம்
   - வெளிச்சுவர் / உட்சுவர் / மதில் / கொங்றீட் தூண்கள்
   - கதவுகள் / உள்ளகக் கதவுகள் / வெளிக்கேற்
   - நிலைகள்

- ஜன்னல்கள் / கண்ணாடிகள்
- திறப்புக்கள்
- கூரை / சீலிங்
- தரை / படிக்கட்டு

2. தளபாடங்களும் உபகரணங்களும்
   - கதிரை /மேசை / ஸ்ரூல் / அலுமாரி
   - கற்பித்தல் உபகரணங்கள் / கற்றல் உபகரணங்கள் / இசைக்கருவிகள் / விளையாட்டு உபகரணங்கள் / கணனி
   - கரும்பலகை / ஆய்வுகூட உபகரணங்கள்
   - மின்சார உபகரணங்கள்

3. வழங்கல் சேவைகள்
   - வடிகால் அமைப்பு / நீர் குழாய்கள் / கிணறு / நீர்தாங்கி
   - மலசல கூடங்கள்
   - கை கழுவும் தொட்டிகள்
   - குடிநீர் வசதிகள்

4. மின் விநியோகமும் முறைமையும்
   - மின் சுற்றும் மின் தடைகளும்
   - மின் திறப்பிடங்களும் ஆளிகளும்
   - உள்ளக இணைப்புக்கள்
   - வெளியக மின் இணைப்புக்கள்
   - பிரதான மின் பெட்டி

5. கழிவகற்றல்
   - தேங்கிய நீரை அகற்றல்
   - குப்பை கூழங்களை அகற்றுதல் / எரித்தல்
   - மீள் பாவனை

மேற்படி விடயங்கள் தொடர்பில் ஒவ்வொரு பாடசாலையும் சிறப்பான முறையில் பராமரிப்பு செயற்பாட்டை மேற்கொள்வதன் மூலம் மாணவர்களுக்கு பாதுகாப்பான கற்றல் சூழலை ஏற்படுத்த முடியும்.

## இன்று பாடசாலைகளில் பொதுவாகக் கவனத்தில் எடுக்கவேண்டிய பராமரிப்புக்கு உட்படுத்தக்கூடிய சில விடயங்கள் பற்றி விரிவாக நோக்கினால்

### 1. பாடசாலைகளில் பிரதான வாயில்களில் பொருத்தப் பட்டிருக்கும் இரும்பிலான வளைவுகள்.

பொதுவாக பாடசாலை வாயில்களில் பாடசாலைப் பெயர் பொறித்த இரும்பிலான வளைவுகள் பொருத்தப்பட்டு காணப்படுகின்றன. இன்று இந்த வளைவுகள் சீமெந்திலான அலங்கார வளைவுகளாக மாற்றப்பட்டு வருவதைக் காணலாம். இவ்வாறான வளைவுகள் துருப்பிடித்து பாரம் தாங்காது முறிந்து விழுந்த பல சந்தர்ப்பங்களை நாம் அறிந்துள்ளோம்.

சரியான முறையில் அவை கண்காணிக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு ஒரு அனர்த்தத்தை ஏற்படுத்திவிடாது தடுத்தல் வேண்டும். குறைந்த செலவில் மிக விரைவாக அமைக்கப்படும், அல்லது அத்திவாரம் சரியாக இல்லாத அல்லது உரிய இரும்புக்கம்பிகள் வைக்கப்படாத வாயில் தூண்கள் இலகுவில் பாறி விழுந்து பெரும் அனர்த்தத்தை ஏற்படுத்திவிடக் கூடியன.

2012 ஆம் வருடம் வறணியில் உள்ள பாடசாலை ஒன்றின் பிரதான வாயில் தூண், இரும்பு கேற்றுடன் பெயர்ந்து வீழ்ந்தமையினால் அநியாயமாக சிறுவன் ஒருவனின் உயிர் காவுகொள்ளப்பட்டமையும் இங்கு கவனிக்கத்தக்கது.

### 2. பாடசாலை பிரதான வாயில்களை உடனடியாகத் திறக்க முடியாது போடப்படும் பாரிய பூட்டுக்கள்.

பாடசாலை பிரதான வாயில்களை பாடசாலை ஆரம்பமானதும் பூட்டுக்கள் கொண்டு பூட்டிவிடும் பழக்கம் சில

பாடசாலைகளில் பின்பற்றப்படுகின்றது. இது மிகவும் ஆபத்தானது ஏதேனும் ஒரு தீ விபத்து அன்றில் வேறேதேனும் அனர்த்தம் பாடசாலையில் நிகழும் பட்சத்தில் மாணவர்கள் வெளியேற இது தடையாகி அனர்த்தம் ஏற்பட வாய்ப்பு ஏற்படும். வாயில் கதவு பூட்டப்பட்டால் அருகிலேயே பாடசாலை வாயில் காவலாளி அங்கு இருத்தல் வேண்டும். அத்தகைய காவலாளி வாயிலில் இருக்கும் பட்சத்தில் பூட்டுப்போட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படாது.

**3. பிரதான வாயில்களில் ஒடுங்கிய பாதைகளை அமைத்தல்**

பாடசாலைகள் தமது வாயில்களில் ஒடுங்கிய பாதைகளை அமைத்து இரு பக்கங்களிலும் அரைத்தூண்களோ கற்களோ வைத்து அப்பகுதியில் பூந்தோட்டம் அமைத்து அழகுபடுத்துவது வழக்கம். பாடசாலைக்கு இது அழகைக் கொடுத்தாலும் பாதை ஒடுங்கியதாகக் அமைவதால் பாடசாலையை விட்டு மாணவர்கள் வெளியேறும் போது தள்ளுப்பட்டு தடக்குப்பட்டு பக்கத்துத் தூண்களில் அல்லது கற்களில் விழக்கூடிய ஏது நிலை காணப்படுகின்றது.

இவ்வாறான பாதைகளில் பல மாணவர்கள் விழுந்து மண்டையை உடைத்துக் கொண்ட உதாரணங்கள் உள்ளன. எனவே மாணவர்கள் சென்று வரக்கூடியதாக பாதை விசாலமானதாக அமைக்கப்படுவதும் கவனிக்க வேண்டிய விடயமாகும்.

**4. வெளியேறும், உட்செல்லும் கதவுப்படிகள்**


இன்று பல பாடசாலைகள் சாதாரண தளக்கட்டிடங்கள் மாத்திரமல்லாது இரண்டு, மூன்று அடுக்குகள் கொண்ட மாடிக் கட்டடங்களை கொண்டவையாக உள்ளன. இதனால் இக்கட்டடங்கள் மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய ஏது நிலைகள் எதுவுமற்றதாகவும், பாதுகாப்பானதாகவும்

இருப்பதை மிக்ககூடியளவு அக்கறையுடன் உறுதிப்படுத்தல் வேண்டும். அதுமட்டுமல்லாது பல பாடசாலைகளில் மாணவர்களது ஒழுங்கைப் பேணுகின்றோம், அல்லது பேணுவதற்காக என ஒரு வாயிலையே ஏறுவதற்கும் இறங்குவதற்கும் பாவிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. மற்றைய வாயில் பூட்டப்பட்டிருப்பதும் அவசர நிலமையொன்றில் வெளியேறுவதற்கு இயலாத வகையில் இருப்பதும் கூட அவதானிக்கப்பட்டுள்ளது.

இது மிகவும் பிழையானதும் பிள்ளைகளுக்கு அனர்த்தம் ஒன்றின் போது அதிக பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாகும். எனவே பாடசாலைகள் இவ்விடயத்தில் கூடிய கவனம் எடுத்து வாயில் படிக்கதவுகள் எவ்வேளையும் சென்று வரக்கூடிய நிலையில் திறந்து வைப்பதுடன் சரியான பாடசாலை கட்டுப்பாட்டை (Discipline) பேணுவதற்கூடாகவே மாணவர்களின் ஒழுங்கையும், பாடசாலைக் கலாசாரத்தையும் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.


உதாரணமாக 2ம், 3ம் மாடிகளில் ஏதேனும் ஒரு தீ விபத்து ஏற்படும் பட்சத்தில் பூட்டப்பட்ட மாடிக்கதவுகள் மாணவர்கள் உடனடியாக வெளியேறுவதற்கு பெரும் தடையாகவும் அதனால் பெரும் அனர்த்தம் ஏற்பட வழி வகுக்கவும் கூடும். தமிழ் நாட்டில் கும்பகோணம் என்ற இடத்தில் ஒரு பாடசாலையில் இத்தகைய தீ விபத்து ஏற்பட்டு மாணவர்கள் வெளியேற வழியில்லாதமையால் என்பதுக்கும் அதிகமான சின்னஞ்சிறார்கள் உயிரோடு கருகி மாண்ட விபத்தை யாரும் மறக்க முடியாது.

**அனர்த்த ஏது நிலை – 1**




**அபாய நிலையில் காணப்படும் பாடசாலை முகப்பு வளைவு**

**அனர்த்த ஏது நிலை – 2**




**அபாய நிலையில் காணப்படும் பாடசாலை வாயில் தூண், மற்றும் மதில்கள்**

## அனர்த்த ஏது நிலை – 3



வகுப்பறை மேல் தளத்தில் காணப்படும் குழவிக்கூடு

## அனர்த்த ஏது நிலை – 4



வெடிப்புக்களோடு காரை பெயர்ந்து காணப்படும் வகுப்பறைக் கட்டடம்.

**5. மின்சாரத்துடன் தொடர்புடைய பொருட்கள் தொடர்பில் காணப்படும் அசிரத்தை**

தற்போதைய நிலையில் கல்விச்செயற்பாட்டில் நவீன இலத்திரனியல் மற்றும் டிஜிற்றல் பொருட்களின் பயன்பாடு மிக அதிகளவில் இருப்பதைக் காணலாம். கணனி, ஓவர்கெட் புரொஜெக்டர், Multimedia Projector, டி.வி, றேடியோ மற்றும் மனையியல் விஞ்ஞானம், விஞ்ஞானம் தொழில்நுட்ப பாடங்கள் என்பவற்றுடன் தொடர்பான பொருட்கள் என பலவகையான பொருட்கள் மின்சாரத்தில் இயங்கும் வகையில் பாவிக்கப்படுவதை நாங்கள் அறிந்துள்ளோம். இது இன்றைய நவீன யுகத்தில் அடிப்படைத் தேவையாகவும் உள்ளது.


ஆயினும் இத்தகைய மின்சாரத்தின் உதவியுடன் இயங்கும் பொருட்கள் தொடர்பில் பல பாடசாலைகளில் போதியளவு அக்கறையும் பாதுகாப்பு ஒழுங்கும் காணப்படவில்லை. பல இடங்களில் மிக பழைய முறையிலான மின் இணைப்பு, வயறிங் மற்றும் உபகரணங்களே பாவிக்கப்படுகின்றன. மின்சார ஒழுக்கு ஏற்படுமிடத்து உடனடியாக மின்தடை ஏற்படும் வகையில் கட்டமைப்பு ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டிருத்தல் மிகவும் அவசியமானதாகும்.

வகுப்பறையில் பொருத்தப்பட்டிருக்கும் மின்விளக்குகள் விசிறிகள் என்பவை சரியான முறையில் பொருத்தப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதுடன் தொடர்ச்சியான பராமரிப்பும் அதற்கேற்ற அவதானிப்புக் குழுவும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். சரியாகப் பொருத்தப்படாத மின்சார விசிறிகள் கழன்று விழுந்து படுகாயத்தை விளைவித்த அனர்த்தங்கள் உதாரணங்களாகவும் எமக்குப் படிப்பினை தருவனவாகவும் அமைந்திருக்கின்றன.

அதுமட்டுமல்லாது வகுப்பறையில் மின்சார ஆழிகள் சரியாகப் பொருத்தப்படாதிருந்து அதன் மூலம் மின்னொழுக்கு ஏற்படவும் வாய்ப்பு உண்டு.

பாதுகாப்பு கவசம் அற்ற மின்சார கம்பிகளின் மூலம் மின்னொழுக்கும் மாணவர்களக்கு பாதிப்பு ஏற்படும் வாய்ப்பும் உள்ளது. எனவே இவை யாவும் பாடசாலையில் அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் மத்தியில் விழிப்புணர்வையும் தொடர்ச்சியான அவதானிப்பையும், பராமரிப்பையும் வைத்திருத்தல் வேண்டும் என்ற கரிசனையையும் ஏற்படுத்தல் வேண்டும்.

மேற்படி விடயங்கள் ஒவ்வொரு பாடசாலையிலும் கவனத்தில் எடுக்கப்பட்டு அனர்த்தப் பாதுகாப்பு நிலமை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். பாதுகாப்பான கற்றல் சூழல் நிலவும் இடமாக பாடசாலை திகழ்வதற்கு இது மிகவும் முக்கியமாகும்.




**அவசர நிலைக் கல்விக்கான INEE தர நிர்ணயம்**

## அனர்த்தங்களும் அவசரகால நிலைமையும் கல்வியும்

இயற்கையாக ஏற்படும் அனர்த்தங்களாலும், மனிதசெயற்பாடுகளால் தோன்றும் அனர்த்தங்களாலும் இயல்பு வாழ்க்கை குழம்பி அவசரகால நிலைமைகள் ஏற்படுகின்றன. இவ்வவசர கால நிலைமைகளுக்கு நாம் முன்னேற்பாடாக முகம் கொடுக்க தயார்நிலையில் இல்லாது இருக்கும் சந்தர்ப்பங்களில் பொருளாதார, சமூக, பாரம்பரியம் கல்வி போன்றவை தொடர்பில் பாதிக்கப்பட்டு நலிவைப் பெறுகின்றோம். இவ்வகை அனர்த்தங்களால் பல்வேறு நெருக்கீடுகளுக்கும் (stress) முகம் கொடுக்கின்றோம்.

இதைத்தவிர ஏது நடந்தாலும் நடக்கட்டும் என்ற மௌன எழுகைச் சூழமைவினை (silent Emergency situation) பேண முற்படுகின்றோம். இவ்வாறான விடயங்கள் ஒரு சமூகத்தை மிக அடிநிலையில் தள்ளிவிடும். அனர்த்தங்கள் நிகழ்ந்த பல நாடுகள் இத்தகைய நிலைமைகளை அனுபவித்துள்ளன. ஆயினும் இந்நிலைமையில் இருந்து மீண்டு வருவதற்கான முயற்சியின் வெற்றி இன்று அந்நாடுகளை உலக அரங்கில் உயர்த்திவைத்துள்ளன.

2ம் உலகப்போரில் பெரும் பாதிப்பை பெற்ற மேற்கு, கிழக்கு ஐரோப்பிய நாடுகள், குறிப்பாக ஜேர்மனி, ஜப்பான் போன்ற நாடுகள் இன்று மீள் எழுச்சி பெற்ற நாடுகளாக திகழ்கின்றன. எனவே எதிர்கொள்ளும் அனர்த்தங்களாலும், அவசரகால நிலைமைகளாலும் சோர்ந்து விடாமல் எதிர்கொண்டு மீண்டெழுவதற்கு தயாராவதே சிறந்த வழியாகும். இவ்வாறான வாழ்க்கை சூழமைவை மீட்டெடுப்பதற்கு கல்வியே அடிப்படையான விடயமாக வரும். எத்தகைய ஒரு அவசர நிலைமையிலும் கல்விச் செயற்பாடுகளை முன்கொண்டு செல்வது என்பது சமூக மீட்சிக்கான குறிகாட்டியாக அமையும்.

இடர்நிகழ்ந்த ஒரு பிரதேசத்தில் மாணவர்கள் எங்கிருந்தாலும் எத்தகைய சூழலில் இருந்தாலும் அவர்களது உளநெருக்கீடுகளில் இருந்து மீட்டெடுப்பதற்கான ஒன்றாக கல்வி அமையும் எனவே 2000 ஆண்டு டக்காரில் நடைபெற்ற உலகக் கல்விக்கான மாநாட்டில் அனைவருக்கும் கல்வி (EFA) என்ற கருப்பொருளுக்கூடாக அனர்த்தங்களால் மாணவர்களது கல்வி பாதிக்கப்படக்கூடாது. அவர்கள் எச்சூழலில் இருந்தாலும் கல்வி வழங்கப்படுதல் வேண்டும் என்ற முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு அவசரநிலைமைக் கல்வி மேற்கொள்ளப்படும் போது அது அதன் அடிப்படைத் தரத்தை பேணவும் வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. இத்தகைய ஒரு அடிப்படை தரமாக (INEE minimum standards) அவசரநிலைக் கல்விக்கான அமைப்புகளுக்கிடையிலான வலையமைப்பின் ஆகக்குறைந்த தர நிர்ணயம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கைக்கான INEE SL 2013 இறுதி வடிவம் கடந்தவருடம் ஜன் மாதம் மீளமைக்கப்பட்டது. இது ஐ.நா. நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், அரச பிரதிநிதிகள் கல்வியாளர் என பலர் இணைந்து செயற்பட்டதன் விளைவு ஆகும். உலகத்தரத்தில் அவசரநிலைமைகளின் போதும் கல்வி முன்னெடுக்கப்படுவதற்கு INEE தர நிர்ணயம் உதவியாக அமையும்.

அவசர நிலைமைகளின் போது அதிகளவில் பாதிப்பினைப் பெறுபவர்கள் சிறார்களே. ஒப்பீட்டளவில் அனர்த்தம் தொடர்பான உடனடி நெருக்கீடு பெரியவர்களை விட சிறார்களை குறைந்த அளவில் பாதித்தாலும் கல்விதடைப்படல், இயல்பான / சாதாரண செயற்பாடுகள் தடைப்படுவதால் விடுப்புணர்வு முடக்கப்படுவது ஒரு வகையில் நெருக்கீட்டை ஏற்படுத்தும். அது தவிர பொதுவான சில அம்சங்களும் சிறார்களை அதிகளவில் பாதிக்கும் எனக்கூறலாம்.

1) இயற்கை அல்லது மனித செயற்பாட்டால் ஏற்பட்ட அனர்த்தம் ஒன்றின் மூலம் சிறார்களுக்கான உணவு கிடைப்பதில் பாதிப்பு ஏற்படலாம். அதிலும் போஷாக்கான உணவு, குடிநீர், குழந்தைகளுக்கான பால் என்பவை கிடைக்காமல் போகும் போது பாதிப்பு ஏற்படும்.

2) வெள்ளம், மழை, சூறாவளி போன்ற அனர்த்தங்கள் சுனாமி போன்ற அனர்த்தங்களின்பின் பாரியளவில் நோய்கள் சிறார்களை தாக்க இயலும். தொற்று நோய்கள் பரவும் வாய்ப்பு, நோயெதிர்ப்புசக்தி குறைவதால் ஏற்படும்.

3) இடம்பெயர்வு காரணமாகவும், பதட்டம் காரணமாகவும் நித்திரை. ஓய்வு இல்லாத அலைச்சல் காரணமாகவும் விரக்தியும் உளநெருக்கீடும் துன்பமும் ஏற்படலாம்.

4) நேரடியான பாதிப்பு உடல்ரீரியான பாதிப்பு, இழப்பு அல்லது மரணம், அழிவுகளை நேரடியாக பார்வையிட்டமையால் ஏற்படும் அதிர்ச்சி, சிறார்களைப் பாதிக்கலாம்.

5) கல்வி, விளையாட்டு, சாதாரண வாழ்க்கை என்பவை முற்றாகவே இழக்கப்பட்டு நெருக்கீடுகளை கொண்ட மனநிலை ஏற்படும்.

மேற்படி விடயங்கள் பொதுவாக எல்லா மனிதருக்கும் பொருந்துவதாக இருந்தபோதிலும் சிறார்கள் குறிப்பாக பாதிக்கப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே தான் அனர்த்தங்கள் நிகழும் சந்தர்ப்பங்களில் அவசரநிலைமைகளின் போது அதிக முக்கியத்துவம் சிறார்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். அவர்களை அவசர நிலைக் கல்விச் செயற்பாகளுக் கூடாக மீள் நிலைப்படுத்துவதும் முக்கியமானதாகும்.

## அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் உளச்சிக்கல்களை கையாளுதல்

ஒரு அனர்த்தம் நிகழ்கின்ற போது அதன் முழுமையான தாக்கம் சிறார்களையே அதிகம் பாதிக்கின்றது. இயற்கையால் ஏற்படும் அனர்த்தமோ அல்லது யுத்தம் வன்முறை போன்ற மனித செயற்பாட்டால் ஏற்படும் அனர்த்தமோ முதலில் பிள்ளையின் சாதாரண வாழ்வுச் சூழலை குழப்புகின்றது. அனர்த்தத்தின் நேரடித் தாக்கத்தைவிட அனர்த்தம் காரணமாக ஏற்படுகின்ற இடப்பெயர்வு அல்லது பெற்றோரைப் பிரிதல், ஆதரவு அற்ற உணர்ச்சிச் சூழல், குடும்ப அல்லது நண்பர்களது பிரிவு, நிலமையின் பதற்றம், பதகளிப்பு, துன்பம், கழிவிரக்கம் போன்ற உணர்வுகள் சிறார்களிடத்தே உளத்தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

பொதுவாகவே அனர்த்தம் நிகழ்கின்ற சந்தர்ப்பங்களில் சூழலில் உள்ள பொதுமக்கள் அறிவுபூர்வமான செயற்பாடுகளிலும் பார்க்க உணர்வுபூர்வமான செயல்களுக்கு அதிக முக்கியத்தும் கொடுத்து உணர்வுகளை வெளிப்படுத்தி பாதிப்புக்களை வெளிப்படுத்துவர். இதன் காரணமாக அழிவுகள், அவலங்கள் தொடர்பான விளக்கங்கள் எதுவுமில்லாமலேயே சிறார்கள் சூழலுக்கூடாக ஊடுகடத்தப்பட்ட பதட்டத்தாலும் அதிர்ச்சியாலும் உளரீதியிலான நெருக்கீடுகளையும் பாதிப்பையும் பெறுகின்றனர்.

அனர்த்தம், யுத்தம் போன்றவை நிகழ்ந்திருக்கக் கூடிய இடங்களில் வாழுகின்ற சிறுவர்களில் பாரிய உளசமூகத் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை அறிவும் அனுபவமும் மிக்க பல சிறுவர் உளநல நிபுணர்களும், சிறுவர் உளவியலாளர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறான அனர்த்தங்களின் விளைவான உளச்சிக்கல்களை நோக்கும்போது உளத்தாக்கங்களுக்கு உப்பட்ட பிள்ளைகள் காண்பிக்கும் நடத்தைக்கோலங்கள், கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஒன்றிக்க முடியாத தன்மை என்பவை அவர்களை இயல்பு நிலைக்கு கொண்டுவரும் தேவையினையும் அது பற்றிய கரிசனையை ஆசிரியர், மற்றும் சமூக, கல்வியாளர்களிடையே விழிப்புணர்வையும் ஏற்படுத்துதல் வெண்டும்.

**இவ்வாறான பிள்ளைகளிடம் காணப்படக் கூடிய நடத்தைக் கோலங்கள்**

* அனர்த்தத்தின் பின்னர் சமுதாயத் தொடர்புகளில் இருந்து விடுபடுதல், ஒதுங்கியிருக்க முனைவர்.
* விளையாட்டுக்களில் ஈடுபடாமை, உணர்வுகளை வெளிக்காட்டாமல் மௌனமாகவிருத்தல், சிரிக்காதிருத்தல்.
* குற்ற உணர்வு மேலோங்கியதாக, கவலைப்படுபவராகக் காணப்படுதல்.
* எடுத்தற்கெல்லாம் கோபப்படுதல் - உச்சநிலைக் கோபத்தை வெளிப்படுத்துதல்.
* சுகமான தூக்கத்தை தொலைத்திருத்தல். தூங்காது விழித்திருத்தல்.
* பயங்கரமான கனவுகளால் தூக்கத்திலிருந்து எழுந்திருத்தல். படுக்கையினை நனைத்தல்
* உளக்குறைபாடு மேலோங்குதல்
* அனர்த்தத்தின் போதான சம்பவங்ளை மீளவும் மீளவும் நினைத்து சோர்வடைதல்.
* கற்றல் செயற்பாட்டில் கவனம் செலுத்த முடியாது விளைத்திறன் அற்றவராகுதல்.

அனர்த்தத்தின் பின்னரான இக்கோலங்களில் ஒரு சில அல்லது முழுமையாகவோ சிறார்களில் வெளிப்பட்டு அவர்களது உளச்சிக்கலை வெளிப்படுத்தும். இத்தகைய சிறார்களை கையாளுதல் என்பது ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை கருத்திற் கொண்டதான செயற்பாடு எனலாம்.

இப்பிள்ளைகளுக்கு மீண்டும் சாதாரண வாழ்க்கை அனுபவங்களைக் கொடுத்தும் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தியும் விசேடமாக இனங்காணபட்ட விடயங்கள் தொடர்பில் சிகிச்சையளிப்பதும் முக்கியமானதாகும். அதைத் தவிர எல்லாப் பிள்ளைகளுக்குமே பயன்படக்கூடிய வகையில் உளசமூக நலமேம்பாட்டு நடவடிக்கைகளை பாடசாலைகளுக் கூடாக முன்னெடுக்கின்ற போது பிள்ளைகள் இனங்காணப்படவும் அதனால் பயன் ஏற்படவும் கூடும்.

இன்று சிறார்களிடையே அவதானிக்கப்பட்ட உளச்சிக்கல் களுக்கு வெறுமனே இயற்கை அனர்த்தம் அல்லது மனித செயற்பாட்டால் ஏற்பட்ட யுத்தம் மாத்திரம் காரணமல்ல. இன்றைய கல்வியமைப்பும் அதனை சரிவர கையாளத் தெரியாத சமூகமும் கூட காரணமாகின்றன. பரீட்சை நோக்கிலான கல்விச்செயற்பாடு, அடைவுமட்டத்தை உயர்த்துவதை குறியாக கொண்டு செயற்படும் பாடசாலை முகாமைத்துவம். மாற்று முறைகள் தொடர்பில் அறிவற்ற - தடியடித் தண்டனைகளை உபாயமாகக் கருதும் ஆசிரியர் குழாம் என்பவை மாணவர் களிடையே உளச்சிக்கல்களை உருவாக்கி வன்மமான மன உருவாக்கத்தை பிள்ளைகளிடம் ஏற்படுத்துகின்றனர்.

இது தொடர்பில் கல்வித்துறையில் இருக்கின்ற கல்வியியலாளர்கள் கரிசனையாக தீர்மானங்கள் இயற்றி சிறார்களின் தேர்ச்சியை மேம்படுத்த செயற்படுதல் வேண்டும்.

## சமூக இசைவாக்கமே பாதுகாப்பான கற்றச் சூழலைத் தரும்

ஒவ்வொரு பாடசாலையும் மாணவர்களின் ஆற்றல்களை, திறன்களை வெளிப்படுத்தவும், மெருகுபடுத்தவும், பெற்றுக் கொள்ளவும் கூடிய கற்றலுக்கான களங்கள் ஆகும். அங்கு மாணவர்களிடையே நல்ல சமூக இசைவாக்கம் நிகழ்ந்தாலேயே கற்றலுக்கான பாதுகாப்பான சூழல் நிலவும். மாணவரிடையே பரஸ்பர மதிப்பளித்தலும், பொறுப்பேற்றலும் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும். இவ்வாறான புரிந்துணர்வும் இசைவாக்கமும் கற்றல் தொடர்பான குறுங்கால, நீண்டகால நோக்கங்களை நிறைவு செய்து உரிய தேர்ச்சியைப் பெற்று நற்பிரசையாக, ஒழுக்க விழுமியங்களை பின்பற்றும் உத்தமனாக வெளியேற வகை செய்யும்.

பாடசாலையில் மாணவர்களுக்கிடையே கிராமப்புற, நகர்ப்புற சூழலை அடிப்படையாகக் கொண்ட வேறுபாடுகள் நிலவும் இவ்வேறுபாடுகள் இம்மாணவர்களுக்கிடையே முரணான சூழலை ஏற்படுத்தி விடாத வகையில் ஆரோக்கியமான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு இசைவாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இப்பிரதேச வேறுபாடுகளில் காணப்படக்கூடிய ஒத்த தன்மைகள் அல்லது ஒத்த வயதுக்கிடையே ஏற்படக்கூடிய நட்பை ஊக்கிவிக்கக் கூடிய விடயங்கள் அதிகளவில் கருத்தில் எடுக்கப்பட்டு செயற்படுவதற்கு இடமளிக்கப்பட வேண்டும்.

கற்றல் கற்பித்தல் தொடர்பான வகுப்பறைச் செயற்பாடுகள் மட்டுமல்லாது இணைபாடவிதான செயற்பாடுகளிலும், முறையில் கல்விச் செயற்பாடுகளிலும், முறைசாரா கல்விச் செய்பாடுகளிலும் மாணவர்கள் குழுவாகச் செயற்படக்கூடிய வகையில் வசதியளிக்கப்படுதல் வேண்டும். ஒத்து இயங்கும் திறன், மனப்பாங்கு, சகமாணவருக்கு உதவும்

பண்பு, முன்வந்து பொறுப்பேற்கும் தன்மை, விட்டுக் கொடுத்தல், எல்லோருடைய கருத்துக்களையும் கிரகிக்கவும், மதிப்பளிக்கவும் பழகுதல் போன்ற தலைமைத்துவ, சமூக இசைவாக்கல் பண்புகள் மாணவர்களுக்குக் கிடைக்கக் கூடிய வகையில் செயற்பாடுகளை வழங்குதல் வேண்டும். விளையாட்டுச் செயற்பாடுகள், அழகியற் கல்விச் செயற்பாடுகள் போன்றவற்றின் மூலம் இவ்விதமான நன்மைகளை வழங்க அனுபவத்துடன் பெற்றுக் கொள்ள நடவடிக்கை, வசதியளிக்கப்படல் வேண்டும்.

சக மாணவர் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும் என்ற தலைமைத்துவ மனப்பாங்கு, ஒருவருக்கு ஒருவர் உண்மையாக இருத்தல் என்ற நம்பகத் தன்மை பிரச்சினைகளை எதிர் கொள்ளவும், இலகுவாகக் கையாளவும் விடுவிக்கவுமான திறன் நியாய பூர்வமாக தர்சிக்கும், விவாதிக்கும் திறன், தற்துணிவும் தன்நம்பிக்கையும் கொண்ட ஆளுமை என்பவற்றை ஒவ்வொரு மாணவரிடமும் ஏற்படுத்தக் கூடியதாக பாடசாலையில் வசதியளிக்கப்படல் வேண்டும் (Facilition) இத்தகைய ஒரு சூழலில் இயல்பாகவே மாணவர்கள் ஒவ்வொருவரும் சமூக இசைவாக்கம் கொண்டவர்களாக மாறுவதற்கும், செயற்படுவதற்குமான நிலைமை உருவாகும். இதுவே பாதுகாப்பான, ஆரோக்கியமான, மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை வெளிப்படுத்தும்.

கீழ்வரும் விடயங்கள் தொடர்பில் பாடசாலைகள் செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் சமூக இசைவாக்கத்தை ஏற்படுத்தி கற்றலுக்கான சூழலை உறுதிப்படுத்த முடியும்.

1. மாணவர் மன்றச் செயற்பாடுகள்
   மாணவர் மன்றச் செயற்பாடுகளில் சகல மாணவரும் பங்கு பற்றக் கூடிய வகையிலும், சகல இன, மத, மொழிப் பரம்பரியங்கள், பண்பாட்டு விழுமியங்கள் தொடர்பான விடயங்கள் உட்படுத்தப்படக்கூடிய வகையில் முன்னெடுத்தல்.

2. பாடசாலை மட்ட விழாக்கள்
   பாடசாலை மட்டத்தில் சகல மதங்களுக்குமான சமய விழாக்கள், கலை விழாக்கள், பாடசாலை, பெற்றோர் தின விழாக்கள் என்பவற்றை ஒன்றிணைந்து பங்குபற்றக் கூடியதாக நடாத்துதல்.

3. அழகியற்கல்வி தொடர்பான போட்டிகளில் பங்குபற்றல், முகாம்களை நடாத்தல், இசை, நடன, நாடக, ஓவிய கலைகள் தொடர்பான செயற்பாட்டு முகாம்களை நடாத்தும் போது மாணவர்கள் இணைந்து செயற்பட சந்தர்ப்பங்கள் உருவாகும்.

4. பாடவிடயங்கள் தொடர்பான பன் மொழிப் புலமை தொடர்பான முகாம்கள், தினங்களை கொண்டாடுதல், தமிழ்தினம், ஆங்கில தினம், விஞ்ஞான புதிர், கணித வினாவிடை, விவாதப் போட்டி போன்றவை ஆரோக்கியமானவையாகவும் மாணவர்களுக்கு திறன் விருத்தியையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்துபவையாக அமையும்.

5. பாடசாலைக்குள் பாடசாலைக்கு வெளியில் நற் சூழலைக் கருத்திற்கொள்ளும் வகையிலும் சுற்றுச் சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய வகையிலும் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள், இணைந்து சிரமதானங்களை மேற்கொள்ளல்.

6. சகோதர சங்கமம் போன்ற ஏனைய இன, மத, மொழி பேசும் மாணவர்கள், பாடசாலைகள் இணைந்து பரஸ்பர சுற்றுலாக்கள் கல்வியியல் முகாம்கள், கலாசார விழாக்கள் என்பவற்றை மேற்கொள்ளல்.

## சமூக இசைவாக்கமும் அழகியற் கல்வியும்

மனித வாழ்வு என்பது அடிப்படையில் ஒரு முரண்பாடுகளின் கூட்டு அல்லது பிணைப்பு என்பதாகவே ஆழ்ந்து நோக்கப்படுகின்றது. இது மனிதனின் பௌதீக உடல் உறுப்புக்களில் மரபு அணுக்களிலிருந்து அவனது செயற்பாடு அவன் வளரும் சூழல் என எல்லாவற்றிலும் அடையாளம் காணக்கூடிய ஒன்றாகவும் உள்ளது. ஆண், பெண் , இயலுமை, இயலாமை எனத் தொடரும் இம்முரண் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதும் ஒன்றையொன்று ஆளுமைப்படுத்துவதிலும் இயங்கு நிலையைக் காட்டுகிறது. இதுதான் இதில் ஆச்சரியமான விடயம் அதாவது இம்முரண்கள் ஒன்றாகவே இயங்க வேண்டும் அவ்வாறு ஒன்றாகினால் தான் உயிர்ப்பு ஏற்படும்.

மனிதன் வாழும் சூழலை நோக்கினால் கூட மனிதனும் ஏனைய உயிரினங்களும் சூழலால் கட்டுப்படுத்தப்படுகின்றன அல்லது வசப்படுத்தப்படுகின்றன அல்லாவிடின் சூழலை வசப்படுத்த முயலுகின்ற எவ்வாறாயினும் இம் முரண்களின் இணைப்பிலேயே அவனது வாழ்க்கை அமைகின்றது.

இரு வேறு விதமான அல்லது பல்வேறு விதமான பருப்பொருட்கள் தமது தனித்துவத்தை அடையாளப்படுத்தவும், இழந்துவிடாமலும் அதே வேளை ஏனையவற்றின் தனித்துவங்களை ஏற்றுக்கொள்ளவும் இயங்குவதற்கு அனுமதிக்கும் போது தான் இசைவாக்கம் ஏற்படுகின்றது. இயக்கம் ஏற்படுகின்றது. இல்லாவிட்டால் முரண்கள் உச்சம் பெற்று இயங்குவது கடினமாகி விடுகின்றது.

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வின் உட்பொருளை உணர்ந்து வாழ்வாங்கு வாழுவதற்கு அவன் சார்ந்த தொன்மங்கள் / பாரம்பரியங்கள், மரபுகள், விருப்பங்கள்

பூர்த்தியடையவும், அனுசரித்து, பின்பற்றி செல்லவும் கூடிய இடம் அவனுக்கு தேவையாகின்றது இவ்விடம் கிடைப்பது அவனது வாழ்வை அர்த்தமுள்ளதாக்குவதுடன் திருப்திகரமாக உணர்வதற்கும் வழிகோலுகின்றது. அவனது தனித்துவ விடயங்களை செயற்படுத்த இயலாத சூழல் ஏற்படுமிடத்து அது முரணைத் தோற்றிவிப்பதுடன் இசைவாக்கத்தை நிறுத்துகின்றது.

மனித வாழ்வு என்பது தனி மனிதனது வாழ்வு என்பதாக அர்த்தப்படாது. கூட்டான ஒரு குழுமத்தின் வாழ்வாகக் கருதப்படுகின்ற போது பல குழுமங்களுக்கிடையேயான இசைவாக்கம் கருத்தில் எடுக்கப்படுகின்றது. இவ்வகையில் இது சமூக இசைவாக்கமாக கொள்ள முடிகின்றது. இன்னும் ஒரு வகையில் கூறுவதானால் மனிதர்களிடையேயான உணர்வு ரீதியான புரிதல்கள் எனக் கூறலாம்.

இனக் குழுமங்களிடையே உணர்வு ரீதியான புரிதல்களை ஏற்படுத்த வேண்டுமானால் அல்லது ஏற்பட வேண்டுமானால் நேர்சிந்தனை அல்லது ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை (Respect) மதிப்பளிக்கவும் விழுமியங்களைப் பெறவுமான சிந்தனை சுதந்திரம் என்பவை மிக அடிப்படையான பண்புகளாகின்றன. எனவே தான் "பாடசாலைகளில் சிறார்களுக்கு வழங்கப்படும் கல்வியே ஒரு நாட்டினை செதுக்குகின்றது" என்ற கருத்து பிரபல்யம் பெற்றது எனலாம்.

மாணவர்களுக்கிடையே ஒற்றுமையினையும் உணர்வு ரீதியான புரிதல்களையும் ஏற்படுத்த இனம், மதம், மொழி, பொருளாதாரம் சார்ந்த காரணிகள் இடையூறாக இருக்கக்கூடாது. இவற்றைச் சாதுரியமாக கையாளவும் புரிதல் ஏற்படவும் விளையாட்டுக்கள், அழகியற்கலைகள், ஆற்றுகைகள், பன்மொழிப்புலமைத்துவம், புத்தாக்கச் செயற்பாடுகள் என்பனவும் ஒழுக்க விழுமியங்களும் சிறப்பாக துணைபுரியும்.

சமூக இசைவாக்கத்தை ஏற்படுத்துவதில் அல்லது உணர்வு ரீதியான புரிதல்களை ஏற்படுத்துவதில் அழகியல் உணர்வும், ஆற்றுகைக்கலைகளும் மிகச்சரியான தேர்வாகக் கருதப்படும். இசை, நடனம், சித்திரம் போன்ற கலைகள் இயல்பாகவே மன உணர்வுகளுடன் ஒன்றிப்பை ஏற்படுத்தும் கலைகள் ஆகும். சங்கீதத்திலுள்ள இராகங்கள் செவிவளியில் மனதுக்குள் நுழைந்து இரசாயன மாற்றங்களை உடலுக்குள் ஏற்படுத்துபவையாகும். இறுக்கத்தை தளர்த்தவும் மகிழ்வைத் தரவும் உடலில் அதிர்வுகளை ஏற்படுத்தவும் இசை மிக முக்கியமானதாகும். "இசையில் மயங்காத இதயமெது" என சிறப்பாக குறிப்பிடக் கூடிய வகையில் இசை உள்ளது.

இசைக்கக்கூடிய அல்லது பாடக்கூடிய திறன்களைப் பெறுவது என்பதிலும் பார்க்க இசையை மனதுள் நிறுத்தி இரசிக்க கற்றுக் கொள்ளல் என்பதே சமூக இசைவாக்கத்துக்கு உந்து சக்தியாக அமையும். மொழியைக் கடந்த இசை எமது உடலுக்குள் ரிதத்தை, தாளத்தை, கதியை ஏற்படுத்துகின்றது. தமது இசையை இசைக்கவும் போற்றவும் ஏனைய இசையை இரசிக்கவும், மதிக்கவும் கற்றுக் கொள்ளல் என்பது அனுபவ முதிர்ச்சிக் கூடாகவே ஏற்பட முடியும். எனவே பாடசாலைகள் சிறார்களுக்கு இசையைப் பழகுவதற்கான, கேட்டு இரசிப்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்த வேண்டும். பெற்றோர் தமது பிள்ளைகள் தொடர்பில் ஏதாவது ஒரு அழகியற் கலையை கற்கவும் மனதொன்றி பயிலவும் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.

சித்திரம் அல்லது ஓவியக்கலை இயல்பாகவே மனிதர்களிடையே மென்னுணர்வை ஏற்படுத்த வல்லது. அழகு என்ற உணர்வு ஏற்பட இக்கலை உதவுகின்றது. இயற்கை எம்மைச் சுற்றிலுமுள்ள சூழல், காலம், பொருள், உயிரினங்கள் , மனிதர், மனித உடல் என அனைத்திலும் உள்ள உயிர்ப்பு, அழகு கோடுகள் வர்ணஜாலம் என்பவை பற்றிய

உணர்நிலையை யாவரும் உணர்தல் வேண்டும். இரசிக்க வேண்டும். இரசிப்பதற்கான அனுபவம் வழங்கப்பட வேண்டும். உயிர்ப்பின் அல்லது அசைவின் அற்புதத்தை இரசிக்கத் தெரிகின்ற போது அதற்கான பெறுமதியை, மதிப்பை மனம் வழங்க முன்வரும். அதற்குப் பின்னால் உள்ள இறைவனின் படைப்பின் மகிமையை போற்ற முற்படும் இது குறித்த விடயத்தில் இசைவாக்கத்தை ஏற்படுத்தும். உதாரணமாக மொழி கடந்த, இனம்கடந்த, நிலையில் ஒரு ஓவியம் அற்புதமான உணர்வைத் தரமுடியும். அப்பெருமிதம் மனித நேயத்தையும் மதிப்பையும் சமூக இசைவாக்கத்தையும் ஏற்படுத்தும்.

நவீன இன்றைய யுகத்தில் அழகியற் கலைகள் குறித்த ஒரு இனம், மதம், பிராந்தியம் சார்ந்ததாக இல்லாது உலகம் தழுவியதாக பரவத் தொடங்கியிருப்பதும் பயிலத் தொடங்கியிருப்பதும் நல் மாற்றத்தின் அறிகுறியாகும். மேற்கு ஐரோப்பாவிலும், அவுஸ்ரேலியாவிலும் கர்நாடக இசையும், பரத நடனமும் பல்லாயிரம் வெள்ளையின மக்களால் இரசிக்கப்படுவதும், பயிலப்படுவதும் இம்மாற்றத்தின் தொடர்ச்சியே. இதுபோல் தென்னிந்திய திராவிட சிற்பங்களும் ஆலயங்களும் உலகளாவிய சிறந்த கலைக்கருவூலங்களாக மதிக்கப்படுவதும் சமூக இசைவாக்கத்திற்கு அழகியற் கலைகள் எவ்வளவு தூரம் பங்களிப்பைச் செய்கின்றன என்பதற்குச் சான்று பகர்கின்றன.

உலக மனிதன் இனம் கடந்தவனாக, மொழி கடந்தவனாக, மதம் கடந்தவனாக மென்னுணர்வு கொண்ட கலாரசிகனாகவே இருப்பான். அப்போது தான் மனிதத்துவம் உயிர்ப்போடு இயங்கும். நாமும் ஓர் கலை பயில்வோம்.

# மாணவர்களது ஆளுமையினை செழுமைப்படுத்தும் பாடசாலைக் கலாசாரம்

கற்றல் என்னும் விடயமானது நீண்டகாலமாக மனித வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ள ஒரு செயற்பாடாகும். இக்கற்றல் செயற்பாட்டில் எவற்றை நாம் கற்க வேண்டும், எவ்விடயங்களை பிறருடன் பகிர வேண்டும் என்ற வரையறை ஏதுமில்லாது தேவையை தீர்மானிக்கக் கூடிய திறன் இல்லாது இருந்த வரலாறு மாற்றமடைந்த போது உருவான கற்றலுக்கான களமே பாடசாலை. அவ்வவ் சமூகத்துக்கு தேவையான வாழ்வியல் அம்சங்கள், பொருளாதார சிந்தனைகள், அரசியல் சிந்தனைகள், ஒழுக்க விழுமியங்கள் என்பவை கற்றலுக்குள் உள்வாங்கப்பட்டன.

மனித குழுக்கள் பாடசாலைக்கூடாக கற்க வேண்டிய விடயங்களை தீர்மானிக்கும் சக்தியாக சமூக, அரசியல் தலைமைகளும், ஓரளவு கல்வியாளர்களும் உருவெடுத்தனர். மத நிறுவனங்களும் தீர்மான சக்தியாக தாக்கத்தை செலுத்தின. இன்று நாளாந்தம் சமூக அறிவியல், இயற்கை அறிவியல், மனிதப் பண்பியல் போன்றவற்றில் அறிவுப் பெருக்கம் ஏற்பட்டு கல்வியும் கற்றலும் தொடர் செயற்பாடானது, முடிவில்லாதது, நாளாந்தம் புத்தாக்கம் பெறுவது என்ற நிலைக்குள் வந்தபோது பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளும் விரிவு பெறலாயிற்று.

மாணவர்கள் இன்றைய நவீன உலகின் தேவைகளுக்கு பொருத்தமானவர்களாகவும், ஆசிரியர்கள் புரிந்துணர்வுடன் அவர்களை கற்றல் செயற்பாட்டில் இட்டுச் செல்பவர்களாகவும், பாடசாலைகள் நேர்முகமான பாடசாலைக் கலாசாரத்திற்கூடாக சிறந்த வாழ்க்கைக்கு மாணவர்களை செலுத்துபவர்களாகவும் பொறுப்பேற்க வேண்டிய நிலை எழுந்துள்ளது.

**இப்புதிய ஒழுங்கில் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்த வேண்டிய சில ஆலோசனைகள் வருமாறு:**

1. சகல பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய மாணவர் ஒழுக்கங்கள், விழுமியங்கள் சார்ந்த விடயங்கள் தொடர்பில் ஒழுக்கக் கோவையை உருவாக்குதல், காட்சிப்படுத்துதல், ஒவ்வொரு மாணவனும் வாசித்து ஏற்றுக்கொள்ளும் வகையில் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல்.

2. பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் அனைவரும் (Code of Ethics) பின்பற்ற வேண்டிய ஆசிரியர்களுக்கான ஒழுக்கக் கோவையினை உருவாக்குதல், காடச்சிப்படுத்தல், புரிந்துணர்வுடன் அதனை பின்பற்றும் வயியில் உடன்படிக்கையை ஏற்படுத்தல்.

3. பாடசாலைக் கற்றல் சூழல் மாணவர்களுக்கு பாதுகாப்பானதாக இருப்பதை உறுதிப்படுத்தல், உடல்ரீதியான, உளரீதியான பாதிப்புக்களை மாணவர்கள் பெறாத வகையில் கற்றல் சூழல் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். (Safety Learning Environment)

4. மாணவர்களிடையே ஆசிரியர் தொடர்பிலான அவரது பணி தொடர்பிலான பெருமிதத்தை ஏற்படுத்தல் வேண்டும். அதற்குரிய வகையில் ஆசிரியர் செயற்படுதல் வேண்டும்.

5. மாணவர்களுக்கான "வாழ்க்கைத் தேர்ச்சி" தொடர்பாக விடயங்களை விளங்கிக்கொள்ளும் வகையில் (Life Competency Diary) நாளாந்த நாட் பதிவேடு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுதல் வேண்டும்.

6. பாடசாலைகளில் ஆசிரியருக்கும், பெற்றோருக்குமான இடைத்தொடர்பு அதிகரிக்கப்படுதல் தொடர்பில் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

7. ஒவ்வொரு பிள்ளையின் பெற்றோருடன் தனிப்பட வகுப்பாசிரியரோ ஆசிரியரோ சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கி தமது பிள்ளைகளின் கல்வி அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடுதல் வேண்டும். மாணவனுக்கும் பெற்றோருக்கும் இருக்கும் எதிர்பார்ப்பு கருத்தில் எடுக்கப்படுதல் வேண்டும்.

8. ஆசிரியரினால் மாணவனது உள்ளார்ந்த ஆற்றல்களும். மனப்பாங்கும் முழுமையாகப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் வகுப்பறைக்குரிய மாணவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தல் வேண்டும். (ஒரு ஆசிரியர் - 30 மாணவர்கள்)

9. பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கான வழி காட்டல் ஆலோசனை கட்டாயமாக்கப்படுவதுடன் பெரியபாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைக் குழுவாக செயற்படக்கூடிய வகையில் ஆசிரியர் எண்ணிக்கை அதிகரிக்கப்படுதல் வேண்டும். வழிகாட்டல் ஆலோசனைச் சேவை வழங்கக்கூடிய வகையில் இடம் வழங்கப்படுதல் வேண்டும்.

10. பாடசாலை மட்டத்தில் அமைக்கப்படும் மாணவர் ஒழுக்க முகாமைத்துவக்குழு / ஒழுக்காற்றுக்குழு உளவழிகாட்டல் ஆலோசனைக்குழு / ஆசிரியர் களுடன் இணைந்து செயற்படுதல் வேண்டும்.

11. மாணவர்களுக்கான தண்டனை என்பது அவர்கள் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அமைவதுடன் அம் மாணவர்களிடையே அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையிலும் பொருளாதார சமூக ரீதியிலான முரண்பாடுகளைத் தோற்றுவிக்காத வகையிலும் இருத்தல் வேண்டும்.

இவ் ஆலோசனைகள் பாடசாலைகளில நடைமுறைப் படுத்தப்படும் போது இவை பாடசாலைக்கான ஒரு கலாசாரமாக மதிக்கப்பட்டு மாணவர்களின் ஆழுமையில் செல்வாக்கினை செலுத்த ஆரம்பிக்கும். மாணவர்களில் கற்றல் அனுபவம் என்பது கற்ற காலத்தின் அனுபவமாகவும் இருக்கும்போது மனிதத்துவம் நிறைந்த சிறந்த நற்பிரசைகள் உருவாகுவர்.

# அனர்த்தங்களும் அவசரநிலைக்கல்வியும்

## அவசரநிலைக் கல்வி என்றால் என்ன?

இயற்கை அனர்த்தங்களின் போதோ அல்லது யுத்தம் போன்ற முரண்பாட்டு நிலைமைகளின் போதோ தேசிய ரீதியிலான கல்விச் செயற்பாடுகளில் சிறார்கள் ஈடுபடமுடியாது போகின்றது. அல்லது அக்கல்வி வாய்ப்புக்கள் குறைந்த அளவிலேயே கிடைக்கின்றது. இத்தகைய நிலைமையில் முன்னெடுக்கப்படுகின்ற கல்விச் செயற்பாட்டினையே அவசர நிலைக்கல்வி எனக் குறிப்பிடலாம்.

இது முறைசார்ந்தும் முறைசாராததுமான கல்விச் செயற்பாடாக இருக்கலாம். ஏனெனில் இன்றைய முரண்பாடுகள் சிக்கலானதும் நீண்ட காலத்திற்கு இழுபட்டுச் செல்வதும் தான் வரலாறு. எனவே அவசர நிலைக்கல்வி என்பது இத்தகைய முரண்பாட்டு நிலைமைகளுக்கிடையில் ஒரு முறைசாராக் கல்விச் செயற்பாடாக மட்டுமல்லாது முறைசார்ந்த கல்வியை ஏற்படுத்துகின்ற செயற்பாடாகவும் உள்ளது.

அதாவது முரண்பாடு அல்லது அனர்த்த நிலைமையின் பின்னரான சமூகத்தை மீள ஒழுங்குபடுத்துவதும் அதற்கூடாக அரசின் கல்விச்செயற்பாட்டுக் கட்டமைப்பை செயற்படுத்துவதுமாகும். இது ஒரு மாதத்திலோ அல்லது ஒரு வருடத்திலோ செயற்படுத்தி முடிக்கும் ஒன்றல்ல. இயல்பான கல்வி அபிவிருத்தி நிலைமை ஏற்படும் காலம் வரையில்

செயற்படுத்துகின்ற ஒரு நீண்ட செயற்பாடாகும். அவசர நிலையில் கல்வி என்பது சமூகத்தின் புனர்வாழ்விற்கான அடிப்படை மட்டுமல்லாது சிறார்கள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல் நிலைமையில் இருந்து பாதுகாக்கும் செயற்பாடுமாகும்.

அவசர நிலைமைகளின் போது நிகழ்கின்ற கல்விச் செயற்பாடுகள் சிறார்களின் பாதுகாப்பையே அடிப்படையில் முன்னிலைப்படுத்தும். அனர்த்தங்களில் இருந்து உயிர் தப்பிக்கவும் உளப்பாதிப்புக்களில் இருந்து விடுபட ஆதரவைப் பெறவும் பலாத்காரமாக வீடுகளில் இருந்து வெளியேற்றப்படாதிருக்கவும் செயற்படுத்தப்படுகின்றது.

கல்விச் செயற்பாடுகள் சிறார்களின் கல்விக்கான வாய்ப்புக்களை கற்பதற்கான சூலை அதிகரிப்பதுடன் தரமான கல்வி கிடைப்பதற்கும் முன்முயற்சி எடுகின்றது. அது மட்டுமல்லாது தொடர்ந்து பாடவிதான, கலைத்திட்ட அபிவிருத்தியையும் கல்வியின் தரத்தையும் சிறார்கள் எய்த வேண்டிய தேர்ச்சிகள் பற்றியும் கவனம் செலுத்துகின்றது. மேலும் சிறார்களின் சமூக, அறிவுசார் விருத்தியையும் கருத்தில் கொள்கின்றது.

இக் கல்விச் செயற்பாடு அபாயகரமான முரண்பாட்டுச் சூழலில் இருந்து சிறார்களுக்கு பௌதிக உடலியல் ரீதியிலான பாதுகாப்பை வழங்க முடியும். அனர்த்தங்களினால் ஏற்படும் உளப் பாதிப்புக்களை குறைக்க முடியும். அத்துடன் விசேட

தேவைகள் வழங்கப்பட வேண்டிய சிறார்கள் பற்றியும் அவர்களை அடையாளம் காணவும் இது உதவுகின்றது.

**பொதுவாக கல்விச்செயற்பாடுகளை மூன்று வகைகளில் அடையாளப்படுத்த முடியும்**

1. முறையில் கல்வி.
2. முறைசாராக் கல்வி.
3. முறைசார் கல்வி.

## 1 . முறையில் கல்வி (Informal Education)

நாளாந்த வாழ்க்கையில் கிடைக்கும் அனுபவங்களில் இருந்தும் மரபு ரீதியிலான கலாச்சாரம், குடும்பம், சமூகங்களின் செயற்பாடுகள் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற தொடர்பாடல் சாதனங்கள் என்பவற்றின் மூலமாகவும் பெறப்படுகின்ற அறிவு திறன்கள் மனப்பாங்கு என்பவற்றை சிறார்கள் பெறுகின்ற அல்லது கற்றுக்கொள்கின்ற ஒரு செயலொழுங்கே முறையில் கல்வி என்பதாகும்.

## 2. முறைசாராக் கல்வி (No formal Education)

சாதாரண முறைசார்ந்த பாடசாலை கற்றல் செயற்பாடுகளுக்கு அப்பால் ஒரு நெகிழ்வுத் தன்மை வாய்ந்த முறையிலான மாற்றுக் கல்வி வழங்கும் செயற்பாடாக முறைசாராக் கல்வியைக் குறிப்பிடலாம். இங்கு இத்தகைய கல்வி வழங்கப்பட வேண்டிய சிறார்கள் பாடசாலையிலோ அல்லது

பாடசாலைக்கு வெளியிலோ எழுத்தறிவூட்டலுக்கும் ஆரம்பக்கல்விச் செயற்பாடுகளுக்கும் உட்படுத்தப் படலாம். இங்கு சான்றிதழுக்கான கல்வியாக இது அமைவதில்லை.

3. **முறைசார் கல்வி (Formal Education)**

மேலிருந்து கீழ்நோக்கிய நிர்வாக ஒழுங்கு கொண்டதும் நிறுவனமயப்படுத்தப் பட்டதுமான முறைசார்ந்த கல்வி ஒழுங்கு இதுவாகும். சிறார்களுக்கு ஆரம்பம் முதல் வகுப்பு ரீதியாக அல்லது தரங்கள் ரீதியாக குறித்த காலஒழுங்கில் கல்வி வழங்கப்படுவதுடன் தேர்ச்சிகளை அளவிடுவதற்கான மதிப்பீட்டு முறையும் சான்றிதழ்ப்படுத்தப்பட்ட கல்வித்தகைமையும் உடையது. (GCE(O/L), GCE(A/L)

**வாழ்நிலைமையினை எதிர்கொள்வதற்கான திறன். (LifeSkill for survival)**

**வாழ்க்கைத்திறனுக்கான கல்வி** (Life Skill Education)

மரபு ரீதியிலான முறைசார் கல்வியும் முறைசாராக் கல்விச் செயற்பாடுகளும் வழமையாக அனர்த்தம் நிலவுகின்ற, நிகழ்கின்ற, நிகழ்ந்த பின்னரான சூழல்களில் வாழுகின்ற சிறார்களை அதற்குத் தயார்படுத்துவதில்லை. அவசரநிலைமைகளின் போது சிறார்கள் அதனை எதிர்கொள்ள தாமாகவே முயல்வதுடன் புதிய

உதாரணமாக நிலக்கண்ணி வெடிகள் இனவன்முறைகள் மட்டுமல்லாது கொலரா, HIV போன்றவற்றையும் இங்கு குறிப்பிடலாம்.

பலசந்தர்ப்பங்களில் பிள்ளைகள் தான் சிறந்த கல்வியாளர்களாக அவர்களது சகபாடிகளுக்கும் சமூகத்திற்கும் இருக்கின்றனர்.

- உடல்நலமும் சுகாதார மேம்பாடும் (Hygiene Promotion)
- கண்ணிவெடிப் பாதுகாப்புக் கல்வி
- சமாதானக்கல்வி முரண்பாட்டு முகாமைத்துவத் திறன், சகிப்புத் தன்மையினை வளர்த்தல், வன்முறை எண்ணங்களைக் கைவிடல் என்பவற்றை இது உள்ளடக்கியதாக அமையும்.
- சிறுவர் பாதுகாப்பு
- மேலதிக செயற்பாடுகள்
  - உபகரணம் வழங்கல்
  - பாடசாலை உணவு விநியோகம்
  - தற்காலிக கற்றல் கூடம் நிர்மாணம்
  - குடிநீர் வசதி வழங்கல்
  - மலசலகூட வசதி உருவாக்கல்

## அவசரநிலைக் கல்வியின் முதற்படி. பாதுகாப்பான இடமும் மீள சுதாகரித்தலுக்கான செயற்பாடுகளும்

உடனடி அவசரநிலைக்கு முகம்கொடுத்தலுக்கான செயற்பாடுகளில் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு பாதுகாப்பான ஓர் இடத்தை வழங்குதலும் மீள சுதாகரித்தலுக்கான கல்வி சார் செயற்பாடுளும் முக்கியம் பெறுகின்றன. இந்த பாதுகாப்பான அமைதி நிறைந்த நிம்மதியான இடம் சமாதான நிலைமையைத் தோற்றுவிப்பதுடன் பிள்ளைகள் விளையாடவும் ஏனையோருடன் இணைந்து சமூகமயப்படவும் செயற்படவும் தமது தேவைகளை தானே வெளிப்படுத்தவும் சந்தர்ப்பத்தை அளிக்கின்றது. இவ்விடத்தில் சிறார்களுக்கான அரங்கச்செயற்பாடும் அரங்க விளையாட்டுக்களும் பிரதான பரிகார நடவடிக்கையாக கருத்திற்கொள்ளப்படலாம்.

பாதிக்கப்பட்ட சிறார்களுக்கும் இளையோருக்கும் அவர்களது உளம் சார்ந்து ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கும் அச்சுறுத்தலற்ற சுதாகரித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான அமைப்பினை ஏற்படுத்திக் கொடுத்தலே இம்முதற்படியின் பிரதான இலக்காகும்.

## அவசரநிலைக் கல்வியின் இரண்டாம்படி. முறைசாராக் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்

பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான பாதுகாப்பான இடமும் மீள சுதாகரித்தல் அல்லது இயல்புநிலையாக்கச் செயற்பாடுகளும் முறைசாராக் கல்விச் செயற்பாடுகளுடன் இணைந்ததாக இருத்தல் வேண்டும். அதாவது எழுத்தறிவு, எண்ணறிவு, வாழ்வதற்கான கற்றல் பயிற்சிகள் (வாழ்க்கைத் தேர்ச்சி - சுகாதாரம், கண்ணிவெடி பாதுகாப்புக் கல்வி போன்றவை தொடர்பான விழிப்புணர்வு) காலப்போக்கில் இக்கல்விச் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டு அவர்களது வயதிற்கும் தரத்திற்கும் ஏற்ற வகையிலான பாடசாலை போன்று அமைப்பாக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

இச்சிறார்களுக்கான வகுப்புக்கள் நீண்ட தவணைக்குரியதாகவோ விசேட கலைத்திட்டத்தைக் கொண்டதாகவோ இருத்தல் கூடாது. அங்கு இருக்கும் வயது வந்த இளைஞர்கள் இடைநிலைக் கல்வி தொடர்பாக ஏனைய சிறார்களுக்கு உதவவும் முடியும்.பாதிக்கப்பட்ட சிறார்களுக்கும் இளையோர்களுக்கும் சமுகத்துடன் இணைந்து வாழக்கூடிய வகையிலான அறிகை சார்ந்ததும் சமூகம் சார்ந்ததுமான திறன்களை ஒழுங்கமைக்கப்பட்ட முறைசாராக் கல்விச் செயற்பாடுகளுக்கூடாக வளர்த்தல்.

## அவசரநிலைக் கல்வியின் மூன்றாம்படி. முறைசார் கல்வியை மீள நிலைப்படுத்தல்

குறிப்பிட்ட சிலசந்தர்ப்பங்களில் மட்டுமே முரண்பாடுகள் அல்லது அனர்த்தங்களுக்கு முன்பே அதனை எதிர்கொள்ளக்கூடிய வகையில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதான கலைத்திட்டம் சார்ந்த கல்வி அமைப்பு காணப்படுவதுண்டு. சாதாரணமாக முதல் இரண்டு முதன்மை இலக்குகளும் அடையப்படுகின்ற போது இந்த மூன்றாவது முறைசார் கல்விச்செயற்பாடு மிக விரைவாக ஆரம்பிக்கப்படும். துரதிஸ்டவசமாக இத்தகைய சமூகமயப்படுத்தப்பட்ட ஆரம்பமுயற்சிகளுக்கு போதிய வளங்களோ அனுபவங்களோ சிறார்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற ஆசிரியர்களோ கிடைப்பதில்லை.

பாதிக்கப்பட்ட சிறார்களுக்கும் இளையோருக்கும் அவர்களது கல்வியைத் தொடரவும் பூரணப்படுத்தவும் முறைசார் கல்வி அமைப்பை மீள்நிலைப்படுத்தலே மூன்றாம்படியின் இலக்காகும்.இவ்வாறு இம்மூன்று படிகளும் நிறைவு செய்யப்படும் போதும் இவ்விலக்குகள் சரியான வகையில் அடையப்படும்போதும் குறித்த அனர்த்தத்திற்குட்பட்ட சிறார்கள் உடல் உள பாதிப்புக்களில் இருந்து விடுபட்டு சிறப்பான கல்விச்செயற்பாட்டு கோலத்தினுள் இணையமுடிகின்றது.

**அவசர நிலையிலான கல்வி மூலம் கிடைப்பவை**

- உடலியல் பாதிப்புக்களில் இருந்து சிறார்களைப் பாதுகாத்தல்
- சிறார்கள் படைநடவடிக்கையில் ஈடுபடுவதில் இருந்து பாதுகாத்தல்
- பால்நிலை சார்ந்த வன்முறைகளில் இருந்தும் பாலியல் வன்முறைகளில் இருந்தும் பாதுகாத்தல்
- குடும்பங்களில் இருந்து சிறார்கள் விலக்கப்படுவதை தடுத்தல்
- சிறார்களுக்கும் இளையோருக்கும் பாதுகாப்பான இடத்தை வழங்கல்
- சிறார்கள் பலவந்தப்படுத்தப் பட்டோ விரும்பியோ வேலைக்கு அமர்த்தப்படுவதைத் தடுத்தல்
- பாதிக்கப்பட்ட இளையோருக்குரிய தொழில்சார் பயிற்சிகளை அடையாளம் காணலும் வழங்கலும்
- சிறார்களை மதுபானம் போதைப்பொருள் பாவனை போன்றவற்றில் இருந்து பாதுகாத்தல்.

**முரண்பாடுகளால் ஏற்படும் உளப்பாதிப்பு நிலைமைகளை இழிவழவாக்கம் செய்ய பாடசாலைகள் உதவுகின்றன. எவ்வாறெனில்**

- சிறார்களின் மாணவர்களுக்கான நேர்மனப்பாங்கு நிலையினை மீள நிலைப்படுத்தல்.

- பாடசாலை வாழ்வுக்கூடாக சிறார்களுக்கு புரிந்துணர்வைக் கட்டியெழுப்புதல்.
- பாடசாலை மட்டத்திலான அன்றாட செயற்பாடுகளுக்கு ஊடாக நோக்கத்தையும் அனுபவத்தையும் கருத்தையும் வழங்கல்
- உணர்வுகளை வெளிப்படுத்த வாய்ப்புக்களையும் வழிகளையும் வழங்குதல்.
- விளையாட்டுடனான மகிழ்ச்சிகரமான நிலையை மீள உருவாக்கல்

**அவசரநிலைக் கல்வியில் ஆசிரியர்களும் கல்வி ஆளணியினரும் பயிற்றப்படும் போது**

- சிறார்களின் குறிப்பான பாதுகாப்பு தேவைகளை இனங்காணவும் வழிகாட்டவும் முடியும்.
- விசேட உதவி தேவைப்படும் சிறார்களை இனங்காண முடியும்
- இளம் சிறார்களிடையே நேரான பலமான நட்பையும் உறவையும் உருவாக்க முடியும்.
- பிரச்சனைகளின் போது சிறார்களுக்கான சிறந்த நேர் மனப்பங்குடைய மாதிரியாக செயற்படுதல்.
- நேர்மனப்பாங்கு உணர்வைக் கட்டியெழுப்புதல்

**அவசரநிலை கல்வியின் மூலம் சிறார்களின் எதிர்காலத்திற்கு**

- சிறார்களின் கட்டமைத்தலுக்கும் பகுப்பாய்வுக்குமான திறன்களை மேம்படச் செய்தல்.
- சிறார்களின் தொழில் வாய்ப்புத் தெரிவுகளை அதிகரிப்பதன் மூலம் சமூகத்திற்கான அவர்களது ஆக்கபூர்வ பங்களிப்பை நல்க உதவுதல்
- சுயநம்பிக்கையினை மேம்படுத்தல்
- குழுக்களுக்கிடையே முரண்பாடுகளைத் தவிர்த்து நல்லுறவைக் கட்டியெழுப்பல்
- சமாதானத்திற்கும் வாழ்வதற்குமான நற்செய்திகளை வழங்க வழிப்படுத்தல்.

சிறார்களின் உரிமைகளையும் தலைமைத்துவத்தையும் விருத்தி செய்தல்

## Hazard
## இடர் (அனர்த்தம்)

இடர் என்பது மனித உயிர்களையும் உடமைகள் சொத்துக்களையும் அளிக்க வல்ல ஒரு நிகழ்வு ஆகும். இது அதிகரிக்கும் போது பேரளிவாக மாறுகின்றது.

- இது இயற்கையாகவோ அல்லது மனித செயற்பாடுகளினால் நிகழ்வதாகவோ காணப்படலாம்.
- இது பௌதிக ரீதியிலான சேதங்களையும் பொருளாதார ரீதியிலான இழப்புக்களையும் அல்லது மனித உயிர்களையும் நல்வாழ்வையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிக்கின்றது.

மனிதனால் ஏற்படுத்தப்படும் இடர் / அனர்த்தம் தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவால் அதன் செயற்பாடுகளினால் முன்னெடுக்கப்படுவதாகும். சூழலில் மனிதனது தலையீடுகள் அல்லது சமூகங்களுக் கிடையிலான உறவுநிலையில் மனிதனின் தலையீடுகள் என்பவற்றை இங்கு குறிப்பிடலாம்.

உதாரணமாக
- அனர்த்தமேற்படுத்தக்கூடிய இரசாயண பொருட்பாவனை
- கதிர்வீச்சு விபத்து

⏮ யுத்ததம்

⏮ சுற்றச்சூழலைப் பங்கப்படுத்தல்.

இயற்கை இடர்கள் என்பவை உயிரியல் , புவியியல், நீரியல், வழிமண்டலவியல், சார்ந்த செயற்பாடுகளின் விளைவாக ஏற்படுபவை ஆகும்.

✕ நிலநடுக்கங்கள்

✕ மண்சரிவுகள்,

✕ வெள்ளப்பெருக்கு

✕ எரிமலை வெடிப்பும் சீற்றமும்

✕ வறட்சி

இடர் என்பது ஒரு அனர்த்தமல்ல. உதாரணமாக நாங்கள் வறட்சி நிலமையில் அது அனர்த்தமாக இல்லாதவரை வாழமுடியும். அது மட்டுமல்லாது வறட்சி இயற்கையின் விளைவானது என்று மட்டுமே குறிப்பிடுவதும் கடினமானதாகும். ஏனெனில் மனிதனது செயற்பாடுகளின் மூலமே வழிமண்டலத்திலுள்ள பச்சைவீட்டு விளைவில் மாற்ற மேற்படுகின்றது. அதன் விளைவால் ஓசோன் படையில் துவாரம் ஏற்பட்டது. பூமி வெப்பமடையத் தொடங்கியது.

இடர் (அபாயத்தை எதிர்கொள்ளும் நிலை) என்பது என்ன?
What is Risk?

பொதுவாக இடர் அல்லது அபாயத்திற்கு முகம் கொடுக்கக்கூடிய நிலை என்பது குறித்த ஒரு எதிர்பார்க்கப்படும்

அபாயகரமான விளைவு என வரையறை செய்யலாம். இது பின்வருமாறு அமையலாம்.

- ✔ அனர்த்தம் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் அல்லது இடம்பெற சாத்தியமான நிலைமையில்
- ✔ அனர்த்தம் இடம்பெறும் போது ஏற்படும் பாதகமான விளைவுகளின் போது

குறித்த இடரின் தாக்கம் அல்லது மனிதர்கள் அவ்விடரினால் எவ்வாறு பாதிப்புக்கும் சேதத்திற்கும் உள்ளாக்கப்படுகின்றனர் என்பதைப் பொறுத்தே இடருக்கு முகம்கொடுக்கக்கூடிய தன்மை ஏற்படும். எனவே தான் அனர்த்தங்கள் ஏற்படும் போது அதன் விளைவுகள் பற்றி முன்னரே தெளிவாக வரையறை செய்யமுடியாதுள்ளது. இவ்வகையில் பின்வரும் விடயங்கள் பற்றி கவனத்தில் கொள்ளதல் வேண்டும்.

- ✔ இடர் அல்லது அச்சம்பவம் நிகழும் போது
- ✔ இடரினால் ஏற்படும் சேதங்களின் தாக்கத்திற்கு

## What are prevention and mitigation?

இடர் தொடர்பான முற்காப்புச் செயற்பாடும் இழிவளவாக்கமும் யாவை?

முற்காப்பு நடவடிக்கைகள் இடரை தவிர்க்கச்செய்யும் அதே வேளை இழிவளவாக்கச் செயற்பாடு இடரை குறைவடையச் செய்யும்.

| அனர்த்தம் / இடர் | நிகழ்வதற்கான ஏதுநிலை/ சாத்தியம் | பாடசாலை மட்டத்தில் ஆசிரிய/ மாணவர்களுக்கு ஏற்படும் சேதங்கள் |
|---|---|---|
| நிலநடுக்கம் | | |
| வெள்ளப்பெருக்கு | | |
| சுனாமிப் பேரலை | | |

| | | |
|---|---|---|
| முரண்பாடு / யுத்தம் (விமானக் குண்டு வீச்சு, எறிகணைத்தாக்குதல் / வேறுதாக்குதல்கள் | | |
| பாம்புக்கடி | | |
| யானை தாக்குதல் | | |

| இடர்/ அனர்த்தம் | விளைவுகளைக் குறைப்பதற்கும் விளைவுகளுக்கான சந்தர்ப்பங்களைக் குறைப்பதற்கும் எடுக்கப்படும் நடவடிக்கைகள | பாதகமான விளைவுகள் | பாதகமான விளைவைக் குறைப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

## அவசரநிலமையின் போது பாடசாலைகள் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்

அவசரநிலமையின் போதும் சிறார்களுக்கு கல்வி வழங்கப்படவேண்டியது முக்கியமான ஒன்று ஆயினும் வழமையான கற்றல் செயற்பாட்டிலும் பார்க்க அதிகளவில் செயற்படுவதன் மூலமே இது சாத்தியமாகும்.

பாட உள்ளடக்கத்தை பொறுத்தவரையிலும் சில பாடங்களைப் பொறுத்தவரையிலும் அவசரநிலமையின் போதும் விசேட கவனத்தைச்செலுத்தவேண்டும். அல்லது முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

**<u>பங்கேற்றல் முறையிலான கற்றல் செயற்பாட்டின் அடிப்படைகள்.</u>**

- மாணவர்கள் தாமாகவும் ஏனைய மாணவர்களிடம் இருந்தும் கற்கின்றனர்.
- மாணவர்கள் அறிவுசார்ந்த வழமாகக் கருதப்பட வேண்டும்.
- ஆசிரியர்கள் மட்டுமே கல்விக்கான மூலாதாரமாக இருக்க முடியாது.
- கற்றலுக்கான சந்தர்ப்பங்களை ஆசிரியர் உருவாக்குவதன் மூலம் மாணவர்களை தமது சுயசெயற்பாட்டின் ஊடாக கற்கச் செய்கின்றனர்.
- ஆசிரியர் தொண்டர் அடிப்படையில் செயற்படுவதை ஊக்குவித்தல் வேண்டும்.

- ஆசிரியர் சுதந்திரமான தொடர்பாடலுக்கு ஊக்கப்படுத்தல் வேண்டும்.
- கற்பவர்களுக்கு உடனடியாக உதவக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
- கற்றல் படிப்படியாக நிகழ்கின்றது என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.
- நட்புறவோடும் அல்லது நேயத்துடனும் தளர்வான நிலையிலும் செயற்படல் வேண்டும்.
- வேறுபட்ட மூலங்களில் இருந்து தகவல்களை வழங்கலும் பலவிதமான செயற்பாடுகளை மேற்கொள்ளலும் வேண்டும்.
- தனியாள் வேறுபாடுகளை கருத்திற் கொண்டு கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

## அத்தியாயம் இரண்டு
# "கற்றல்"



**எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்.**

(கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே செய்வதற்கரிய செயல்களைச் செய்ய வேண்டும் )

# இழப்பீட்டுக்கல்வி

கல்வி என்பது யாவருக்கும் உரியது. மனிதனை மனிதனாக வாழ வைக்கும் ஒரு வாழ்வியல் தத்துவம். எல்லா மனிதனுக்கும் உள்ள ஒரு சிறப்புரிமையும் கூட இதனாலேயே எல்லோருக்கும் கல்வி என்ற பிரகடனம் முன்வைக்கப்பட்டு யாவரும் கல்வி கற்க வேண்டும். ஒவ்வொருவரும் தமது அன்றாட வாழ்விற்கு அவசியமான அடிப்படைத் தேர்ச்சிகளைப் பெற கல்வியே மூலோபாயமாக வேண்டும் என்ற வகையில் முனைப்பான செயற்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. இது மட்டுமல்லாது "கல்வி கற்பது சிறுவர் உரிமை" என்ற பிரகடனத்தின் மூலம் அனைத்து சிறுவர்களுக்கும் கல்வி வழங்கப்பட வேண்டும் என்ற முனைப்பான நோக்கம் சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்படுகின்றது. விளக்கமாக நோக்கினால் ஒவ்வொரு மனிதனும் தமது வாழ்வின் தேவைகளை நிறைவு செய்வதற்கான அடிப்படைத் தேர்ச்சிகளைப்பெற வேண்டும் என்பது குறிக்கோளாகின்றது.

இத்தகைய குறிக்கோள்களை எட்ட முடிகின்றதா? நடைமுறையில் அது சாத்தியமானதா? இக்குறிக்கோளை நமது பிரதேசங்களில் அடைய பல இடர்பாடுகள் உள்ளன. இவை எத்தகைய இடர்பாடுகள்? மேற்படி குறிக்கோள்களை அடைவதற்கு தடையாகவுள்ள இடர்பாடுகளை இனங்காண வேண்டியது அவசியம் என்பதை இங்கு நிச்சயம் விளங்கிக் கொள்ளமுடியும். இவ்விடயங்களை நான்கு வகையாக நாம் விளங்கிக் கொள்ளலாம்.

1. இயற்கையினால் ஏற்படுத்தப்படும் இடர்கள் : மழை, வெள்ளப்பெருக்கு, புவிநடுக்கம், கடும் வெப்பம், நிலச்சரிவு, சூறாவளி, சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களால் ஏற்பட்ட இடர்கள்.

2. மனிதர்கள் திட்டமிட்டு ஏற்படுத்திய அனர்த்தங்களால் ஏற்பட்ட இடர்கள் : போர், அரசியல், இன வன்முறை என்பவை தொடர்பில் ஏற்படும் இடர்கள்.

3. சமூக, அரச அமைப்பு ஒழுங்கு முறைகள், பாரபட்சம் காட்டுதல் போன்ற ஒற்றுமையற்ற செயல்களின் விளைவாக ஏற்படும் சுமூகமற்ற நிலை.

4. சமூக அமைப்பிலுள்ள ஏற்றத்தாழ்வுகளால் கல்விக்கான வாய்ப்பும் உரிமையும், எல்லோருக்கும் சமம் என்ற சிந்தனை அர்த்தமற்றதாகிக் காணப்படும் நிலை.

மேற்குறித்த காரணங்களால் ஏற்படும் அசாதாரண சுமுகமற்ற அல்லது இயல்பற்ற நிலையும், பயமும், தனிமனித சுதந்திரத்தையும், சமூகத்தின் சுதந்திரத்தையும் பாதிப்பதுடன் தொடர்ச்சியான விரக்தி, நிலைத்துவமற்ற செயற்பாடுகள் ஏற்பட வழி வகுக்கின்றது. வறுமை பெருமளவில் ஏற்படுகின்றது. சமூக ஏற்ற தாழ்வு அல்லது இடைவெளி அதிகிரிக்கின்றது. வேலைவாய்ப்பின்மை வன்முறைச் சிந்தனையை தூண்டுகின்றது. கல்வி கற்பது அர்த்தமற்றது என்ற சிந்தனையும் ஏற்பட ஏதுநிலை உருவாகின்றது.

இத்தகைய ஒரு விசச்சூழல் நாட்டின் விழுமியத்தை இல்லாதொழித்து நாட்டையே சீரழிக்கும் தன்மை கொண்டதாக உருவெடுக்கின்றது. எனவே காத்திரமானதும் யதார்த்த மானதுமான கல்வி வளங்கல் மூலமே இத் தடைகள், இடர்கள் ஏற்படாது தவிர்க்க முடியும்.

ஆரம்பத்தில் எமது வட மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்ததாக வடகிழக்கு மாகாணமாக நீண்ட

காலம் செயற்பட்டு வந்த காலத்திலும் இம் மாகாணங்களில் சமூக அமைப்பில் உள்ள சாதி, சமயம் அடிப்படையில் ஒரு பகுதி மக்கள் நீண்டகாலமாக கல்வியிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்தனர் என்பதை நாம் அறிவோம். இத்தகையதொரு நிலமை இன்று இல்லை படிப்படியாக அற்றுப்போய்விட்டது. ஆயினும் பொருளாதார ஏற்றத்தாழ்வு பெருமளவில் நிலவுவதால் இதன்காரணமாக சில பிரதேசங்களில் விரும்பிய கல்வியை, வேண்டிய கல்வியை கற்கும் வாய்ப்பு அற்றவர்களாக இன்றும் இருக்கின்றனர்.

கல்விக்கான சம வாய்ப்பு என்ற அடிப்படை சில விடயங்களில் தளர்ந்துதான் இருக்கின்றது. பிள்ளைகளுக்கான பாடசாலைத் தெரிவு என்பது பல பாடசாலைகளில் சட்ட நியமங்களுக்கு அப்பால் பொருளாதார நிலையை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றது என்பது கசப்பான உண்மையாகும். அதுமட்டுமல்லாது பாடசாலை நிர்வாகத்தினருக்கு அப்பால் பழைய மாணவர் சமூகமும், பாடசாலை சேவை வழங்கு பிரதேசத்திலுள்ள பிரபல்யம் வாய்ந்த சமூகத்தினரும் இவ்விடயங்களில் தீர்மானம் எடுக்கும் சக்தியாக இருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாடசாலைகளில் மிகப்பெரிய அளவில் ஆசிரிய பற்றாக்குறையும் ஏனைய வளப்பற்றாக்குறையும் பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக நிலவி வந்துள்ளமையால் மாணவர் கல்வி பெருமளவில் பாதிப்படைந்துள்ளது. இதற்கு ஆதாரமாகப் பல அறிக்கைகள் உண்டு. GTZ நிறுவனம், NEREC அறிக்கை, UNICEF மேற்கொண்ட ஆய்வு என்பவை இதற்கு ஆதாரமாகவும் கல்வி நிலையை, கல்வி நிலையின் அபாய கட்டத்தை வெளிப்படுத்தியதாகவும் உள்ளன.

உண்மையில் ஒரு பாடசாலையில் முதன்மையான வளம் அதன் ஆசிரிய வளம். வகுப்பறைக் கல்விச் செயற்பாட்டில், பாடவிதான அமுலாக்கத்தில் ஆசிரியர்களே முதன்மைவள அணியினராகும். போதிய அளவு ஆசிரியர் தொகை இல்லாதுவிடின் பாடவிதான அமுலாக்கம் என்பது கேள்விக்குறியாகும்.

இதே போன்றே பாடங்களுக்கு உரிய ஆசிரியர் சரியான எண்ணிக்கையில் இல்லாதுவிடின் அதுவும் கல்வி பின்னடைவுக்கு காரணமாகின்றது. பல பாடசாலைகளில் கணித, விஞ்ஞானப் பாடங்களுக்குரிய ஆசிரியர் இல்லாது இருப்பதும் வேறு பாடத்தை விசேட தன்மையாகக் கொண்ட ஆசிரியர்கள் வேறு வழியின்றி கணித, விஞ்ஞானப் பாடத்தை தமக்கு தெரிந்த முறையில் கற்பிப்பதும் உரிய தேர்ச்சியை மாணவர்கள் அடைவதில் இடர்பாடுகளை ஏற்படுத்துகின்றது.

சில பாடசாலைகளில் நீண்டகாலமாக குறித்த பாடத்திற்கு கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் எவரும் இல்லாத நிலையும் அப் பாடவேளை மாணவர்களது Relax Time போல் பயன்படுவதும் நாம் அறிந்தவையே. அதுமட்டுமல்லாது பெருமளவு மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையில் கூட குறித்த பாடத்திற்கு ஒரேயொரு ஆசிரியரே இருந்தமையும் அவர் உச்ச பயன்பாட்டிற்கு உட்பட்டவராக இருந்தமையும் அதன் காரணமாக அவரது வினைத்திறன் படிப்படியாக குறைவடைந்தமையும் கூட நாம் அறிந்தவையே.

போதியளவு ஆசிரியர், பாடங்களுக்குரிய ஆசிரியர் எண்ணிக்கை பயிற்றப்பட்ட தரமான ஆசிரியர்கள் முதலியன கடந்த காலங்களில் போதியதாக இருந்ததில்லை. இதனால் உரிய கல்வியை நமது பிரதேசத்துப் பாடசாலைகள் மாணவர்களுக்கு வழங்கவில்லை.

இத்தகைய அசாதாரணமான கல்விச் சூழலில் மாணவர்களுக்கு கல்வி வழங்க எடுக்கப்படும் நியாயமான மாற்று ஒழுங்காகவே இழப்பீட்டுக் கல்வியைக் குறிப்பிடலாம். இத்தகைய போர், இனமுரண்பாடு, உள்நாட்டு கலவரங்கள் நிகழ்ந்த பல நாடுகளிலும் பல முறைகளிலான இழப்பீட்டு கல்விச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. எனவே எமது நாட்டிலும் கட்டமைக்கப்பட்ட முறையிலும் கட்டமைக்கப்படாத முறையிலும் இத்தகைய கல்விச் செயற்பாடுகள் முன்வைக்கப்பட்டு மாணவர்கள் கல்வியில் இருந்து முற்றிலும் ஒதுங்காது செயற்பட்டிருக்கின்றன. இவ்வாறு முன்வைக்கப்பட்ட இழப்பீட்டு கல்விச்செயற்பாடுகள் பற்றி சற்று ஆராய்ந்தால்:

1. இழந்த கல்வியை வழங்கும் பாடசாலை மட்ட செயற்பாடு Catch -Up Education
2. செயலட்டை முறை செயற்பாடு
3. துரிதகற்றல் செயற்பாடு Accented leaning base
4. இல்ல மைய கற்றல் செயற்பாடு. Home base leaning methods.
5. எழுத்தறிவிப்பு வகுப்புக்கள்
6. திறந்த பாடசாலை முறை செயற்பாடுகள்

மேற்படி முறைகள் யாவும் வடமாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் இவை ஒன்றாக வடகிழக்கு மாகாணமாக இருந்தபோதும், பின்னர் தனித்தனியாகப் பிரிந்து இரு மாகாணங்களாகிய பின்பும் நடைமுறையில் பன்படுத்தப்பட்ட பரிகாரக் கற்பித்தல் முறைகளாகும். இத்தகைய இழப்பீட்டு கல்விச் செயற்பாட்டை அக்காலத்துக்கு உரிய அவசிய ஒன்றாக கருதி நடைமுறைப்படுத்திய கல்வியாளர்கள், கல்வியதிகாரிகள், தன்னார்வ தொண்டர் நிறுவனங்கள் போன்றவர்கள் உண்மையில் நன்றி பாராட்டுதலுக்கு உரியவர்கள்.

இத்தகைய இழப்பீட்டுக்கல்வி முறைகளை மீண்டும் அலசி ஆராய்வது இன்றும் பின்னடைவான கற்றல் கற்பித்தல் சூழல் நிலவிவரும் விழிம்புப் பாடசாலைகள் கிராமப் பாடசாலைகளில் கற்றல் கற்பித்தலை மேம்படுத்த உதவும் வகையிலான சிந்தனைக் கிளறலாக அமையும்.

இங்கு குறிப்பிடப்படும் இழப்பீட்டுக்கு கல்வி தொடர்பான முறைகளுக்குள் குறிப்பிடாத மேலும் பல செயற்பாடுகள் ஆங்காங்கே வலயங்களிலும் பாடசாலைகளிலும் நிகழந்துள்ளன. எனவே இம்முறைகள் மட்டும்தான் நிலையான மாதிரிகளாகவும் கொள்ளமுடியாது.

## பாடசாலை மட்ட இழந்த கல்வியை மீட்டெடுக்கும் கல்விச் செயற்பாடு.

இங்கு போர், அனர்த்தங்கள் காரணமாகவும் தொடர்ச்சியாக பாடசாலை இயங்காது இருந்தமையினாலும் கல்விக்கான பாடசாலை நாட்கள் இழக்கப்பட்ட பின்னணியில் மாணவர்கள் உரிய வகுப்புக்கும், வயதுக்குமான தேர்ச்சியை அடைவதில் மிகவும் பின்னடைவாக இருந்த சூழலில் முன்னெடுக்கப்பட்ட பாடசாலை மட்ட பரிகார செயற்பாடாகும். இங்கு எல்லா மாணவர்களுக்குமே கல்விக்கான காலம் இழக்கப்பட்டிருந்தாலும் மீத்திறன் கொண்ட மாணவர்களும் சராசரி மாணவர்களும், மந்த நிலையிலான மீளவும் மீளவும் கற்பிக்கப்பட வேண்டிய மாணவர்களுக்கும் இடையில் கற்றல் தொடர்பான தெளிவான அடைவு வேறுபாடு வெளிப்படும்.

இந்நிலைமை அவதானிக்கப்பட்டு அம்மாணவர்கள் தனிப்படுத்தப்பட்ட விசேட வகுப்புக்களில் கற்பிக்கப்படுவர். இவ்வகுப்புக்கள் பாடசாலை விட்டதன் பின்னர் நடத்தப்பட்டது. இங்கு அதே வகுப்பு ஆசிரியரோ அல்லது அப் பிரதேச வேறு ஆசிரியரோ கற்பிப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. இவ் விசேட வகுப்புக்களில் பங்குபற்றும் மாணவர்கள் அவர்களின் தேர்ச்சி நிலை பற்றிய மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்பட்டு அவர்கள் இழந்த விடயங்கள் தேர்ச்சிகளுக்கு பரிச்சயமாக்கப் பட்டன. முக்கியமாக அடிப்படை எழுத்து, அறிவு,கணித அறிவு என்பவை மிகக்கூடுதலாக இங்கு கவனிக்கப்பட்டன. ஆரம்பப்பிரிவு வகுப்புக்களில் கல்வி இழப்பு ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் இடைநிலை வகுப்புக்களில் அம் மாணவர்கள் செயற்படுவது அசாத்தியமானது. எனவே இம் மாணவர்கள் ஆரம்ப வகுப்புக்களில் இழந்தவற்றை நிவர்த்தி செய்யவும் இம்முறை பின்பற்றப்பட்டது.

இத்தகைய முறைக்கூடாக பல பாடசாலைகளில் பல மாணவர்கள் உரிய தேர்ச்சியை பெற முடிந்தது. சில மாதங்களின் பின்னர் இவ் விசேட வகுப்புக்களின் மாணவர்கள் உரிய தேர்ச்சியைப் பெற்று பிரதான வகுப்புக்களுடன் இணைந்தனர். அதே வேளை பாடசாலை விட்டதன் பின்னர் நடத்தப்பட்ட இவ்வகுப்புக்களில் குறித்த தொகுதி மாணவர்கள் பின்னடைவான மாணவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டு அசௌகரியத்திற்கு உள்ளானார்கள். இதே போன்று இவ் வகுப்புக்களில் கற்பித்த ஆசிரியர்கள் ஒரு சிலருக்கு தன்னார்வம் கொண்ட நிறுவனங்களின் உதவியுடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

அவ்வகையில் இக்கொடுப்பனவுகள் பெறுவதை நோக்காகக் கொண்டு சில பாடசாலைகள் சாதாரண வகுப்புக்களில் வைத்தே உரிய தேர்ச்சியை பெறக்கூடிய மாணவர்களையும் பின்னடைவான மாணவர் என்ற தொகுதிக்குள் உள்வாங்கி விசேட இழப்பீட்டு கல்வி வகுப்புக்களாக நடாத்த முனைந்தனர். மிகச்சில அதிபர்கள் இத்தகைய வகுப்புக்களை நடாத்தாமலே நடாத்தியதாகப் பதிவுகளை பேண முற்பட்டனர். இவை யாவும் அவ்வகுப்புக்கள் இயங்கிய காலத்தில் அவற்றை மேற்பார்வை செய்யக் கூடிய நிலமை சுமூகமாக இல்லாத சூழலில் நிகழ்ந்தவையாகவே உள்ளன. எவ்வாறெனினும் அக்குறித்த காலப்பகுதியின் கல்விச் செயற்பாட்டில் ஏதோ ஒரு வகையில் உதவியாக அமைந்த செயற்பாடு என்றே இதைக் குறிப்பிட வேண்டும்.

# செயலட்டை முறை கற்றல் செயற்பாடு

பிள்ளை மைய கற்பித்தல் முறையின் இன்னும் ஒரு அணுகுமுறையாக அமைவது செயற்பாட்டு ரீதியிலான கற்றல் கற்பித்தல் செயன்முறை இதன் ஒரு பகுதியாக பிள்ளையின் சுய கற்றல் ஊக்கியாக செயற்படும் ஒரு முறையாக செயலட்டை முறை [(Activity Sheet) அல்லது (Work Sheet Method)] வினைத்திறனான கற்றல் உபாயமாக பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் இச்செயலட்டை முறை "நலிக்கலி" என்ற செயற்பாடாக நடைமுறைப் படுத்தப்பட்டாலும், பல வளர்முக நாடுகளில் இன்று கைக்கொள்ளும் முறையாகவும், வளர்ச்சியடைந்த நாடுகளில் மிக இயல்பாக நடைமுறையில் இருக்கும் உபாயமாகவும் உள்ளது.

செயலட்டை என்றால் என்ன? செயற்பாடுகள் அல்லது வகுப்புக்குரிய கலைத்திட்டம் சிறிய சிறிய உபபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு சிறிய அலகும் ஒரு முழுமையான வடிவமாக அதன் அடிப்படைகளில் இருந்து மாணவர்களுக்கு புரிந்து கொள்ளக் கூடியதாக மாற்றப்பட்டு செயற்பாட்டு கூறுகளாக மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

இது வினாக்களும் அதற்குரிய விடைகளும் என்பதாக இல்லாமல் இலகுவிலிருந்து கடினநிலை நோக்கி செல்லும் செயற்பாடாக அமைகின்றது. மாணவன் தனது தேர்ச்சிக்கு ஏற்ப பொருத்தமான செயலட்டைகளை எடுத்து அதனைக் கற்று அதிலுள்ள செயற்பாடுகளை செய்கின்றான்.

இது அவனுக்கு ஆர்வத்தையும் தன்னால் இயலும் என்ற சுய திடத்தையும் ஏற்படுத்துகின்றது. இச்செயலட்டை முறையின் மூலம் பின்வரும் விளைவுகள் பெறப்படுகின்றது அவை:

## செயலட்டை முறை

1. மாணவர்களின் கவனம் அதிகளவில் ஈர்க்கப்படுகின்றது.

2. மாணவர்களை வழிநடத்துவது இலகுவான விடயமாகின்றது.

3. ஆசிரியர் மையக்கல்வி என்பது குறைக்கப்படுகின்றது.

4. தமது சுய கற்றலில் ஆர்வமும் விருப்பமும் மாணவர்களுக்கு அதிகரிக்கின்றது.

5. விடயங்களின் கடின, இலகு தன்மைகளுக்கான தெரிவுகளை தாமே மேற்கொள்ளவும், அதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளவும் பழகுகின்றனர்.

6. விளையாட்டு முறையாகக் கற்றல் என்ற வகையில் அதிக மகிழ்வை வெளிப்படுத்தப்படுகின்றமை.

7. கற்றலுக்கு உதவும் ஊழியராக "செயலட்டைகளை" கருதும் மனப்பாங்கை மாணவர் கொண்டிருத்தல்.

8. உரிய தேர்ச்சியினை அடைவதுடன் அதனைத் தக்கவைத்துக் கொண்டிருத்தல்.

9. மாணவர்கள் சுய ஒழுங்கு, வகுப்பறை ஒழுங்கு என்பவற்றில் தாமாகவே இயைபுக்கு உட்படுகின்றமை.

வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் வன்னியில் ஏற்பட்ட யுத்த அனர்த்தமும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வும் நிகழ்ந்த வேளையில் வவுனியா தெற்கு

வலயத்தில் அதிகளவான மாணவர்கள் பாடசாலையில் நிறைந்தனர். இம் மாணவர்கள் கற்றல் காலங்களை இழந்து உரிய தேர்ச்சியை பெறாதவர்களாக இருந்தமையால் வவுனியா வலயக்கல்விப் பணிப்பாளரினால் இச்செயலட்டை செயற்திட்டம் பாடசாலையில் அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றிகரமான ஒரு கற்றல் செயல்முறையாகப் பயன்படுத்தப்பட்டது. இதன் விளைவு வவுனியா தெற்கு வலயம் பெறுபேறுகளின் அடிப்படையில் வடமாகாணத்தில் முன்னணி வகித்த வலயங்களுள் ஒன்றாகத் தன்னை இனங்காட்டியது.

இம்முறையில் இருக்கக்கூடிய சாதகமற்ற அம்சமாகக் குறிப்பிட வேண்டியது சரியான முறையில் ஆசிரியர் பயிற்சி பெறாது விடின் வெறுமனே வினாவிடை வகுப்பாக மாறக்கூடிய சந்தர்ப்பம் உண்டு என்பதாகும்.

# துரித கற்றல் நிகழ்ச்சித் திட்டம்

வடமாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் கடுமையான யுத்தநிலமை நிலவிய காலத்தில் பாடசாலைகள் மூடப்பட்டு அல்லது இடம்பெயர்ந்து மிகக்குறைந்த பௌதீக ஆளணி வளத்துடன் இயங்கின. மக்களும், மாணவர்களும் பாரிய இடப்பெயர்வுக்கு உட்பட்டதால் பாடசாலைக்காலங்கள் இழக்கப்பட்டன. பாடசாலைகள் தற்காலிக இடம்பெயர்ந்த மக்களுக்கான தங்குமிடங்களாக செயற்பட்டமையாலும் மாணவர்கள் பாடசாலைக் காலங்களையும், கற்றலுக்கான சந்தர்ப்பங்களையும் தொடர்ச்சியாக இழந்து போயினர். இதன் விளைவாக மாணவர்களிடையே கீழ்வரும் வகுதியினரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கத் தொடங்கியது.

1. பாடசாலையை விட்டு இடைவிலகுவோர்
2. ஒழுங்கற்ற பாடசாலை வருகையுடைய மாணவர்கள்
3. உரிய வயதிற்கும் வகுப்பிற்கும் உரிய தேர்ச்சியை வைத்துக் கொள்ளாதவர்கள்.
4. எழுத வாசிக்க தெரியாத இடைநிலைப் பிரிவு மாணவர்கள்.

மேற்படி வகுதியினரின் அதிகரிப்பும், இடப்பெயர்வுக்கு உட்பட்ட மாணவர்களின் முழுமையான கல்வியிழப்பும் தரம் 2 முதல் 9 வரையான "வகுப்புக்கும் வயதுக்கும்" உரிய மாணவர்களிடையே அவர்களின் தேர்ச்சி மட்டம் தொடர்பில் ஆய்வினை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தை ஏற்படுத்தியது.

2010 ம் ஆண்டு வன்னிப்பிரதேசத்தில் இருந்து முற்றாக இடம்பெயர்ந்த 397 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் ஏனைய வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டம், வவுனியா, மன்னார் மாவட்ட மாணவர்களுக்கும், கிழக்கு மாகாணத்தில் சில

பகுதிகளிலும் உள்ள மாணவர்களுக்கும் என வடமாகாணத்தில் 150,000 மாணவர்களுக்கும் கிழக்கு மாகாணத்தில் 160,000 மாணவர்களுக்கும் என மொழி, கணிதம் ஆகிய விடயங்கள் தொடர்பில் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் வடக்கு மாகாணக கல்வித்திணைக் களமும் கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களமும் இணைந்து ஆய்வினை மெற்கொண்டன.

Dr.கரோல் டேவிட் அவர்கள் இவ் ஆய்வின் நிபுணத்துவ ஆலோசகராகச் செயற்பட்டார். இவ்வாய்வு முடிவுகளின் படி இம் மாணவர்கள் 1 1/2 வருடம் முதல் 3 வருடம் வரையான பின்னடைவான தேர்சிநிலையில் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக இம் மாணவர்களுக்காக அவர்கள் உரிய தேர்ச்சியை குறுகிய காலத்துக்குள் பெறவைப்பதை நோக்காக் கொண்ட புதிய செயற்திட்டம் உருவாக்கப்பட்டது. இதுவே துரித கற்றல் நிகழ்ச்சித்திட்டமாகும். (Accelerated Learning Programe)

துரித கற்றல் நிகழ்ச்சித்திட்டம் இன்று பங்களாதேஷ், இந்தியா, எத்தியொப்பியா, ஆப்கானிஸ்தான் போன்ற பல நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படுதப்பட்டுவரும் ஒரு கற்றல் செயற்பாடாகும். இந்நாடுகளில் பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள் யுத்தம், வறுமை, வசதியற்ற சூழ்நிலை போன்ற பல காரணங்களினால் தமது கல்வியை இழந்துள்ளனர். இதே போன்று எமது நாட்டிலும் பிள்ளைகள் 2, 3 ஆண்டுகள் முறையான கல்வியைப் பெறாது அதனை இழந்துள்ளனர். கல்வியை பற்றிக் கொள்ள வைக்கத்தக்கதாக இப்பிள்ளைகளின் கல்வியினைச் சீர் செய்யுமாறு இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது.

இத்திட்டத்தில் தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய முக்கிய பாடங்களில் கவனம் செலுத்தக்கூடியதாக, கற்பிக்கும் நேரத்தை அதிகரித்தல், பாதிப்புக்குள்ளான சிறுவர்களது உளநலத்தாக்கங்களையும் மனவெழுச்சி

மனவடுக்களையும் மெல்லமெல்ல நீக்கி மீட்டெடுக்கும் நோக்குடன் இலகுவான, மகிழ்ச்சிகரமான செயற்பாட்டு ரீதியிலான கற்பித்தல் முறைகளைப் புகுத்தலும். இரண்டு வருட காலத்திற்குரிய பாடத்திட்டத்தை ஒரு வருடத்துள் நிறைவு செய்யக் கூடியதாக முக்கியமான விடயங்களை ஒருங்கிணைத்து கற்பித்தல் என்பவை பிரதான நடைமுறையாக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த இலகுவான வகையில் ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கைந்நூலும், ஆசிரியர் கைந்நூலும் வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டன. மாணவர்கள் வழமையான பாடப்புத்தகங்களையே பயன்படுத்தினர்.

இத்திட்டம் ED/03/37/12/12/ALP இலக்க 2011.02.10 திகதி கல்வியமைச்சின் சுற்று நிருபத்தின் மூலம் அங்கிகரிக்கப்பட்டு வடக்கு, கிழக்கு மகாணங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. தேர்ச்சி அடிப்படையில் இனங்காணப்பட்ட மாணவர்கள் தனியான வகுப்பில் அனுமதிக்கப்பட்டு துரித கற்றல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டனர். சில பாடசாலைகளில் முழு வகுப்பு மாணவர்களும் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் இணைக்கப்பட்டனர். இதனை நடைமுறைப்படுத்துவதற்கான சுதந்திரம் அப்பாடசாலைக்கு வழங்கப்பட்டது. பாடசாலைகள் ஒவ்வொரு நிலை முடிவிலும் தமது பிள்ளைகளை மதிப்பீடு செய்கின்றனர். அதே வேளை பொதுப் பரீட்சை இத்திட்டத்தின் குறிக்கோளை மதிப்பிடவும் நிகழ்சித்திட்டத்தின் தரத்தை நிச்சயிக்கவும் உதவியது.

இன்று யுத்த அனர்த்தம் நிகழ்ந்துவரும் பல நாடுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் துரித கற்றல் நிகழ்ச்சித்திட்டம் தெற்காசியாவில் இலங்கையில் அதுவும் வடகிழக்கு மாகாணங்களில் இருந்து உருவாக்கப்பட்டு பகிரப்பட்டது என்பது உண்மையில் பெருமை சேர்க்கக்கூடியதாகும்.

## இல்ல மையக் கற்றல் செயற்பாடுகள்

அனைவருக்கும் கல்வி என்ற எண்ணக்கரு சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமானால் பாடசாலைக்கு வெளியிலும் கல்வி கற்கக்கூடிய சூழல், ஏது நிலை ஏற்படுதல் வேண்டும். முறைசார்ந்ததாகவும் முறையில் முறையிலும் கற்றலுக்கான சந்தர்ப்பம் எல்லோருக்கும் அல்லது கல்வித்தேவையிருப்பவர்கள் அனைவருக்கும் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

இவ்வாறான ஒரு அடிப்படையில் நோக்கினால், இதற்கு வலுச்சேர்ப்பதாக அமையும் ஒரு கற்றல் முறையாக இல்லமையக் கற்றல் செயற்பாட்டைக் குறிப்பிட முடியும்.

சுதந்திரமான வீட்டை மையமாகக் கொண்ட கற்றல் முறைமை என இவ் இல்லமையக் கல்வியை அல்லது கற்றலைக் குறிப்பிட இயலும். யுத்தம் அல்லது வன்முறை அனர்த்தம், வறுமை போன்ற பல காரணங்களினால் சிறார்கள் தமது கல்விக் காலங்களை அதிலும் குறிப்பாக பாடசாலைக் கல்வியை இழந்து விடுகின்றனர். குடும்ப நிலைமை சில வேளைகளில் அவர்களைச் சிறுவர் தொழிலாளர்களாக மாற்றிவிடுகின்றது. நாட்டு நிலமை சில வேளைகளில் அவர்களை வன்முறையாளர்களாக அல்லது ஆயுததாரிகளாக மாற்றிவிடுகின்றது அல்லது சமூகச் சீரழிவை ஏற்படுத்தக் கூடிய பொருத்தமற்றவர்களாக மாற்றி விடுகின்றது.

இவ்வாறாக பாடசாலைக் கல்வியை இழந்தவர்கள், மறுக்கப்பட்டவர்கள், இடைவிலகியவர்கள் எல்லோருக்கான ஒரு மாற்று உபாயமாக இல்லமையக் கற்றல் முறையும் திறந்த பாடசாலை முறையும் பயன்படுத்தப்படுகின்றது. இல்ல மையக்கற்றல் செயற்பாட்டில் பங்கு பற்றும் சிறுவன் பாடசாலைக்குப் போகாத சிறுவனாக இருக்க வேண்டும் என்ற

கட்டாயம் ஏதுமில்லை. பகல் பொழுதில் பாடசாலைக்கு செல்லும் மாணவனும் கூட மாலையில் இவ் இல்லமைய கற்றல் செயற்பாட்டில் ஈடுபட முடியும். சமூகத்திலுள்ள எல்லோருக்கும் கல்வி என்ற எண்ணக் கருவை அர்த்தமுள்ளதாகச் செயற்படுத்துவதற்கு இல்லமையப் பாடசாலை அல்லது இல்லமையக் கற்றல் சிறந்த ஒன்றாகும்.

இல்லமையக் கற்றல் முறையில் கற்றலை அமுல்படுத்தும் பொறுப்பு பாடசாலை என்ற நிறுவனக் கட்டமைப்பில் இருந்து விடுபட்டு அம்மாணவனின் பெற்றோர், சகோதரர்கள் அல்லது கிராம முன்னேற்ற உறுப்பினர் என்போரிடம் செல்கின்றது. அதனைவிட அம்மாணவரிடமும் பெருமளவு பொறுப்பு ஒப்படைக்கப்படுகின்றது.

இல்லமையக் கற்றல் முறையில் பாடசாலையில் பயன்படுத்தப்படும் பாடப்புத்தகங்களுக்கு மாற்றாக மிகவும் இலகு படுத்தப்பட்ட செயற்பாட்டுப் புத்தகங்கள் தேவைப்படுகின்றன. இப் புத்தகங்கள் பல வர்ணம் கொண்ட வையாகவும், பெரிய எழுத் துக்களைக் கொண்ட வையாகவும் இலகுவான கவர்ச்சி கரமானவையாகவும் இருத்தல் வேண்டும். மாணவர்களுக்கு இது மிகவும் சுலபமான, விருப்பமான, தம்மால் இலகுவில் செய்து முடிக்கக்கூடிய செயற்பாடுகள் நிறைந்த புத்தகம் என்ற சிந்தனையை தரும் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

இல்லமைய கற்றல் என்பது பாடசாலையை நோக்கி மாணவரை செலுத்தக் கூடிய இடைக்கால ஒரு ஏற்பாடாகக் கருத முடியும். கற்றல் தொடர்பான நம்பிக்கையையும் ஆர்வத்தையும் விருப்பத்தையும் இம்முறை ஏற்படுத்துவதனால் அடுத்தகட்டமாக அவர்களை பாடசாலைக்குள் அல்லது பாடசாலைக் கல்விக்குள் செலுத்துவது இலகுவானதாகும்.

அனர்த்தங்களின் போது அயல் வீடுகளைச் சேர்ந்த மாணவர்கள் ஒரு வீட்டில் குழுமி இத்தகைய கற்றல்

கையேடுகளை பயன்படுத்தி கற்றலில் ஈடுபட்ட பல சந்தர்ப்பங்கள் எமது நாட்டில் உண்டு. தேசிய கல்வி நிறவனத்தின் அனுசரணையுடன் இல்ல மையக்கற்றல் கையேடுகள் தயாரிக்கப்பட்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

இல்லமையக் கற்றல் முறைக்கு பாடசாலை ஆசிரியரும் ஒத்தாசையாக இருக்க இயலும். பாடசாலைகள் இயங்க முடியாத காலப்பகுதியில் மாணவர் குழுக்களை அவர்களது இல்ல மட்டத்தில் உருவாக்கி அவர்களுடன் இணைந்து அவர்களுக்கு கல்வியைப் போதித்த ஆசிரியர்கள் பலர் பாடசாலை கட்டமைப்புக்கு வெளியே மாணவர்கள் கற்பதில் கூடுதலான ஆர்வம் காட்டுகின்றனர் என்ற உண்மையினைக் கூறியுள்ளனர். இது புறத்தடைகள் குறைந்த சுதந்திரமான விருப்புடனான கற்றலாக அச்சந்தர்ப்பத்தில் கருதப்பட்டுள்ளது.

அவசர நிலைமைக்காலங்களில் அவசர நிலைக் கல்வியின் ஒரு முறையாக இல்லமையக் கற்றல் செயற்பாடு கருதப்பட்டது. பயனையும் அது ஏற்படுத்தியது.

வளர்சியடைந்த மேற்கு நாடுகளைப் பொறுத்த வரையில் இல்ல மையக்கற்றல் செயற்பாடு என்பது கணனி மையப்படுத்தப்பட்ட [Elearning Method] இணையத்தள கற்றல் முறையாகவே உள்ளது. பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்ப விரும்பாத "பழமை பேண்" சமூதாயத்தை சேர்ந்தவர்கள் தாமே வீட்டில் வைத்து தமது பிள்ளைகளைக் கற்பிக்கின்றனர். இதற்கு Online Learning / Life line எனப் பல பெயர்களைக் குறிப்பிடுகின்றனர். ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரை இது ஒரு அவசர நிலைக்கல்வியாகவே பயன்படுத்தப்பட்டது என்பதை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானது.

அத்தியாயம் மூன்று

# “மனப்பதிவு”



கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்து இவ்வுலகு

(தத்தமது கடமைகளாகிய தொழில் கெடாமல் கருமமே கண்ணாக கண்ணோட்டம் உடையதாக இருக்கவல்லவர்களுக்கே இவ்வுலகம் உரிமையானது)

## உயிர்ப்பான வகுப்பு

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் அடிப்படை அமைப்பில் வகுப்பறை முக்கியமான ஒன்றாகும். வகுப்பறை என்பது கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியருக்கும், கற்றலில் ஈடுபடும் மாணவருக்கும் இடையிலான உறவுக்குரிய இடம். இடைவினைக்குரிய இடம்.

ஆசிரியர் தான் கொண்டுள்ள பயிற்சி, அறிவு, ஆளுமை, கற்பித்தல் முறையியல் போன்ற விசேட தன்மைகளால் மாணவரிடத்து தூண்டுதல்களை ஏற்படுத்தும் இடம். மாணவன் கொண்டுள்ள விருப்பு, வெறுப்பு, அவா, வினாக்கள் என்பவற்றிற்கு தானாகவும், பட்டறிவாலும், பரிசோதனை முயற்சிகளாலும் ஆசிரியர்களின் அனுபவங்களாலும் சிந்தனைச் கிழறல்களாலும் தீனி கிடைக்கும் இடம்.

மொத்தமாக வகுப்பறை என்பது அங்கு கற்றலில் ஈடுபடும் மாணவர் கற்பித்தலில் இடுபடும் ஆசிரியர் இருவருமே மகிழ்வுடன் இணைந்து காரியமாற்றும் உயிர்ப்பான இடம் எனக்கூறலாம்.

வகுப்பறை என்பது செயற்றிறன் மிக்க (Active) ஒன்றாக இருத்தல் வேண்டும். ஒரு செயற்றிறன் மிக்க வகுப்பறையின் அசைவு என்பது உயிர்ப்பாக இருத்தல் அல்லது உயிரோட்டமாக இருத்தல் என்ற பொருளில் கருதப்படலாம்.

அந்த வகுப்பறை அங்கு பயில்கின்ற மாணவர்களினதும், அங்கு கற்பிக்கின்ற தொழில் புரிகின்ற ஆசிரியர்களினதும் ஒன்றிணைந்த உற்சாகமான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினாலேயே உயிர்ப்பான ஒன்றாகின்றது.

அவ்வாறான உயிர்ப்பான ஒன்றாக இல்லாது விடின் வகுப்பறை என்ற சொல் வெறுமனே கதிரை, மேசை போன்ற தளபாடங்கள் நிறைந்த பௌதீக ரீதியான ஒரு உயிரற்ற கட்டிடத்தைக் குறிப்பதாகவே அமைந்துவிடும். உணர்வுகள் அற்ற ஜடமான கட்டிடத்தை ஆராய்வதல்ல எமது நோக்கம். உயிர்ப்பான வகுப்பறையின் உள்ளீடுகளை கண்டறிவதாகவே உள்ளது.

1. **மாணவர்கள் பரஸ்பர உணர்வுகளை வெளிப்படுத்தும் இடமாக காணப்படதல்.**

2. **வகுப்பறைச் செயற்பாடுகளில் ஆசிரியரும் பங்காளியாக செயற்படுதல்.**

3. **பாடசாலை சமூகத்திற்கு உரியதாக இருத்தல்.**

4. **மாணவரைக் கவர்ந்த இடமாக பாடசாலை இருத்தல்.**

5. **பெற்றோரது ஒன்றிப்பு பாடசாலையில் இருத்தல்.**

6. **வயதிற்கும் வகுப்புக்கும் உரிய தேர்ச்சியை மாணவர்கள் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்தல்.**

## உணர்வுகளை வெளிப்படுத்தும் இடமாக்குதல்

ஆரம்ப வகுப்பு மாணவர்களின் வகுப்பறை என்பது மிகவும் மகிழ்ச்சியான சூழல் நிலவும் இடமாகுதல் வேண்டும். வெவ்வேறு சூழல்களில் இருந்தும் வருகை தரும் பலவிதமான சிறார்களின் உணர்வுகளும் ஒன்றுசேருகின்ற இடம். இங்கு இடம் பெற வேண்டியது மகிழ்சிகரமான உணர்வும் பகிர்வும், அந்நியோன்யமான பரஸ்பர பகிர்வு.

மாணவர்கள் அனைவரும் தமது உள்ளத்து உணர்வுகளை மகிழ்ச்சியை அல்லது விருப்பை அல்லது வெறுப்பை என எல்லாவிதமான உணர்வுகளையும் வெளிப்படுத்தக்கூடியதான சுதந்திரமான இடமாக தடைகளற்ற சூழல் நிறைந்த இடமாக வகுப்பறை அமைக்கின்ற போது தான் மாணவர்களின் ஆற்றல்கள் கிளறப்படுகின்றன. மாணவர்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.

மாணவர்களுக்கிடையில் மாத்திரமன்றி மாணவர் களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் இப்பகிர்வும் உறவும் இருத்தல் வேண்டும். ஆனால் ஆசிரியருக்கும் மாணவருக்குமான இந்த இறுக்கமான உறவு பல பாடசாலைகளில் புரிந்து கொள்ளப்படாத நிலையில் பிரச்சினைகளுக்குக் காரணமாகின்றன.

பாடசாலைகளில் கண்டிப்பு டிசிப்பிளின் (Discipline) என்ற வெறும் உணர்வற்ற வார்த்தைகளினால் உறவு அழித் தொழிக்கப்படுகின்றன. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான உறவு நீடிக்கும் போது மாணவன் ஒழுங்குபடுத்தப்படுகின்றான்.

சுய கட்டுப்பாடு அல்லது விழுமியங்களை ஏற்று ஒழுகுதல் என்பவை எல்லாம் இயல்பாகவே உருவாகத் தொடங்கும். சரியான முறையில் மாணவனுடனான உண்மையான அன்பு வளர்க்கப்பட்டால் ஆசிரியரால் இது இயலும். ஆசிரிய மாணவ உறவு மேம்பாடடைவதற்கு ஆசிரியரின் பங்குபற்றல் என்பது பிரதான ஒன்றாகவுள்ளது.

மாணவனின் புற வடிவை, புற நிலையை எல்லா ஆசிரியர்களுமே அறிவர். ஆனால் அவனது அக் வடிவை, அகநிலையை அறிவதென்பதுதான் இங்கு அவனை சாதனையாளனாக்குவதற்கான அடிப்படையாக அமையும். அவனது விருப்பம், இயலுமை, கோபம், வெறுப்பு என எல்லா நுன்மை (Sensitive) யான அதிர்வுகளையும் ஆசிரியர் அறிவது மிக அவசியம். இது தான் உண்மையில் பிள்ளையை அறிந்து கொள்வோம் என்ற அடிப்படைச் செயற்பாடாகும். (To feel the student)

# ஆசிரியரும் ஒரு பங்காளி

வகுப்பறையில் - செயற்பாடுகளில் ஆசிரியர் வழிகாட்டியாக மட்டுமல்லாமல் பங்காளியாகவும் பங்குபற்றுதல் மிக முக்கியமானது. இது பாட விடயங்களில் மட்டுமல்லாது வகுப்பறையில் நிலவும் எவ்விதமான வேலைகளிலும் செயற்பாடுகளிலும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். ஒரு பாடசாலையில் கரும்பலகையினை ஆசிரியர்களும் சிறார்களும் இணைந்து கருஞ்சாய வர்ணம் பூசினர். ஒவ்வொரு பிள்ளையும் ஒரு முறை தூரிகையினைப் பிடித்து பெயின்ட் (Paint) செய்த போது அவர்கள் அடைந்த மகிழ்ச்சி பெரியது பாடசாலையில் நடைபெறும் சகல விடயங்களிலும் மாணவர் ஆசிரியர் பங்குதாரர்களாகும் போது கற்றல் நிகழும்.

இன்னும் ஒரு பாடசாலையில் கறியமுது செய்தனர். எல்லாப் பிள்ளைகளும் வகுப்பறையில் தமது இருக்கையிலிருந்து ஏதோ செய்ய, பாவம் ஆசிரியர் கறி வகைகளைக் கழுவி, வெட்டி, அடுப்பெரித்து கறியமுது செய்து முடித்தார். பிள்ளைகள் உண்பதற்கு முன்னரேயே பாடசாலை விடும் நேரம் வந்து விட்டது. அந் நிகழ்வு பிள்ளைகளுக்கு அன்று ஒரு கற்றல் செயற்பாடாக இருக்கவில்லை.

உண்மையில் இந்தச் செயற்பாடு ஒரு கற்றல் அனுபவத்தை அல்லது புதிய அனுபவத்தையும், திருப்தியையும் ஏற்படுத்தியிருக்க வேண்டும். குழுவாகப் பிள்ளைகளைப் பிரித்து குழுக்களுக்கு வேலைகளைப் பகிர்ந்து கொடுத்துத் தானும் பிள்ளைகளுக்கு ஆபத்து ஏதும் நேராத வகையில். கண்காணித்து அவர்களுடன் இணைந்து செயற்பட்டிருந்தால் அது பிள்ளைகளுக்கு ஒரு அனுபவத்தை வழங்கியிருக்கும்.

தாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து தங்களது ஆசிரியருடன் இணைந்து சமைத்தோம் அதனை விருப்புடன் பரிமாறி உண்டோம் என்ற திருப்தி ஏற்பட்டிருக்கும். இவ்விதமான பங்குபற்றல் எல்லா விடயங்களிலும் ஏற்படுதல் வேண்டும். பாடசாலையில், வகுப்பறையில் தூய்மை, சுகாதாரம் பேணுதல், தோட்டப் பராமரிப்பு என்பவையும் கூட இவ்வாறான பங்குபற்றலுடனான செயற்பாடுகளின் மூலம் கற்றல் அனுபவமாகவும், ஆசிரிய மாணவ ஆழமான உறவின் வெளிப்பாடாகவும் அமையும்.

## சமுகத்திற்கு உரியதான பாடசாலைச் சூழலை ஏற்படுத்தல்

வகுப்பறை, பாடசாலை, குடும்பம் என்பவற்றிற் கிடையிலான கட்டமைப்பு நெருக்கமானதாக இருத்தல் வேண்டும். மாணவருக்கு பாடசாலை எந்தளவிற்கு விருப்புக்குரிய இடமாக மாறுகின்றதோ அதேயளவில் அது மாணவர்களின் பெற்றோருக்கும் இருத்தல் வேண்டும்.

அவ்வாறாயின் பாடசாலை பெற்றோருக்கும் சமுகத்திற்கும் கூட திறந்து விடப்பட்டதாக இருத்தல் வேண்டும். பாடசாலையின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் பெற்றோர் விருப்புடனும், உரிமையுடனும் பங்கு பற்றுகின்றார்களா? பங்காளிகளாகச் செயற்பட அதிபரின் முனைப்பும், செயற்திறனும் துணை செய்யும். இவை பாடசாலையின் மேம்பாட்டிற்கு வழி செய்யும்.

ஆசிரியருக்கும் பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் மாணவருக்கும், ஆசிரியருக்கும் அதிபருக்கும் உள்ள உறவு நிலை ஒரு கூட்டுக் குடும்ப உறவு நிலை போல் எல்லோரும் அவரது நிலையில் பாடசாலையின் முன்னேற்றத்திற்கு தமக்குரிய பங்கினை சரி செய்பவர்களாக இருத்தல் வேண்டும். இங்கு உள்ளார்ந்த விருப்பும் தன்னலம் கருதாத செயற்பாடும் முக்கியமானது. பாடசாலைகள் அது அமைந்துள்ள பிரதேசத்தின், பாடசாலைச் சூழலின் பொருளாதார நிலையில் தாக்கத்தைச் செலுத்தக் கூடியதாக மாறுதல் வேண்டும்.

உதாரணமாக: தாய்லாந்து நாட்டில் ஷன்மய் நகரத்திலுள்ள பாடசாலையின் சூழலை நோக்கினால் மூங்கில் காடுகள் நிறைந்த சூழலில் உள்ள இப் பாடசாலையின் பொருளாதார முக்கியம் என்ன என்றால் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் பாடசாலைகளால் நடாத்தப்படும்

மூங்கிலை மூலப்பொருளாகக் கொண்ட நிறுவனத்திலேயே வேலை செய்வதாகும். அந்நிறுவனத்தின் இலாபம் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறான ஒரு சுற்றுவடிவமான பொருளாதாரத்தன்மையும் கல்வியும் இணைந்து செயற்படுவது நல்ல ஒரு முன்னோடியாகும்.

பாடசாலை மட்டத்திலான முகாமைத்துவம் என்பது வலுப்படுத்தப்படும் போது சுய நிதியீட்டும் நிறுவனமாக மாறிக்கொள்ளும் தன்மை ஏற்படும். ஆயினும் இத்தகைய ஒரு நிலை ஏற்படும் போது பாடசாலைகள் இலாபம் தரக்கூடிய தொழில் துறைகளில் முதலீடு செய்வதன் மூலமாக நிதியினை பெறுதல் வேண்டுமே தவிர மாணவர்களை அனுமதிப்பதற்காக பெருமளவு நிதியை கேட்கின்ற மாணவரின் நிதியில் தங்கியிருக்கின்ற நிறுவனங்களாக மாறுதல் கூடாது.

## "பிள்ளைகளை அறிந்துள்ளோமா"

பாடசாலை சரியான நேரத்திற்கு தொடங்குகிறதா?......
ஆசிரியர்கள் வகுப்பறைக்குச் செல்கிறார்களா?......
பாடக்குறிப்பு, பாடத்திட்டம், நேரசூசி என்பவை ஒழுங்காக உள்ளதா?

உரிய காலங்களில் பரீட்சைகள் நடைபெறுகின்றதா?....

இப்படியான காட்டிகள் (செக்லிஸ்ட்) எப்படி System நடைபெறுகின்றது என்பதைக் காட்டும். உண்மையில் இவையெல்லாம் ஒழுங்காக இருந்தால் எல்லாம் சரியாக நடைபெறுகின்றது என்ற அர்த்தமா? இது தான் முன்னைய பல வருட நடைமுறையாக இருந்தது. இன்னும் இருக்கின்றது.

இங்கு எப்படி System நடைபெறுகின்றது என்பது கவனிக்கப்பட்டதே தவிர எப்படிப் பிள்ளை இருக்கின்றது என்பது பற்றியல்ல........ வெறும் பரீட்சைக்குத் தயார் செய்வதுஎன்பதல்ல பிரதான நோக்கம் ..... பிள்ளை பரீட்சையில் சிறப்பாகச் செயற்படுவதற்கான திறன்களை, மனப்பாங்கை, நம்பிக்கையினை வளர்த்துக் கொள்வதே பிரதான நோக்கம்.

எனவே அதனடிப்படையில் பல விடயங்களில் ஆசிரியருக்கும் அதிபருக்கும் பெற்றோருக்கும் கூட தெளிவு வேண்டும். பிள்ளை விருப்புடன் கற்கின்றானா? பிள்ளை சமூக இசைவாக்கத்துடன் பழகுகின்றானா? ஏதேனும் காரணத்தால் பாடசாலைச் சூழலைக் கண்டு பயப்படுகின்றானா? சுதந்திரமாகச் செயற்பாடுகளில் பங்குபற்றுகின்றானா? இவைதான் பிள்ளையின் நிலைபற்றியறிய உதவும் காட்டிகள்.....

## பாடசாலை என்பது பெற்றோருக்கும் உரியதே

பாடசாலை என்பது பிள்ளைகளுக்குரியது மட்டுமல்ல அது பெற்றோர்களுக்கானதும் ஆகும். பாடசாலையில் சுதந்திரமாக தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டில் அனுசரணை புரியவும் ஆசிரியருக்கு உதவியாகச் செயற்படுவதிலும் பெற்றோர்கள் நல்ல பங்களிப்பை வழங்க முடியும். இது பெற்றோருக்கு பாடசாலைக்குள் வரவும், பங்கு பற்றவும் அனுமதி வழங்கும் போது தான் ஏற்படும்.

அவர்களை நல்ல முறையில் பயன்படுத்தி பங்காளிகளாக்குதல் இயலும். அதுமட்டுமல்ல நாளாந்த வகுப்பறைச் செயற்பாட்டில் 35 முதல் 45 வரையான பிள்ளைகளை ஒரு ஆசிரியரால் முழுமையாகக் கவனிக்க (எல்லா விடயங்களிலும்) முடியாமல் போகலாம். அதற்கான ஆளுமை, முன்திட்டமிட்ட செயற்பாடும், திறனும் இல்லாதிருக்கலாம் இவ்வேளையில் பிள்ளைகளின் பெற்றோர்களில் வீட்டிலிருக்கின்ற கல்வியறிவுடைய பெற்றோர்களில் சிலரை வாரத்திற்கு ஒரு நாள் வீதம் ஒருவரை என்ற வகையில் ஒரு நேரசூசிக்கு அமைவாக பயன்படுத்த முடியும்.

அவர்கள் வகுப்பறையில் ஆசிரியர்களுக்கு உதவியாகத் தொழிற்படுவர். அவருடைய பிள்ளையும் அதே வகுப்பில் இருப்பதால் இயல்பான கரிசனையும், உண்மையும், நேர்மையான, விருப்பத்துடனான செயற்பாடாக அவருக்கு அது அமையும்.

உதாரணமாக: மாணவருக்கான உணவு தயாரிப்பதிலும் பகிர்வதிலும் வாரத்திற்கு ஒரு குழு என்ற வகையில் பல பாடசாலைகளில் அட்டவணை போடப்பட்டு செயற் படுத்தப்படுகின்றது.

இதை விட கற்றல் கற்பித்தல் உபகரணங்களை தயார் செய்வதிலும் பெற்றோரை மிகவும் இலாவகமாக பயன்படுத்திக் கொள்ள முடியும். அண்மையில் ஒரு பாடசாலையில் ஒரு செயலமர்வு நடைபெற்றது. ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகரின் துணையுடன் குறித்த பாடசாலையில் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் பெற்றோர்களே அதில் பங்கு பற்றி இருந்தனர். தமது பிள்ளைகள் வகுப்பறையில் பயன்படுத்துவதற்கான கற்றல் உபகரணங்களை ஆசிரியரின் வழிகாட்டலில் செய்தனர்.

ஆசிரியர் குறித்த பாடத்தில் ஒவ்வொரு அலகிற்கும் அவ்வலகில் குறிப்பிட்ட விடயத்தில் பிள்ளை தெளிவாக விளங்கிக் கொள்ளவும், விருப்புடன் அவ்விடயத்தில் பங்குபற்றி உரிய தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளவும் உதவக்கூடிய கற்றல் உபகரணங்களை Learning materials மாதிரிக்கு ஒன்றாக தான் தயாரித்து அதனை அங்கு வந்த பெற்றோரிடம் கொடுத்து ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒன்று வீதம் பயன்படுத்தக் கூடிய வகையில் தயாரிக்க வழிப்படுத்தினார். பெற்றோர்கள் மிக மகிழ்ச்சியுடன் செயற்பட்டனர்.

தமது பிள்ளைகள் எவ்விதமாக கற்கின்றனர் என்பதையும் அவர்கள் அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. இவ்வளவிற்கும் அப்பிரதேசம் மிகப்பின்தங்கிய ஒரு கரையோரப் பிரதேசமாகும். எல்லோருமே வீட்டுப் பெண்களாகவே இருந்தனர். பெரியளவில் உயர் கல்வியெதனையும் கற்றுக் கொள்ளாதவர்கள், ஆனால் அங்கு செயறபட்டனர். தமது பிள்ளைகளுக்காக என்ற விருப்பு அங்கு முனைப்புப் பெற்றிருந்தது.

## பாடசாலை மாணவர்களை கவரவில்லையா?

பாடசாலை அல்லது வகுப்பறை மாணவர்களுக்கு கவர்சியற்றதாகின்றதா?.... இக்கேள்வியை ஒரு முதிர்ந்த ஆசிரியர் என்னிடம் கேட்டார். அவர் ஆசிரியராக அதுவும் ஆரம்பக்கல்வி ஆசிரியராக இருந்து பல வருட அனுபவம் பெற்றிருந்தவர். உண்மையில் அவர் தனது பாடசாலைக் காலங்களை நினைவு கூர்ந்தும் தான் கறபித்த காலங்களை மனதில் நிறுத்தியும் பல மன விசாரங்களுக்குப் பின்பே இம் முடிவுக்கு வந்ததாகக் கூறினார். இன்றைய ஆரம்ப பாடசாலைகள் மாணவர்களுக்கு கவர்ச்சியாக இல்லை என்பதே அது. என்னைப் பொறுத்தவரையில் இது மிகவும் ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமாகின்றது.

கல்வி முறையில் அவர் குறிப்பிட்ட காலத்திற்கும் இன்றைய நடைமுறைக்கால கல்வி முறைக்கும் பாரிய வேறுபாடுகள் உள்ளன. பண்டைய கல்வி முறையில் பாடவிதானமும் பரீட்சைப் பெறுபேறுகளும் முக்கியப் படுத்தப்பட்டன.

### Traditional Education Perspection
### Input (Curriculum) - Out put (Scores)

பரீட்சை நோக்கிலான ஆசிரியர் மையக்கல்வி முக்கியப்படுத்தப்பட்டிருந்தது. தரமான கல்வியமைப்பை (Quality Education System) உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. எனவே வகுப்பறைகள் அமைதிக் கூடங்களாக இருந்தன. ஒழுக்கமும் கடுமையாக வலியுறுத்தப்பட்டது. பாடசாலை மாணவர்களுக்கு பயமும் பக்தியும் நிறைந்த உணர்வூட்டும் இடமாக்கப்பட்டது. தண்டனை பகிரங்கமாகவும்,

தனிப்பட்ட ரிதியிலும் வலியுறுத்தப்பட்டது. ஆனாலும் மாணவர்கள் கற்றார்கள், மகிழ்ச்சியாக இருந்தார்கள். அந்த இறுக்கமான டிசிப்பிளினுக்குள்ளும் மாணவர்களுக்கு சுதந்திரம் இருந்தது.

பாடசாலை விட்ட பின்னர் விளையாடினார்கள், பாடசாலையின் மதிய உணவு வேளையின் போது, இடைவேளை நேரங்கள், பாடசாலை விட்டதன் பின்னான நேரங்கள் எவருடைய தலையீடுகளுமின்றி மாணவர்களால் சுதந்திரமாக அனுபவிக்கப்பட்டன. இன்னும் ஒரு காரணம் ரியூசன் வகுப்புக்கள் இல்லை. பாடசாலையில் விடயங்கள் இறுக்கமாகக் கற்பிக்கப்பட்டன. ஏனைய நேரங்களில் மாணவர்கள் வாழ்க்கையை அனுபவத்தால் கற்றார்கள்.

இன்றைய பாடசாலைகளை சற்று நோக்குவோம். பிள்ளைமையக் கல்வி கற்றலுக்கான கற்றல் தேர்ச்சி மையக்கல்வி பாடசாலைகளும் வகுப்பறைகளும் சட்டபூர்வமாக மகிழ்ச்சிகரமான சூழலுக்கு இட்டுச் செல்லப்பட வேண்டிய நியமங்களுக்குள் உட்படுகின்றன.

பிரம்படி தடை செய்யப்படுகின்றது ஆனால் பிள்ளைகள் சுதந்திரமாகப் பாடசாலைகளில் இல்லை, ஓய்வு நேரங்களில் விளையாடுவது இல்லை பாடசாலை விட்ட பின் பாடசாலைகளில் காகம் கூட குழுமவில்லை.

அவர்களின் இயல்பான அப்பருவத்து உணர்வுகள் அழிந்து போய் அவர்களே அறியாத விடயங்களாகி விட்டன. தரம் 1 பிள்ளை 12 மணிக்கு பாடசாலை விட்டு வந்து உணவு உண்டு 2 மணிக்கு அடுத்த பையைக் கொழுவிக்கொண்டு தனது டியூட்டிக்கு புறப்படுகின்றது. மீண்டும் 5 அல்லது 6 மணிக்கு வீடு திரும்புகின்றது. இது தான் இன்றைய நிலை.

இயற்கையாக இயல்பாகப் பிள்ளை அனுபவித்துக் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் பல பிள்ளைகளுக்கு இன்று கிட்டாமலே போய்விட்டன. பாடசாலை, ரியூட்டறி, வீடு, தெரிந்த அயல்வீட்டு அக்கா, மிச்சத்துக்கு வீட்டில் அம்மா என எல்லோருமே பிள்ளைகளுக்கு கல்வி புகட்டும் ஆசிரியர்களாகி செரிப்பதற்கு இடம் வைக்காமல் இடிப்பவர்களாகிவிட்டனர். பிள்ளைக்கான எல்லாத் தீர்மானங்களையும் அவர்களே எடுக்கின்றனர். பிள்ளையின் நிலை பற்றி ஒருவருமே கருத்திற்கு எடுப்பதில்லை. அவ்வாறாயின் அவர்கள் ஸ்கோ (scor) றை மட்டும் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

## தேர்ச்சி மையக்கல்வி

உடல் உளக்குறைபாடுகளற்ற எல்லாப் பிள்ளைகளும் தமது வயதிற்கு ஏற்ற பாட ரீதியானதும், அத்தியா வசியமானதுமான அடைய வேண்டிய தேர்ச்சிகளை அடைவதற்கான தன்மைகள் பொருந்தியவர்கள்.

இங்கு தேர்ச்சி என்பது ஒரு குறித்த விடயத்திலே பிள்ளையை ஈடுபட வைப்பதற்கான சூழலை உருவாக்கி அதில் பிள்ளையை ஈடுபடுத்தி அது பற்றிய அறிவு பூர்வமானதும் உணர்வு பூர்வமானதுமான அனுபவத்தைப் பிள்ளையிடம் ஏற்பட வைத்தல். இத்தகைய ஒரு சூழலுக்குள் அனுபவத்தைப் பெறும் பிள்ளை அவ்விடயம் பற்றி நன்கு அறிந்து கொள்கின்றது. அறிந்த விடயத்தை பிறருக்குக் கூறவும் பிறிதொரு இடத்தில் பிரயோகிக்கவும் முயல்கின்றது. இதுதான் அவ்விடயம் தொடர்பாக பிள்ளை கொண்டுள்ள தேர்ச்சி எனலாம்.

இதிலே முக்கியமான விடயம் என்னவெனில் நேற்றைக்குக் குறித்த விடயத்தில் அடைந்திராத தேர்ச்சியை இன்று அப்பிள்ளை அடைந்துள்ளது. என்பதும் நாளை இன்னும் கூடுதலான முறையில் சிறப்புத் தேர்ச்சியை பெற்றுவிட ஆசிரியர் சூழலை ஏற்படுத்தி (வசதி ஏற்படுத்துவர்) விடுவார் என்பதும் ஆகும்.

அதாவது பிள்ளை அடைந்த தேர்ச்சியை அதே பிள்ளையின் முன்னைய நிலைக்கும் பின்னைய நிலைக்குமே ஒப்பிட வேண்டும் என்பது. ஆனால் இன்றும் பாடசாலைகளில் பிள்ளைகளை வேறு பிள்ளைகளுடனேயே ஒப்பிடுதல் நடைபெறுகின்றது. எனவே தேர்ச்சி பற்றிய சரியான தெளிவு ஆசிரியர்களிடம் சேரச்செய்தல் அவசியமாகின்றது. குறித்த அறிவு பிள்ளையின் அனுபவங்களுக்குள் உட்படுத்தப்பட்டு தேவையான

சந்தர்ப்பங்களில் உபயோகிக்கப்படக்கூடியவாறு பிள்ளையினால் உள்ளெடுக்கப்பட்டுள்ளதா? அல்லது தொடர்பான பிறரது அனுபவங்கள், செய்திகள், பிரச்சினைகளில் ஒப்பிடப்பட்டு பிள்ளையினால் பயன்படுத்தப்பட ஏதுவாக உள்ளதா? அத்தகைய தேர்ச்சி உள்ளதா? என்பதை ஆசிரியர் கண்டு கொள்வதே கணிப்பீடு. அதைவிடுத்து கரும்பலகையில் தான் எழுதியதை மீண்டும் பிள்ளை எழுதிக்காட்டுகின்றதா என்று பார்ப்பதல்ல. கணிப்பீட்டுக் கலாசாரம் ஆசிரியர்களிடையே ஆரோக்கியமாகப் பரவுதல் வேண்டும்.

# தேர்ச்சிகளும் – குறிகாட்டிகளும்

இது ஒரு தனிப்பட்ட செயற்பாடல்ல. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுடன் இணைந்த ஒன்றே எனலாம். கற்றலுக்கூடாக மாணவர்களும் ஆசிரியர்களும் அடைய வேண்டிய பெறுபேறுகளை சரியான நேரத்தில் தருணத்தில் அடைந்துள்ளனரா என்பதை ஒரு செக்லிஸ்டாக பார்ப்பது மட்டும் மேற்பார்வையல்ல. மாணவர் மட்டத்தில் அவர்கள் அடையும் பெறுபேற்றையும் அடைவையும் மட்டும் நோக்காகக் கொள்ள முடியாது.

இவை எல்லாவற்றினதும் ஒட்டு மொத்த மாற்றமே சுயமாக ஒவ்வொருவராலும் அவதானிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறாயின் இக்கண்காணிப்புத் திட்டத்தில் இக்கல்விச் செயற்பாட்டின் அனைத்துப் பங்குபற்றுனரும் உள்ளடங்குவர் என்பதும் புலப்படுகின்றது. வகுப்பறையில் நிகழும் கற்றல் செயற்பாட்டின் உடனடி விளைவுகள் என்ன.

மாணவரிடத்து இக்கற்றல் அனுபவம் உடனடியாக எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஆசிரியர் கவனித்தல் வேண்டும். இவ்வுடனடி மாற்றம் தொடர்ச்சியாக நிலவுகின்றதா என்பது பற்றி இடைக்காலத்திலும் நீண்ட காலத்திலும் கண்காணித்தல் வேண்டும். இது ஆசிரியராலும், பாடசாலைச் சமூகத்தினாலும், பெற்றோரினாலும் கூட அவதானிக்கப்படுதல் வேண்டும்.

மாணவன் அடைந்துள்ள தேர்ச்சி என்பது அவன் சமூகத்திற்குள் ஊடாடுகின்ற போதே தெரியவரும். செயற்றிறன், மனப்பாங்கு, அறிவார்ந்த சிந்தனை, சமூக இசைவாக்கம், பொருத்தப்பாடு போன்ற வாழ்க்கைக்கான தேர்ச்சிகளே சமூகத்தை முன்னோக்கிச் செலுத்துகின்ற குறிகாட்டிகளாக அமையும்.

# உட்படுத்தல் கல்வி

பிள்ளை நேயப்பாடசாலை ஒன்றின் அடிப்படைகளில் முதன்மையானது எல்லா மாணவர்களுக்கும் கல்விக்கான சந்தர்ப்பம் கிடைத்தல் என்பதாகும். ஏனெனில் பாடசாலைக்கு வராத பிள்ளைகளினால் எதுவுமே நிகழ்ந்து விடுவதில்லை. அவர்களினால் சூழலில், சமுகத்தில், உலகத்தில் நல்மாற்றங்கள் ஏற்படமுடியாது. அவ்வாறாயின் சமுகபிறழ்விற்கு கல்வி அறிவுஅற்ற அவர்கள் காரணமாகிவிடலாம்.

பாடசாலைக்கு உட்படுத்தப்படும் சிறார்கள் இனரீதியாகவோ. மதரீதியாகவோ, வறுமை காரணமாகவோ, வேறு காரணமாகவோ பாடசாலைக் கல்வியை இழப்பது பொருத்தமற்ற ஒன்றாகும். தவிர்க்கப்படுதல் வேண்டும். இத்தகைய காரணிகளில் பாடசாலைக்கு வெளியில் உள்ள காரணிகள் எனவும் பாடசாலைக்கு உள்ளே உள்ள காரணிகள் எனவும் இருவகைப்படுத்தலாம். வேறு வேறாக இவ் இருகாரணிகளையும் இனம்பிரிக்க கூடியவாறு இருந்தாலும் சிலவேளை இவ் இருகாரணிகளின் இணைப்பாகவும் வேறு ஏதும் காரணிகள் தோன்றக்கூடும் அது மட்டுமல்லாது வெளித்தெரியக்கூடிய காரணிகளாகவும், மறைவாக வெளித் தெரியாத காரணிகளாகவும் இவற்றை அடையாளப்படுத்த முடியும்.

உண்மையில் உட்படுத்தல் கல்வி என்ற பதமானது உடல் ரீதியான பாதிப்பைக் கொண்ட விசேட தேவையுள்ள அல்லது மாற்றுத் திறன் கொண்ட பிள்ளைகளையும் வழமையான பாடசாலைகளுக்குள், வகுப்பறைக்குள் அனுமதித்து அவர்களை சாதாரண பிள்ளைகளுடன் இணைந்து செயற்பட வைத்தல் என்பதாகும். இதன் மூலம் சாதாரண பிள்ளைகளுக்கும் தமது வகுப்பிலுள்ள விசேட தேவையுள்ள பிள்ளைகள் தொடர்பில்

அனுபவமும், நேர் மனப்பாங்கும், கரிசனையும் ஏற்படும். விசேட தேவையுள்ள பிள்ளைகளும் அவர்களின் இயலுமையின் அடிப்படையில் வகுப்பிலுள்ள ஏனைய பிள்ளைகளுடன் உறவாடியும், செயற்படவும் முயற்சிக்க முடிகின்றது. உலகளாவிய ரீதியில் சனத்தொகையில் 2% வீதமானோர் விசேட தேவையுடையவர்களாக இருக்கின்றனர் என குறிப்பிடப் படுகின்றது.

எனவே இவர்களுக்கான கல்வி வாய்ப்பு மறுக்கப்படக் கூடாதது. சாதாரண பிள்ளைகளுடன் வைத்து கற்றல் செயற்பாட்டில் அறவே ஈடுபடுத்த முடியாத விசேட தேவையுள்ள பிள்ளைகள் மாத்திரமே விசேட பாடசாலை அலகுகளில் இணைந்து கொள்ளப்படுவர் ஏனையோர் சாதாரண வகுப்புக்களில் இணைக்கப்பட்டு கல்வி பெறுவர்.

எவ்வாறு எனினும் பிள்ளை நேயப்பாடசாலைகள் அறிமுகப்படுத்தப்பட்ட நாடுகளில் கல்விக்கான வாய்ப்பும் வசதிகளும் குறிப்பிட்டு சொல்லக்கூடியதாக இருக்கும் நாடாக எமது நாட்டையும் சொல்லலாம். எமது நாட்டைப் போன்ற யுத்த அனர்த்தம் நிகழ்ந்த கம்போடியா, வியட்நாம், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலும தாய்லாந்து, இந்தியா போன்ற யுத்தமற்ற நாடுகளிலும் கூட கல்விக்கான வாய்பபளித்தல் என்பது பிரயத்தனம் நிறைந்த ஒன்றாகவே காணப்படுகிறது.

## விடுப்புணர்வை ஏற்படுத்தாத விஞ்ஞான பாடம்

நாட்டில் விஞ்ஞானக் கல்விக்கு முக்கியம் கொடுத்தல் வேண்டும் என்ற கோஷம் கல்வியலாளர்கள், அரசியல்வாதிகளிடத்தே அடிக்கடி எழுகின்றது. உலக வங்கி தனது கடன் நிதிச்செயற்பாட்டில் உயர்மட்ட கல்விச் செயற்பாட்டில், விஞ்ஞான கூடங்கள், mobile விஞ்ஞான பெட்டிகள் ஏனைய இரசாயன பதார்த்தங்கள் வாங்க மாகாணங்களுக்கு நிதி ஆலோசனைப்படி வழங்குகிறது. ஆனால் நடைமுறையில் விஞ்ஞான கூடத்திற்கு வெளியிலேயே விஞ்ஞான பாடம் நடக்கின்றது.

விஞ்ஞான கூடத்திற்காகவும், செயற்பாட்டு வேலைகளுக்காவும் என கட்டப்படுகின்ற அறைகள் நிர்வாக செயற்பாட்டுகளுக்கான அதிபர், உபஅதிபர் அறைகளாகவும், வேறு ஏதேனும் பொருட்களை சேமித்து வைக்கின்ற களஞ்சிய அறைகளாகவும் (Store) பயன்படுத்தப்படுகின்றன.

விஞ்ஞான பாடம் செய்முறை எதுவுமின்றி கரும்பலைகளியிலும், பாடக்குறிப்பு புத்தங்களிலும் மட்டுமான கற்பித்தலாக கற்பிக்கப்படுகின்றது. மாணவர்களுக்கான விடுப்புணர்வையூட்டி புத்தாக்க சிந்தனையை வளர்க்க வேண்டிய இப்பாடம் மாணவர்களுக்கு கடினமானதாகவும், விருப்பமற்றதுமாக மாறியது பாடத்தின் பிழையல்ல. கற்றல், கற்பித்தல் செயற்பாட்டின், அல்லது அதனை செயற்படுத்த வேண்டியவர்களின் பார்வையில் ஏற்பட்ட குறைபாட்டாலேயே.

இதன் விளைவு க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்த மாணவர்களில் 80%க்கும் அதிகமான மாணவர்கள் கலை. வர்த்தக பிரிவுகளையே தமது உயர்கல்விக்கான நம்பத்தகுந்த பிரிவுகளாக கொண்டு கலவி கற்கின்றனர்.

உண்மையில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் என்ற விடயம் மக்களின் வாழ்வியலுடன் தொடர்புபட்டிருக்க வேண்டும். பொருத்தமான சுற்றாடல் கற்றல் சார்ந்த, புத்தாக்கம் சார்ந்த, நவீன விடயங்களை உள்ளடக்கியதாக அதிகளவு அளப்பரிய விடயங்கைள அறிய வேண்டும் என்ற ஆவலை மாணவர்களுக்கு வழங்கத்தக்க வகையில் ஆனால் குறைந்த விடயங்களை பாடத்திட்டங்கள் (Sylabus) உள்ளடக்கியதாகவும், 70% வீதமான விடயங்கள் செயற்பாடு சார்ந்ததாகவும் இருப்பதே மாணவர்களுக்கு இப்பாடம் தொடர்பான விருப்பத்தை ஏற்படுத்தக்கூடியாக இருக்கும். இதைத் தவிர எதனையும் பகுத்து ஆராய்ந்து பார்க்கும் விஞ்ஞான சிந்தனை மாணவர்களிடையே வளர்க்கப்பட வேண்டும்.

# தெரிந்ததில் இருந்து தெரியாததிற்கு

ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழைகின்றார். அன்று கற்பிக்க வேண்டிய பாடம் அலகு தொடர்பாக ஒரு வாரத்திற்கு முன்னரே பாடக்குறிப்பு எழுதி அதற்கான உபகரணங்கள், முறையியல் போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டு உபஅதிபருக்கு ஊடாக அதிபரின் மேசையில் வைக்கப்பட்டு அதிபரின் கையொப்பத்துடன் அனுமதி எடுக்கப்பட்டு தயாராக இருந்தது. ஆசிரியர் இவ்வளவு ஆயத்தமும் செய்து கொண்டு வந்த அந்த பாடக்குறிப்பு புத்தகத்தை வகுப்பறையில் இருந்த மேசை லாச்சியில் வைத்துவிட்டு... என்ன படிக்க போகிறோம் என மாணவர்களிடையே வினாவுகிறார்.

பாடப்புத்தகத்தை எடுக்கச் சொல்லி பாட அலகை மாணவர்களிடம் இருந்தே கேட்டு பாடப்புத்தகத்தை வைத்தே பாடத்தை கற்பிக்கின்ற செயற்பாட்டிலும் ஈடுபடுகின்றார்.

எனவே அவர் தயாரித்த பாடக்குறிப்புக்கள் என்னவாயிற்று? அதனது பிரயோசனம் தான் என்ன? அவரது கற்பித்தல் உபகரணங்கள் கரும்பலகையும், வெண்கட்டியும், அந்தப் புத்தகமும் தான்.

இத்தகைய செயற்பாடுகள் மாணவர்களுக்கு பாடம் தொடர்பான விருப்பத்தை ஏற்படுத்த உதவமாட்டாது. மாணவர்களுக்கு தெரிந்த விடயங்களில் இருந்து தெரியாத விடயங்களை நோக்கி அழைத்துச் செல்வதே சிறந்த கற்பித்தலாகும். ஆசிரியரின் துணையுடன் உளரீதியான ஆர்வத்துடன் தெரியாத விடயங்கைள தெரிந்து கொள்ள முயல்வதே கற்றலாகும்.

# வாழ்வை வளப்படுத்தும் வாசிப்பு

மனிதன் ஏனைய விலங்குகள், உயிரினங்களில் இருந்து வேறுபடுவது அவனது அனுபவ சிலாகிப்பாலும் படைப் பாற்றலினாலும் ஆகும். படைப்பாற்றல் விலங்குகள் உயிரினங்களிலும் உண்டு. தமது வாழ்வாதாரத் தேவைகளுக்கும், சந்ததி விருத்திக்கும் என கூடுகள் புற்றுக்கள் வாழ்விடங்கள் என பலவற்றை அவை வியக்கவைக்கும் வகையில் சிருஷ்டிக்கின்றன.

ஆனாலும் அந்த சிருஷ்டியை அவை சிலாகிக்கும் வல்லமை கொண்டவையல்ல. அல்லது அந்த சிலாகிப்பு எம்மால் விளங்கிக் கொள்ள முடிந்தவையல்ல. ஆயினும் மனிதனே தனது படைப்பை சிலாகிக்கவும், மகிழவும், பகிரவும் இயலக்கூடிய பகுத்தறிவு கொண்டவனாகின்றான்.

அனுபவ சிலாகிப்பு என்பது படைப்பாற்றலை வெளிப்படுத்துவது மாத்திரமல்ல. அறிவு பூர்வமான விடயப் பகிர்வாகவும் கருதப்படுகின்றது. இங்கு தான் மனிதனின் உயிர்ப்பான தன்மை வெளிப்படுகின்றது. பேச்சுக்கு அப்பால் தொடர்ச்சியாக பேணக்கூடிய வகையில் தொடர்ந்து வருபவர்களுக்கும் பகிரக்கூடிய வகையில் நூல்களை உருவாக்கினான். எனவே நூல்கள் மனிதனின் உயிர்ப்பான தன்மைக்கு சான்றுகள் ஆயின. பேசவும், எழுதவும், வாசிக்கவும். இரசிக்கவும் என அவனது படைப்பாற்றலும் சிலாகிப்பும் மெருகுபட்டன.

மிக நீண்ட கால தொடர்ச்சியான இந்த முயற்சி இன்று வாழ்வின் ஒரு அங்கமாக கலாசாரமாக வடிவெடுத்தது. இந்த வகையில் வாசிப்பு என்பது வாழ்வின் அனுபவங்கள், அறிவை அறிந்துகொள்ள கற்றுக்கொள்ள வழியாகின்றது. நூல்கள் அறிவுச் சுரங்களாகவும், பெட்டகங்களாகவும் மாறின.

இந்த மாற்றம் எத்தகைய தொழில்நுட்ப, மாற்றங்கள் வந்தாலும் மாறப்போவதில்லை. பார்த்தல், வாசித்தல் புலன்நுகர்தல் என்பவை மனிதனுள்ளவும் இருந்தேயாகும்.

வாசிப்பு கட்புலனுக்கூடாக எழுத்துக்களுக்கு பின்னால் இருக்கும் விடயங்களை கற்பனைக்கு இட்டுச் செல்கின்றது. அறிந்துகொள்ள உதவுகின்றது. நல்ல வாசிப்பு என்பது மனிதனின் கற்பனையை சிறக்கவைக்கும். கற்பனை அனுபவம் என்பது படைப்பாற்றலை ஏற்படுத்தும். எனவே படைப் பாற்றலுக்கு நல்ல வாசிப்பு அடிப்படையாகின்றது.

மாணவர்கள் வாசிப்பதன் மூலம் கற்பனையை வளமுடையதாக்கி, படைப்பாற்றலுள்ள மனிதர்களாகவும் நல் விழுமியங்களை பேணக்கூடிய நற்பிரசைகளாகவும் வரமுடியும் காலம் உள்ளவரை மனித வாழ்வை ஒழுங்குபடுத்தக்கூடிய காத்திரமான நல்ல இலக்கியங்கள் நூல்கள் தமிழில் பெருகிக் கிடக்கின்றன. அவை மாணவர்களால் பயன்படுத்தப்பட வேண்டும்.

# அறிவு வெளியின் சுரங்கங்களாக நூல்கள்

21ம் நூற்றாண்டின் உலகம் மிகச்சிறிய கிராமமாக மாறியமைக்கு அல்லது உணரப்படுகின்றமைக்கு தொலைத்தொடர்பு விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியே பிரதான காரணம் என்பது யாவரும் அறிந்ததே. உலகின் மூலை முடுக்குகளில் இடம்பெறும் நிகழ்வுகள் அனைத்தும் அடுத்த நொடியிலேயே வெளிப்படுத்தப்படும் நுட்பம் இவ் அபரிமிதமான வளர்ச்சியின் விழைவேயாகும். ஆனால் இவ்வளர்ச்சி மனிதனின் சிந்தனையில் ஏற்படடது என்பதுதான் இங்கு முக்கியமாக கருத்தில் எடுக்கப்படவேண்டியது.

இச் சிந்தனையும் ஞானவெளிப்பும் கண்களை மூடி தியானிப்பதில் இருந்து மட்டும் பெற்றுவிடமுடியாதது. அறிவுபூர்வமான அனுபவம், கற்பனை, உழைப்பு என்பவற்றில் தங்கியுள்ளது. அவ்வகையில் பல்வேறு விதமான அறிவுத் தொகுதிகளைத் திரட்டி வாக்கியங்களாகத் தரும் நூல்கள் மிக முக்கியமானவை.

சிந்தனைகள் சிந்தித்தவைகளாக மட்டும் அன்றி வாய்வழியாக பாடப்பட்டு கதைகளாக கூறப்பட்டு, ஆற்றுகைகளாக ஆற்றப்பட்டு பின்னரே நூலுருவில் வெளிப்பட முனைந்தன. அறிவை, அனுபவங்களை கற்பனையை, புதிய சிந்தனையை காலத்தை கடந்து கொண்டு செல்லும் சுரங்கங்களாக இந்நூல்களைக் குறிப்பிடலாம். இன்றைய உலகின் வளர்ச்சியடைந்த நாடுகள் யாவுமே நூல்களையும் வாசிப்பையும் மிக கூடுதலாக கருத்தில் எடுக்கின்றன. நூல்களுடன் பழகும் கலாசாரம் சிறுவயது முதலே பிள்ளைகளுக்கு பழக்கப்படுகின்றது.

ஜப்பான் போன்ற நாட்டில் வாராந்தம் வெளியிடப்படும் சிறாக்களுக்கான சித்திரக்கதைப் புத்தகங்களை வாங்கிப் படிப்பதற்காக பெரியவர்களும் வரிசையில் நிற்கும் காட்சியை காணமுடியும்.

தமிழ் மொழியின் இலக்கியச் செழுமை தமிழர் தம் பண்பாடுகள், வாழ்க்கை, வீரம் என்பவற்றின் வரலாறு தமிழிலக்கிய நூல்களுக்கூடாகவே இன்றும் அறியக்கூடியதாக இருக்கின்றன. இதிகாசங்கள், ஐம்பெரும் காப்பியங்கள், திருக்குறள், தொல்காப்பியம் போன்ற இலக்கிய, இலக்கண, காவிய நூல்கள். எமது மக்களின் வாழ்நிலையையும் பெருமிதத்தையும் எமக்கு மட்டுமல்லாது இனிவரும் சந்ததியினருக்கும் வழங்குதல் வேண்டும்........

# அன்பினால் அசையும் உலகம்

"அன்பு" என்ற மூன்றெழுத்துச் சொல், உயிர் என்ற மூன்றெழுத்துச் சொல்லை அர்த்தமுள்ளதாக்குகின்றது. உயிரின் அசைவு அன்பினால் ஏற்பட்டதன்றோ? ஆம் அன்பு இவ் உலகின் உன்னதமான உணர்வு. ஆறறிவு படைத்த மனிதன் முதல் ஐந்தறிவு கொண்ட மிருகங்கள் பறவைகள் வரை படைப்பின் இயக்கமாக, மூலமாக உறவுக்கான தூண்டலாக இருப்பது அன்பு என்ற உணர்வே. தமிழறிந்த சான்றோன் வள்ளுவன் இதையே "அன்பின் வழியது உயிர்நிலை" எனக் குறிப்பிட்டான்.

எல்லா உயிர்களிடத்தும் ஆணும் பெண்ணுமான வேறுபாடுகளை இணைக்கும் சக்தியாக அன்பு என்ற உணர்வு ஈர்ப்பு வெளிப்பட்டது. இலட்சக்கணக்கான இந்திரியங்களின் ஓட்டம் விரைவு சினையுடன் இணைந்து கருவாகிவிட வேண்டும் என்ற உணர்வே இது அன்பின் இன்னும் ஒரு வெளிப்பாடன்றோ, இந்த தூண்டலும் உறவும், முயக்கமும் அதன்வழி ஏற்பட்ட கருவுமே மனிதகுலத்தின் அசைவிற்கு, உயிரினங்களின் அசைவிற்கு ஏன் உலகின் அசைவிற்கு மூலாதாரம்.

தாய் தன் பிள்ளை மீது கொண்ட அன்பு உலகின் மாண்புடைய மக்களை உருவாக்குகின்றது. ஆசான் தன் மாணவன் மீது கொண்ட அன்பின் மிகுதியால் அறிவும் ஆற்றலும் கொண்ட சமுகத்தை படைக்கின்றான். தலைவன் தன் மக்கள் மீது கொண்ட அன்பினால் அச்சமூகம் அமைதியும் சுபீட்சமும் கொண்ட நல்வாழ்வை வாழ தன் வாழ்வையே அர்ப்பணிக்கின்றான். நற்சமூகத்தை உருவாக்குகின்றான். ஆக அன்பு ஆற்றலை வளர்க்கும் பண்பையும் மனஉறுதியையும் ஏன் ஈரத்தையும் ஏற்படுத்தும்.

அன்பு உன்னதமான இலட்சியங்களை உருவாக்கும். இலட்சியங்கள் உலகையே அசைவிக்கும். ஏற்றத் தாழ்வில்லாது எல்லா மனிதர்களுக்கும் உணவும், இருப்பிடமும், அனைத்தும் சமமாக அவர்களின் தேவைக்கு ஏற்ப கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற உன்னதமான சோஷலிச சிந்தனை சக உயிர்களிடத்தே கொண்ட அன்பினாலன்றோ கார்ல்மார்க்ஸ் இற்கும், லெனின் இற்கும் இன்னும் எண்ணற்ற கம்யூனிச தோழர்களுக்கும் தோன்றியது. இலட்சக்கணக்கான மக்கள் இந்த சிந்தனையால் கவரப்பட்டு இணைந்து இயங்கியமை அன்பினால் ஏற்பட்ட அசைவன்றோ.

போதிமாதவன் புத்த மதத்தை போதித்தது வாழ்வின் அவலங்களை கண்டதால் மாத்திரமன்று அவலங்களின் விளைவாக அன்பு செய்வது இயலாமல் போன விரக்தியினாலன்றோ. அங்கும் அன்பின் விளைவாகவே பஞ்சதார்மங்கள் உருவாகின. கொல்லாமையும் புலால் உண்ணாமையும் மனிதர்களிடத்தில் சாத்விகத்தையும் பிற உயிர்களிடத்தே அன்பையும் ஏற்படுத்தவன்றோ உருவாகின.

கொடும் போரில் மரணித்து மௌனமாகிப்போன எம் உறவுகள், ஏதிலிகளாகவும் நடைப்பிணங்களாகவும் போன எம் சொந்தங்கள் இன்றுவரை எல்லாம இழந்தும் மனதில் வைராக்கியத்தை மனஉறுதியை கொண்ட இலட்சியத்தை அணையவிடாது காத்திருப்பது தம் உறவுகள் தமக்கு அன்பு செய்வோம் என்ற நம்பிக்கையிலேயே அவர் தம் துயரால் நாம் துயரடைவது அன்பின் வெளிப்பாடன்றோ.

"அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்,
ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்"

என வள்ளுவர் இதைத்தான் கூறினாரோ.

அன்பினால் அசைவோம்
உலகை அசைவிப்போம்
சக மனிதர்களிடத்தே அன்பு செலுத்துவோம்.

"அன்பு" ஆம் அன்பினை ஆயுதமாக்குவோம். சக மனிதர்களிடத்து அன்பு செய்வொம். அவன் இவன், தமிழன், சிங்களவன், வெள்ளையன், கறுப்பன், ஆசியக்காரர், ஐரோப்பியர், மனிதன், மிருகம், பறவை, விலங்கு என்ற தளைகளுக்கு வெளியே "உயிர்களிடத்து அன்பு செய்தல்" என்ற உன்னதமான உணர்வில் ஒன்றுபடுவோம். நம்மை சுற்றி நாமே போட்ட இறுக்கிய கட்டுக்களில் இருந்து கட்டவிழ்வோம்.

அன்பு செய்வோம், அன்பினால் அசைவோம், ......
ஏனெனில் இது அன்பினால் அசையும் உலகம், ......

கோபம், குரோதம் என்பவற்றினதும், போராயுதங்களினதும் ஆதிக்கம், இவ்வுலகை நிர்மூலமாக்கிவிடும். பிரபஞ்சத்தில் உயிர்வாழ்வுக்குரிய ஒரேயொரு உலகையும் இழந்துவிடுவோம்.

எனவே அன்புசெய்வோம். அன்பினால் அசைவோம்.
எமது சிறார்களிடத்தே அன்பின் வலிமையை மகிமையை கூறுவோம். அன்புசெய்வோம்.

அன்பினால் எம்மைச் சூழவுள்ள சூழலை பாதுகாப்பானதாக்குவோம்.

## அத்தியாயம் நான்கு

# "அனுபவம்"



**ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்கம் உடையானுழை**

(சோர்வு இல்லாத ஊக்கம் நிறைந்த ஒருவனிடத்தே ஆக்கமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழி கேட்டுக்கொண்டு போய்ச் சேரும்)

# அனர்த்தங்களும் வடபுலக் கல்வியில் ஏற்பட்ட தாக்கமும்

இலங்கையின் கல்வி வரலாற்றில் வடபுலத்தின் கல்வி தனித்துவமான ஒன்றாக இருந்தமை யாவரும் அறிந்ததே. ஒரு காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழக வளாகங்களில் பெரும்பான்மை இடங்களை நிரப்பியிருந்த வடபுல மாணவர்கள் படிப்படியாகத் தமது தனித்துவத்தை இழந்தனர். தரப்படுத்தல், தனிச்சிங்களச் சட்டம் இனமோதல்கள், வன்முறை, ஆயுதமோதல், யுத்தம் என்பவையும் இதன் விளைவான தொடர்ச்சியான இடப்பெயர்வும் வடபுலக்கல்வியில் வாழக்கையில், கலாசாரத்தில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

இத்தாக்கங்களில் நீண்டகால அடிப்படையில் வாழ்நிலையில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் வெளிப்படையாக அளவிட்டுக்கொள்ள இயலாததான மறைமுகமான தாக்கங்கள் இன்னும் பல ஆண்டுகளுக்கு வினைத்திறனுடன் செயற்படக்கூடியதாகவும், நேரடியான தாக்கங்கள் வெளித்தெரியக் கூடியதாகவும் உடனடியானதும் விளைவுகளை அளவிடக் கூடியதாகவும் உள்ளது. நேரடியான த்தாக்கங்களாக உயிர் இழப்பு, இடப்பெயர்வு, உடல் ஊனப்படுதல், சொத்தழிவு என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

அரசியல் ரீதியான செயற்பாடுகளாலும், இனக் கலவரங்களினாலும், ஆயுத மோதல்களினாலும் மக்கள் காலத்திற்கு காலம் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்ந்திருக்கின்றனர். இலங்கையில் சுதந்திரத்திற்கு பின்னரான இடப்பெயர்வு 1956, 1958, 1959, 1977, 1983, 1987, 1990 என பெரியதொரு வரலாற்றைக் கொண்டது. குறுகிய காலத்திற்குரிய இடம்பெயர்வாகவும், குறிப்பிட்ட மக்கள் குழுவை கொண்டதாகவும் ஆரம்பத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் பின்னர் நீண்டகால இடப்பெயர்வாகவும் அதிகளவு மக்களின்

பெயர்வாகவும் மாறியது. 1995 இலும் பின்னர் 1998, 2007, 2009களிலும் ஏற்பட்ட இடப்பெயர்வுகளில் இலட்சக்கணக்கான மக்கள் இடப்பெயர்வுக்கு உட்பட்டனர். அதேவேளை இவ்விடப் பெயர்வுகள் உள்நாட்டுக்குள் ஏற்பட்ட இடப்பெயர்வாகவும், பின்னர் புலம்பெயர்ந்து பிறநாடுகளை நோக்கிய இடப்பெயர்வாகவும், மாற்றமடைந்தது. இவ்வாறு இருவகையான இடப்பெயர்வாக இருந்தபோதிலும் இது தமிழர் கல்வியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

* மக்களது வாழ்வாதாரங்கள் தகர்ந்து போனமை.
* வாழ்க்கையில் விரக்தியும் ஆர்வமின்மையும் தோன்றியமை.
* கல்வி, பாரம்பரியம், கலாசாரம் என்பவை சிதைவடைந்தமை.
* குடும்பம், உறவுகள், சமூக இசைவாக்கம் என்பவை உடைந்தமை.
* கல்வி மாற்றங்களை தராது என்ற சிந்தனை வலுவடைந்தமை.

எவ்வாறான இடப்பெயர்வாக இருந்த போதிலும் அதன் தாக்கம் கல்வியிலேயே முதலில் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஏனெனில் இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிகமாக தங்குவதற்கு பாடசாலைகளையே பயன்படுத்தினர். இதனால் இப்பிரதேச மாணவர்களின் கற்றல் செயற்பாடும் முடக்கத்துக்கு உள்ளானது. இதனால் மாணவர்களின் கல்விக்கான நாட்கள் இழக்கப்பட்டன.


1990களில் ஏற்பட்ட இடப்பெயர்வின் தாக்கம் இன்றுவரை இருப்பது நல்ல உதாரணமாகும். வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வில் பாதிக்கப்பட்ட மக்களில் ஏறத்தாள 30% இன்று வரை மீள்குடியேற்றத்திற்கு உட்படவில்லை. 90 கிராமசேவை அலுவலக பிரிவுகளைச்




தரை விரிப்பில் நடைபெற்ற கல்விச் செயற்பாடு
நலன்புரிமுகாம் (செட்டிக்குளம் - 2010)



தரை விரிப்பில் நடைபெற்ற கல்விச் செயற்பாடு
வீரபுரம் நலன்புரிமுகாம் (வவுனியா - 2010)



மரங்களின் கீழ் தரையில் நடைபெற்ற வகுப்புக்கள்.
காமினி வித்தியாலய நலன்புரி முகாம் (வவுனியா 2010)



மரங்களின் கீழ் நடைபெற்ற கல்விச் செயற்பாடு
(வவுனியா 2010)

சேர்ந்த இம்மக்களின் பாடசாலைகளும் மீளத்திறக்கப்படாது வேறு இடங்களிலேயே இயங்கிவருகின்றன. மீளத் திறக்கப்பட்ட பாடசாலைகளும் பிரச்சினைகளையே எதிர்நோக்குகின்றன.

இவ்வாறு இடம்பெயர்ந்து மீளத்திறக்கப்பட்ட பாடசாலையான யா/வீமன் காமம் மகா வித்தியாலய மாணவர்களில் 42% மாணவர்கள் இன்றும் இடம்பெயர்ந்த மக்களுக்கான நலன்புரி முகாம்களிலிருந்தே பாடசாலைக்கு வருகின்றனர்.

2011 ஆண்டில் வலிகாமம் வலயத்தில் 112 பாடசாலைகளில் மேற்கொண்ட ஆய்வு ஒன்றின்படி 1806 மாணவர்கள் தமது தந்தையரையும், 572 மாணவர்கள் தாயாரையும் இழந்துள்ளமை தெரியவந்தது. அதுமட்டுமல்லாது 148 மாணவர்கள் இருவரையும் இழந்தமையும் அறியப்பட்டது. அது மட்டுமல்லாது 434 குடும்பங்கள் விவாக விலக்கு அல்லது பிரிந்து வாழ்கின்றமையும், 380 தந்தையர் மறுமணம் புரிந்துள்ளமையும் கண்டறிப்பட்டது. இத்தகைய பின்னணியில் இக்குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வியில் அக்கறை காட்டுவதென்பது உண்மையில் பிரயத்தனம் நிறைந்த ஒன்றாகவே இருக்கும்.

90 களில் ஏற்பட்ட இடப்பெயர்வும், பாடசாலைகள் மூடப்பட்டமையும் பாடசாலைக் காலங்கள் அல்லது நாட்கள் இழக்கப்பட்டமையும் மாணவர்களது ஒழுங்கற்ற வருகையும், இடைவிலகலும் மாணவர்களுக்கான கல்விச் செயற்பாட்டில் நெருக்கடியை ஏற்படுத்தியது.

இதனையடுத்து முகாம்கள், இடம்பெயர்ந்து வேறு இடத்தில் இயங்கிய பாடசாலைகள், பொதுவிடங்கள் என இழந்த கல்வியை மீட்டெடுக்கும் கற்றல் செயற்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது. பாடசாலை வரையறைகளைக்

கடந்ததான கல்வி வழங்கல் செயற்பாடு துரிதமாக மேற்கொள்ளப்பட்டது.

மாலைநேர வகுப்புக்கள், மாணவர்கள் செறிவாக இருந்த இடங்களில் நடாத்தப்பட்டன. மின்சாரம் அறவே துண்டிக்கப்பட்ட காலப்பகுதி ஆகையினால் பொது நிறுவனங்கள், செஞ்சிலுவைச் சங்கம் போன்றவற்றின் உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு இரவு நேரங்களில் மாணவர்கள் கற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் அதன் பௌதீக வழங்களைப் பயன்படுத்தி வெவ்வேறு நேரங்களில் வேறு பாடசாலைகள் நடைபெற்றன. பலவிடங்களில் மாணவர்கள் தொடர்ச்சியான ஊரடங்குச் சட்டத்தின் காரணமாக வீடுகளை விட்டு வெளியில் வரமுடியாது இருந்த நேரங்களில் அவ்வீடுகளிலேயே வகுப்புக்கள் நடத்தப்பட்டன. கிராமங்களில் ஆசிரியர்கள் இணைந்து மாணவர்களை இணைத்து இல்ல மையக்கற்றல் முறை மூலம் கல்விச்செயற்பாட்டை முன்னெடுத்தனர். இவ்வாறு எதிர்நோக்கிய நெருக்கடி நிலைக்குள்ளும் ஆசிரியர்களின் இடைவிடாத அர்பணிப்புடன் பல்தரக்கற்பித்தல் உத்திகளுடன் இல்லமையக்கற்றல், செயலட்டை முறைக்கற்றல், துரித கற்றல் செயற்பாடு, இழந்த கல்வியை மீளப்பெறற் செயற்பாடு என பல முறைகளையும் கைக்கொண்டு கல்வி முன்னெடுக்கப்பட்டது.

1995 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வானது யாழ் குடா நாட்டின் மேற்கு பிரதேச மக்களை முற்று முழுதாக தென்மராட்சி, வடமராட்சி பிரதேசங்களை நோக்கியும் பின்னர் கணிசமான அளவு மக்களை பெருநிலப்பரப்பு நோக்கியும் நகர்த்தியது. வலிகாமம், யாழ்ப்பாணம், தீவக வலங்களைச் சேர்ந்த 290 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டு தென்மராட்சியிலும், வடமராட்சியிலும்

கிளிநொச்சியிலும் இயங்கியிருந்தன. அவ் வருடத்துக்கான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை தடைப்பட்டு மீளவும் நடாத்தப்பட்டது. 1996 ஆம் ஆண்டு இரண்டு பரீட்சைகள் நடாத்தப்பட்டன. இத்தகைய இடப்பெயர்வினால் மாணவர்கள் மாத்திரமல்லாது ஆசிரியர்களும், அதிபர்களும், கல்வியாளர்களும் கூட இடம்பெயர்ந்து நாட்டின் பல பகுதிகளை நோக்கிசென்று தமது வாழ்விடங்களை மாற்றிக்கொண்டனர். உதாரணமாக வவுனியா தெற்கு வலயத்தில் உள்ள தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் மாணவர் தொகை 1500இல் இருந்து 4500 ஆக அதிகரித்தது. 52 ஆசிரியர்கள் தொகை 170 ஆக அதிகரித்தது.

இதுபோல் வவுனியா, திருகோணமலை, கிளிநொச்சி போன்ற நகரங்களின் குடித்தொகையும் அதிகரிப்பைக் காட்டியது. இவை தற்காலியமானது என அவ்வேளை கூறப்பட்டாலும் கணிசமான மக்கள் அவ்விடங்களிலேயே இன்றுவரை வாழ்கின்றமை கவனித்தக்கது. கல்வியைப் பொறுத்தவரையில் ஆசிரியர் பரம்பல் சீர்செய்ய முடியாத நிலைமைக்கு சென்றது. கணித, விஞ்ஞான, ஆங்கில ஆசிரியர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியது.

2008 ஆம் வருடம் யுத்தம் முனைப்படைந்தமையினை தொடர்ந்து மடுவில் இருந்து கிளிநொச்சி வரை தொடர்ச்சியான இடப்பெயர்வு நிகழ்ந்து பின்னர் கிளிநொச்சியில் இருந்து முல்லைத்தீவு முள்ளிவாய்கால் வரை சென்று பாரிய இடப்பெயர்வாக வவுனியாவில் நிறைவடைந்த இடப்பெயர்வைக் குறிப்பிட முடியும். ஏறத்தள 80000க்கு மேற்பட்ட மாணவர்கள் இடம்பெயர்ந்து முற்றிலுமாக கல்வியை, கல்விக்கான சந்தர்ப்பத்தை இழந்திருந்தனர். கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், மடு ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த 397 பாடசாலைகள் பகுதியளவாகவோ முற்றாகவோ யுத்தத்தில் சேதமடைந்தது. ஏறத்தாள 19000 முன்பள்ளிச் சிறார்களும்

முன்பள்ளி அனுபவங்கள் அற்று இடப்பெயர்வுடன் இணைந்து கல்வியை இழந்தனர்.

யுத்தத்தின் இறுதியில் யுத்த வலயத்துக்கு வெளியில் வந்தடைந்த 86000க்கு மேற்பட்ட தரம் 1 முதல் 13 வரையான வகுப்புகளைச் சேர்ந்த இம்மாணவர்கள் வவுனியா செட்டிக்குளம் மெனிக் முகாம் உட்பட 73 தற்காலிக பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டு கல்வி வழங்கப்பட்டது.


| மாவட்டம் | நலன்புரி முகாம் | பாடசாலை | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 02 | 06 | 17,805 |
| வவுனியா | 14 | 61 | 63,378 |
| புல்மோட்டை | 02 | 06 | 2,000 |
| மன்னார் | 04 | - | 466 |
| மொத்தம் | 22 | 73 | 85,000 |

2009 நவம்பர் மாதம் முதல் 2010 ஜுலை மாதம் வரையான காலப்பகுதியில் ஏறத்தாள 40,731 மாணவர்கள் தமது முன்னைய நிரந்தரப் பாடசாலைகளில் கல்வி கற்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டன. 287 பாடசாலைகள் துரிதமாக மீள்கட்டுமானத்திற்கு பகுதியளவிலாவது உட்படுத்தப்பட்டு மீளத்திறக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

மெனிக் முகாம் போன்ற நலன்புரி முகாம்களில் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இம்முகாம்களில் ஆரம்பத்தில் நிலத்தில் தரைவிரிப்புக்கள் விரிக்கப்பட்டு வகுப்புக்கள் நடத்தப்பட்டன. முகாம்களில் இருந்த




அனர்த்தங்களுக்குள்ளும் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடும் மாணவர்களும் ஆசிரியரும் (வன்னி)




தற்காலிக முகாமிலும் இடையறாது நடைபெற்ற கல்வி (கிளிநொச்சி)



யுத்தத்தில் சிதைவடைந்த கட்டடத்திலும்
கல்விச் செயற்பாடு நடைபெறல் (கிளிநொச்சி 2011)



மரங்களின் கீழ் பாம்பு புற்றுகளின் அருகில் இடையறாது
நடைபெற்ற கல்வி (கிளிநொச்சி 2011)



மரங்களின் கீழ் நடைபெற்ற இடைநிலைக் கல்விச் செயற்பாடு (வவுனியா - 2010)



மேசையின் மேல் கைக்குழந்தையினை உறங்க வைத்து விட்டு கற்பித்தலில் ஈடுபடும் அர்பணிப்புள்ள ஆசிரியர்

இடம்பெயர்ந்த ஆசிரியர்களே இவ்வகுப்புக்களை நடத்தினர். பின்னர் வவுனியா வலயத்தைச் சேர்ந்த ஏனைய பாடசாலைகளில் இருந்து ஆசிரியர்கள் முகாம் பாடசாலைகளில் கற்பிக்க என அனுப்பப்பட்டனர்.

இக்காலப்பகுதியில் வவுனியா இடம் பெயர்ந்தோருக்கான முகாம்களில் இருந்த 590 ஆசிரியர்களுக்கு உளவள துணைச் செயற்பாடுகளும் ஆலோசனைகளும் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை 10,000 மாணவர்களுக்கு விசேடமான உளவள வழிகாட்டல்களும் ஆலோசனைச் சேவையும் வழங்கப்பட்டன. அதேபோன்று யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை ஆகிய இடங்களில் இருந்த முகாம்களிலும் ஏறத்தாள 7000 மாணவர்களுக்கும் 293 ஆசிரியர்களுக்கும் உளவள வழிப்படுத்தல்களும் ஆலோசனையும் வழங்கப்பட்டது.

பாடசாலைகள் படிப்படியாக ஓரளவு மீளத்திறக்கப்பட்ட பின்னர் 2010 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் யுத்த வலயத்தில் இருந்து முகாமிற்குள் வந்து பின்னர் பாடசாலைக்கு அனுப்பப்பட்ட மாணவர்களின் கல்விநிலை, அத்தியாவசிய தேர்ச்சி நிலை 1½ வருடம் முதல் 3 வருடம் வரை பின்னடைவான தேர்ச்சி நிலையில் இருப்பதை உணர்த்தியது.

யுனிசெவ் நிறுவனத்தின் அநுசரணையுடன் கல்வியமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்யில் 150,000 மாணவர்கள், ஆய்வுக்குப்படுத்தப்பட்டனர். பின்னர் இம்மாணவர்களுக்கான கல்வியிழப்பை ஈடுசெய்யும் வகையிலான "துரிதகற்றல் செயற்றிட்டம்" அறிமுகம் செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்டது.

| முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட பாடசாலைகளின் மாணவர்கள் தொடர்பான உ ள்ளக ஆய்வு. | |
|---|---|
| ஷெல் துண்டுகள் சன்னங்கள் புதையுண்டு சிகிச்சைக்கு உட்பட்டுள்ளவர்கள் | 220 |
| தாயை இழந்த மாணவர் எண்ணிக்கை | 965 |
| தந்தையை இழந்த மாணவர் எண்ணிக்கை | 768 |
| இருவரையும் இழந்த மாணவர் எண்ணிக்கை | 265 |

**விசேட தேவையுடைய மாணவர்களின் எண்ணிக்கை வடமாகாணம் – 2013**

| **வலயம்** | **எண்ணிக்கை** |
|---|---|
| யாழ்ப்பாணம் | 746 |
| வலிகாமம் | 1090 |
| தென்மராட்சி | 34 |
| வடமராட்சி | 89 |
| தீவகம் | 466 |
| கிளிநொச்சி | 842 |
| மன்னார் | 611 |
| மடு | 278 |
| துணக்காய் | 298 |
| முல்லைத்தீவு | 655 |
| வவுனியா வடக்கு | 242 |
| வவுனியா தெற்கு | 484 |
| நபீல்ட் பாடசாலை | 166 |
| மொத்தம் | 6001 |

இக்காலப்பகுதியில் வடமாகாணத்தில் மேற்கொள்ளப் பட்ட கல்விச் செயற்பாடுகள் அபிவிருத்தியை நோக்கியதாக இருக்கவில்லை. அடிப்படை அமைப்பை சரி செய்வதாகவே இருந்தது. அதற்காகவே கல்வி அதிகாரிகளும், நிர்வாக அதிகாரிகளும் இரவுபகல பாராது செயற்பட்டனர். அவை வருமாறு:

* அழிவடைந்த பாடசாலை கட்டடங்கள் மீளமைத்தல்.
* மாணவர்களுக்கு தற்காலிக கொட்டகைகளிலேனும் கல்வி வழங்க ஏற்பாடு செய்தல்.
* யுத்த அனர்த்த மனநிலையில் இருந்த மாணவர்களை கல்வி கற்பதற்கான மனநிலைக்கு மீளச்சுதாகரிக்கச் செய்யும் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
* ஆசிரிய வளத்தை பகிர்தல், மீள்பரம்பல் செய்தல், சீர்செய்தல்.
* பாடப்புத்தகங்கள், சீருடை, தளபாடங்கள், உணவு, நீர்வசதி போன்ற கற்றல் உபகரணங்கள் தொடர்பாகவும் அடிப்படை வசதிகள் தொடர்பாகவும் கிடைப்பதற்கு பாடுபடல்.
* இழக்கப்பட்ட பாடசாலைக் காலங்களை சீர்செய்வதற்கு ஏற்றவகையில் இழந்த கல்வியை மீளக்கிடைக்கச் செய்யும் வழிகளை ஆராய்தல், துரித கற்றல் செயற்பாட்டை முன்னெடுத்தல்.

யுத்த காலத்தில் வாழ்க்கையின் நிலையற்ற தன்மை மனங்களில் எதையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கை ஏற்படுத்தி விரக்தி நிலைக்கு இட்டுச்சென்றிருந்தது. இந்நிலைமை இன்றும் மாணவர்களிடம், இளைஞர்களிடம் காணப்படுவதால் ஆர்வம், ஒழுக்கம், விழுமியங்களை கைக்கொள்ளும் தன்மை

என்பவையும் படைப்பாக்கமும் நலிவடைந்துள்ளமை. சீர்செய்ய வேண்டிய பிரதான பணியாக உள்ளது. அதுமட்டுமல்லாது கீழ் வரும் விடயங்களும் சீர்செய்ய வேண்டிய விடயங்களாகவே உள்ளன.

1. நீண்டகால நோக்கமற்று குறுகிய திருப்தியை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளில் முனைப்பு காட்டுதல்.

2. பணிப்புக்களுக்கு மட்டுமே இயங்கும் தன்மை காணப்படுதல்.

3. இருப்பதை பராமரித்தல், பாதுகாத்தல் என்பதற்கப்பால் அபிவிருத்தி பற்றிய விரிசிந்தனை ஏதும் இல்லாதிருத்தல்.

4. நிலைமையினை சீர்தூக்கி பார்த்து முடிவெடுக்கும் தன்மை காணப்படாமை.

5. நெருக்கீடுகள், அழுத்தங்கட்களுக்குள் இருந்து மீளாது செயற்படல்.

6. குழு உணர்வு இல்லாது, குழுவாக செயற்படாது தனித்து இயங்கமுனைதல்.

7. எதிர்காலம் பற்றிய ஆர்வம், பிரக்ஞை காணப்படாமை.

8. சட்டம், ஒழுங்கு பற்றிய மேன்மையான எண்ணம் காணப்படாமை

9. பெறுபேறுகள், அடைவுகள் என்பதிலான நாட்டம் இல்லாது இருத்தல்.

மேற்படி நிலமைகள் யுத்தம் போன்ற அனர்த்தங்கள் நிகழ்ந்த எல்லாவிடங்களிலும் ஏற்பட்ட ஒன்றே. ஆயினும் துரிதமான மீண்டெழும் செயற்பாடுகள் மூலம் இழந்த கல்வியை வாழ்க்கையினை சீர்செய்யவேண்டியது இத்துறை சார்ந்தவர்களின் தலையாய கடனாகும். அவசரநிலைக் கல்விச் செயற்பாடுகள் பற்றிய அறிவும் செயற்திறனும் ஏனைய நாடுகள் தொடர்பான அனுபவமும் இதற்கு துணைசெய்யும்.

வடமாகாணத்தை பொறுத்தவரை ஆசிரியர்களும், அதிபர்களும், கல்வியதிகாரிகளும் ஏனைய துறைசார்ந்தவர்களும் வினைத்திறனுடன் தொடர்ச்சியாக மேற்கொண்ட செயற்பாடுகளின் விளைவாக ஒன்பது மாகாணங்களில் ஒன்பதாவது நிலையில் இருந்த வடமாகாணத்தை இன்று ஆறாவது நிலைக்கு கொண்டுவந்துள்ளனர்.

இது கல்விச் செயற்பாடு சரியான வழித்தடத்தில் செல்கின்றது என்பதற்கான சான்றாக அமையும். இது இலகுவானது மட்டுமல்லாது போதுமானதும் அல்ல. இன்றைய நவீன உலகிற்கு பொருத்தப்பாடான தேர்ச்சிகொண்ட விழுமியங்கள், பாரம்பரியங்கள் தொடர்பில் அக்கறையுள்ள நற்சமூகத்தை உருவாக்கும் வகையில் கல்வி இலக்குகள் அடையாளம் காணப்பட்டு இவற்றை நிறைவு செய்யும் வகையில் பாடசாலைச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.



நூலாசிரியர் பற்றி ........

முத்து இராதாகிருஷ்ணன் தமிழில் சிறுகதை, நாடகம், சிறுவர் இலக்கியம், கல்வியியல், ஓவியம் என துறைசார்ந்த கட்டுரைகளையும், படைப்புக்களையும் எழுதி வரும் கல்வி நிர்வாகச் சேவையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியாவார்.

கற்றல் கற்பித்தல் தொடர்பாகவும் சிறுவர்களின் சுயாதீனம், சுதந்திர செயற்பாடு பற்றியும் ஆழமான புரிதல்களையும் மனிதத்தையும் நேசிக்கும் பண்பையும் கொண்ட பன்முக ஆழுமை பொருந்தியவர். தமிழார்வம் மிக்கவர். இவரது சிறுகதையொன்று தமிழ் மாணவர்களுக்கான தமிழ்பாடப்புத்தகத்தில் இடம்பெற்றிருப்பது இவரது சிறப்பைக் குறிப்பதாகும்.

பேராசிரியர்.கலாநிதி. ஏ சண்முகதாஸ்



ISBN 978955989174
9 789559 891741

Evergreen Printers